

கல்கி
KALKI
1.4.1962
30 காசு

பிலவ, பங்குனி 19

கல்கி

ஏப்ரல் 1, 1962

பொருளடக்கம்

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



மலர் 21 | தமிழ்த்திரு நாடுதன்னைப்—பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் | இதழ் 35

தி. மு. க.வும் நேருஜியும்

திராவிட நாட்டுப் பிரிவினையைக் குறித்து ராஜாஜி வெளியிட்ட கருத்துக்களைப் பலர் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். அப்படியே சரியாகப் புரிந்து கொண்டிருந்தாலும் வேண்டுமென்றே திரித்துத் தவறாக விளக்குகிறார்கள். தேசத்தைத் துண்டாடும் சக்திகளுக்கு அவர் ஆதரவு அளிப்பதாகப் பிரதம மந்திரி அவர்கள் உட்படப் பலர் நேரடியாகவும் மறைமுகமாகவும் தாக்கியிருக்கிறார்கள்.

ராஜாஜி சொன்னதென்ன ? சின்னஞ் சிறியதொரு பிரதேசமானாலும் கூட—தனித்தியங்க இயலாத பகுதியானாலும் கூட அந்தப் பிரதேச மக்கள் பூரண சுதந்திரம் வேண்டும் என்று ஆசைப்படுவதோ அல்லது சொல்லுவதோ அதர்மம் ஆகாது ; வெட்கப் படவேண்டிய விஷயமும் ஆகாது ; ஆயினும் அந்த ஆசை நஷ்டத்துக்குக் காரணமாகும். பிரிவினையானது வட நாட்டார் தென்னாட்டார் இருபாலாருக்கும் தீமை பயக்கும். தவிர இந்த வேண்டுகோள் காரிய சாத்தியமற்றதுமாகும். இவ்வாறெல்லாம் மிகத் தெளிவாகக் கூறி இருக்கிறார் ராஜாஜி. தி. மு. க.வின் உணர்ச்சியானது தேசத்தைத் துண்டாடும் மார்க்கத்தில் செயல்படுவதற்கு அவர் சம்மதமளிக்கவில்லை என்பது வெள்ளிடைமலை. தீய சக்திகளுடன் அவர் உறவாடுகிறார் என்று இனியாவது காங்கிரஸ்காரர்கள் பொய்ப் பிரசாரம் செய்யாமலிருப்பார்களாக !

திராவிட முன்னேற்றக் கழகத்தினரின் நாட்டுப் பிரிவினைக் கொள்கையைச் சமாளிப்பது எப்படி என்பதே இப்போது தேச ஐக்கியத்தில் அக்கறையுள்ள யாவரும் சிந்திக்க வேண்டிய விஷயமாகும். ஆத்திரப்பட்டு தி. மு. க.வினரைத் தேசத்துரோகிகள் என்று தூற்றுவது ஐக்கியத்துக்கு ஒருகாலும் வழி செய்யாது என்பதே ராஜாஜியின் கருத்து.

'போர் மூண்டாலும் சரி ; போர் புரிவோமே அன்றி, நாட்டைத் துண்டுபோட இசைய மாட்டோம்' என்று நேரு அவர்கள் கர்ஜனை புரிந்திருக்கிறார். இந்தக் கர்ஜனை கோவாவில் வெற்றிபெற்ற வேகத்தின் எதிரொலி என்றுதான் தோன்றுகிறது. தனித் திராவிட நாட்டுக் கோரிக்கைக்குக் காரணம் இந்நாட்டு மக்கள் எல்லோரும் ஒரே இனத்தவர் என்ற ஒருமை உணர்வு இல்லாததுதான். அந்த ஒற்றுமை மனப்பான்மையை ராணுவத்தின் மூலம் நிலைநாட்ட முடியும் என்று பிரதமர் அவர்கள் கருதுவாரானால் அதைவிடப் பேதைமை வேறு இருக்க முடியாது.

தமிழகம் மட்டும் தனித்தோ, அல்லது ஆந்திரம், கர்நாடகம், கேரளம் ஆகியவற்றுடன் சேர்ந்தோ இன்றைய இந்தியாவிலிருந்து பிரிந்துபோகும் ; தனியரசாக வாழும் என்பது கனவிலும் எண்ணிப் பார்க்க முடியாத கற்பனையே ஆகும். இதனை ராஜாஜி மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வந்திருக்கிறார் ; இப்போதும் வலியுறுத்துகிறார். ஆனால் இந்தக் கோரிக்கையை முறியடிப்பதற்குக் கோபாவேசமும், யுத்த மிரட்டல்களும் உதவா என்பதையும் அவர் வற்புறுத்திக் கூறுகிறார். காரண காரியங்களை எடுத்துக் காட்டியும், விவாதத்தின் மூலமும் தி. மு. க. வினரைத் தாமாகவே அவர்களது பிரிவினைக் கொள்கையைக் கைவிடுமாறு செய்வதுதான் விவேகமான முறையாகும் ; அதுவே நாட்டுமக்களிடையே பரஸ்பரமான ஐக்கிய உணர்வை ஏற்படுத்தக் கூடியதுமாகும். அன்பு வழியில், அஹிம்சை வழியில் ஒற்றுமைக்கு அடிகோல வேண்டும் என்று ராஜாஜி கூறுவதைத் திரித்துக் கூறி அவர் ஒற்றுமையைக் குலைக்கும் சக்திக்கு ஊக்கமளிப்பதாகப் பொருள் தருவது அநியாயமாகும்.

பலாத்காரத்தின் மூலம், வெடிகுண்டு களும் துப்பாக்கிகளும் உபயோகித்து ஆங்கிலேயர்களை இந்தியாவிலிருந்து துரத்தி, விடுதலை பெறவேண்டும் என்று பல இளைஞர்கள் துடிதுடித்துக் கொண்டிருந்த காலத்தில் காந்தியடிகள் எந்த உபாயத்தைத் தேர்ந்தெடுத்தாரோ, அதனையேதான் இன்று ராஜாஜி பின்பற்றுகிறார். காந்தியடிகள் அந்த இளைஞர்களைத் தோத்திரம் செய்து, அவர்களுடைய தேசபக்தியையும் உயரிய நோக்கத்தையும் புகழ்ந்து பேசி, அவர்களையே அன்பு வழிக்குத் திருப்பினார். இந்த நோக்கத்துடன் காசி வித்தியா பீடத்தில் காந்திஜி பேசியபோது ஸ்ரீமதி பெஸண்ட் அம்மையாரும் இன்னும் பல பெரியோர்களும் மேடையினின்று இறங்கி வெளியேறிவிட்டார்கள். காந்தியடிகள் பேசியதைத் தவருகப் பொருள் கொண்டு கூட்டத்திலிருந்து கோபாவேசத்துடன் வெளியேறி விட்டார்கள். பின்னர்தான் நாடு காந்தியடிகளின் உண்மைக் கருத்தை உணர்ந்தது. அது போலவே இப்போது ராஜாஜியின் நோக்கத்தைத் தெரிந்து கொள்ளாமல் அவர் பேரில் இன்றைய ஆட்சியாளர்கள் சீறி விழுகிறார்கள்.

நாட்டு மக்களில் ஒரு பகுதியினருக்கு எரிச்சலூட்டும் செயல்களைப் புரிந்து விட்டு, அவர்கள் கிளர்ந்தெழும் போது, அவர்களுடைய எதிர்ப்பு உணர்ச்சியைப் பலாத்காரத்தால் நசுக்குவோம் என்று கூறுவது நாட்டுக்கு ஒருபோதும் நன்மை பயக்காது. அந்த எதிர்ப்பின் மூல காரணத்தைப் புரிந்து கொண்டு அதனை நயமான, நேசப்பான்மையினால் மாற்ற வேண்டியதே முறை. சீற்றத்துக்குப் பதில் விவேகத்தையும், பட்சபாதத்துக்குப் பதிலாகப் பரிவையும் காட்டி மக்களின் இதயங்களை வெல்ல முயல வேண்டும்.

தி.மு.க.வானது திராவிடக் கழகத்திலிருந்து உண்டான கிளைக் கழகம். இந்தக் கழகங்களின் நோக்கங்கள் எது வாயினும் பெரியார் அவர்களுடைய பிரசாரத்தின் பயனாக உண்டான ஜாதி வெறுப்பும் வேற்றுமையுமே இவைகளின் மூலதனம். இதை மனத்தில் வைத்துக் கொண்டு தேசத்தில் ஒற்றுமையும் நல் உறவும் உண்டாவதற்கு வழி தேட வேண்டும். ராணுவ பலத்தைப் பற்றிப் பேசலாகாது. பெரியாருடைய மனப்பான்மையானது காங்கிரஸில் தற்போது பணி செய்யும் பலர் உள்ளத்திலும் இடம் கொண்டு செயல் படுகிறது. இதை நீக்குவதற்குப் பதில் பெரியாரின் உறவைச் சென்னை காங்கிரஸார் இன்னமும் பாராட்டி வருகின்றனர்.


பதவிகள் கொள்ளை போகின்றன!

தேர்தலுக்குப்பின் ராஜ்யங்களில் மந்திரிகள் சபை அமைக்கப்படும் போக்கைப் பார்த்தால், இவற்றை மந்திரிகள் சபை என்று அழைப்பதற்குப் பதிலாக, ''மந்திரிகள் சைன்யம்'' என்று கருதுவது தான் பொருத்தமாகவிருக்கும்போலிருக்கிறது. ஒவ்வொரு ராஜ்யத்திலும் மந்திரிகளின் எண்ணிக்கை வரம்பின்றிப் பெருகியிருக்கிறது. மேற்கு வங்காளத்தில் 37 பேர் அமைச்சர் குழுவில் இடம் பெற்றுள்ளனர்; 90 காங்கிரஸ்காரர்களே உள்ள பஞ்சாப் ராஜ்யத்தில் முப்பது பேர்கள் கொண்ட மந்திரி சபையை ஸர்தார் கெய்ரான் அமைத்திருக்கிறார்; உத்தரப் பிரதேசத்தில் 43 பேர்கள் கொண்ட மந்திரி சபையைத் திரு குப்தா நியமித்திருக்கிறார். பீஹாரில் 22 பேர் மந்திரிகள்.

இவ்வாறு மந்திரி சபை விரிவடைவதற்குக் காரணம் காங்கிரஸ் மேலிடத்திலிருந்து ராஜ்ய முதல் அமைச்சர்களுக்குக் கிடைத்த தாக்கீதும், உள்துறை அமைச்சர் திரு லால்பகதூர் சாஸ்திரியிடமிருந்து பெற்ற அனுமதியும்தான். காங்கிரஸ் கட்சி [தேர்தலில் வெற்றி பெற்றாலும்] பொதுவாக அதன் வலிமை குன்றிவிட்டது என்பதாலும், பல இடங்களில் காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே பூசல்கள் அதிகரித்து விட்டதாலும், எதிர்ப்புச் சக்திகள் தலைதூக்க ஆரம்பித்து விட்டதாலும், அதிருப்தி அடைந்தவர்களைப் பக்கபலமாக அணைத்துக் கொண்டு மந்திரி சபைகளை அமைத்துக் கொள்ளும்படி மேலிடத்து ஆலோசனை. இதை ஓர் அரிய வாய்ப்பாகவே பயன்படுத்திக் கொண்டு விட்டனர் அந்தந்த ராஜ்ய முதல் அமைச்சர்கள்.

கட்சிப் பூசல்களுள்ள ராஜ்யங்களில் மட்டும்தான் மந்திரி சபை விரிவடைந்துள்ளது என்று எண்ண வேண்டாம். எதிர்ப்பும் கட்சிப் பூசல்களும் இல்லாத மகாராஷ்டிர ராஜ்யத்தில் மந்திரிகளின் எண்ணிக்கை 26-லிருந்து 31-ஆக உயர்ந்துள்ளது. அஸ்ஸாம் ராஜ்யத்தில் கூட மந்திரிகளின் எண்ணிக்கை 12-லிருந்து 20-ஆக வளர்ந்திருக்கிறது. மற்ற ராஜ்யங்களிலும் மந்திரிசபைகள் சங்கப் பலகைபோல் விரிந்துகொண்டே

இருவரும் சேர்ந்து புதைத்து விடுவார்களா?



போகும்போது, தாங்கள்மட்டும் பழைய நிலைமையிலேயே ஏன் இருக்க வேண்டும் என்று அவர்கள் நினைத்திருக்கலாம்.

மந்திரி செய்ய வேண்டிய கடமைகள் வேறு; நிரந்தர உத்தியோகஸ்தர்கள் ஆற்ற வேண்டிய கடமைகள் வேறு. தினசரி நடைபெற வேண்டிய நிர்வாகத்தில் மந்திரிகள் பிரவேசிக்கலாகாது என்கிற நிபந்தனையை நடைமுறையில் அநுசரித்தால் இத்தகைய மந்திரிப் பெருங்கூட்டங்களுக்கு அவசியம் இராது. மந்திரிகளின் எண்ணிக்கை அதிகரிப்பதால் சம்பளம் என்றும்; படிகள் என்றும், பிரயாணச் செலவுகள் என்றும், ஒவ்வொரு மந்திரிக்கும் செலவுகள் ஏறிக் கொண்டே போகாதா? இந்த அதிகப் படி செலவுகளைத் தாங்குபவர்கள் வரி செலுத்தும் மக்கள்தானே! ஜனநாயக முறையில் மக்கள் விரும்புவது குறைந்த செலவில் நல்ல நிர்வாகம். காங்கிரஸ் கட்சியினர் மந்திரி சபைகள் அமைக்கும் விதத்தைப் பார்த்தால், மக்களுக்கு இப்படிப்பட்ட நிர்வாகம் கிடைக்காது என்றே எண்ணத் தோன்றுகிறது.

புது வரிகள் வருகின்றன!

இந்திய அரசாங்கம் அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுக் கணக்கைச் சமர்ப்பித்திருக்கிறது. அதன்படி வரவுக்கு மிஞ்சிய செலவு ஏற்படுவதால் 63.46 கோடி ரூபாய் துண்டு விழுகிறது என்று கணக்கு கொடுத்துள்ளது.

மத்திய அரசாங்கம் மட்டும்தான் இந்த நிலையில் இருக்கிறது என்று நினைத்துவிட வேண்டாம். ராஜ்ய சர்க்கார்களும் இதே முறையில்தான் பஞ்சப் பாட்டுப் பாட ஆரம்பித்திருக்கிறார்கள்.

ஆந்திரப் பிரதேசத்தின் வரவுசெலவுக் கணக்கில் ரூ. 213.07 லட்சம் துண்டு விழுகிறதாம். மைசூரில் ரூ. 322.63 லட்சத்துக்குப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறதாம். குஜராத் ராஜ்யத்தில் 95 லட்சம் துண்டு விழுகிறதாம்.

பல துறைகளிலிருந்து கிடைக்கக் கூடிய வருமானம் வருஷந்தோறும் அதிகரித்துக் கொண்டே போனாலும் பாதுகாப்புச் செலவுகளும் மற்ற இனச் செலவுகளும் கூடவே உயர்ந்து விட்டன. பற்றாக்குறையை நிறைவு செய்யப் புது வரிகள் விதிக்க வேண்டும் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. ஏற்கனவே வரிச் சுமையினால் தவித்துக் கொண்டிருக்கும் மக்களுக்கு மேலும் வரிகள் விதிக்கப்படப் போகின்றன என்பதைக் கேட்டால் பீதியே உண்டாகும். ஏனெனில், நேர்முக வரி விதிப்புக்கு

அதிக இடமில்லை என்றும், மறைமுக வரிகள் மூலமே பெரும்பாலும் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளவேண்டும் என்றும் பொருளாதார வல்லுநர்களும், தொழிலதிபர்களும் அடிக்கடி சொல்லி வருகிறார்கள். மேலும் அறுபத்துமூன்று கோடி ரூபாய்க்கு மத்திய சர்க்கார் மறைமுக வரிகள் விதிப்பதனால் ஏழைகளைப் பீடித்து வரும் விலைவாசிகளின் நிலை எப்படியிருக்கும் என்று எண்ணிப் பார்க்கவே துணிவு பிறக்கவில்லை. திட்டங்களை நிறைவேற்றி யாகவேண்டும் என்ற பரபரப்பும் வேகமும் தோன்றத் தொடங்கி விட்டன. ஒவ்வோர் ஆண்டும் செல்லச் செல்ல வரிகளின் கொடுமையும் அதிகரித்துக் கொண்டே போகும் என்பதற்கான அறிகுறிகள் இப்பொழுதே தோன்ற ஆரம்பித்து விட்டன.

காங்கிரஸ் ஆட்சியைப் பதவிக்கு அனுப்பி வைத்ததன் பலனை இவ்வளவு சீக்கிரமாகவே அனுபவிக்க வேண்டி வரும் என்று வாக்காளர்கள் நிச்சயமாக எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்.

என்ன சேதி?

எதேச்சாதிகாரப் போக்கு

பிரதமர் நேருஜி பத்திரிகை நிருபர்களிடையே சுதந்திரக் கட்சியைப் பற்றிச் சமீபத்தில் பேசியதிலிருந்து அவர் கலப்படமற்ற எதேச்சாதிகாரவாதியாகவே திகழ விரும்புகிறார் என்று தோன்றுகிறது.

இதற்கு முன்பெல்லாம் தாம் ஜனநாயகவாதி என்றும், நல்ல எதிர்க் கட்சி உருவாவதில் தமக்கொரு ஆட்சேபமும் இல்லை என்றும், அதனை வரவேற்கத் தயாராக இருப்பதாகவும்கூடப் பல சந்தர்ப்பங்களில் நேருஜி கூறி யிருக்கிறார். இப்போதோ வலதுசாரிக் கட்சிகளெல்லாம் தேசத்தின் விரோதிகள் என்கிறார்.

உலகில் எந்த ஜனநாயக நாட்டிலும் தேர்தலுக்குப் பின் எதிர்க் கட்சியை நல்ல மதிப்பும் மரியாதையும் அளித்து நடத்துவார்கள். அதற்கு முரண்பட்ட வகையில் நடந்துகொண்டு கம்யூனிஸ்ட் நாடுகளைப்போல் இந்தியாவில் நேருஜி ஒரே கட்சியின் எதேச்சாதிகார ஆட்சியை நிலைநாட்டவே விரும்புகிறார்போல் காணப்படுகிறது.

பிரதம மந்திரியின் கொள்கை எப்படி யிருப்பினும், பாரத மக்கள் சோஷலிஸப் போர்வையில் உருவாகும் ஒரு-கட்சி-சர்க்காரின் எதேச்சாதிகாரத்துக்கு உட்பட்டு வாழத் தயாரில்லை.

அமெரிக்காவில் தெ. பொ. மீ.

பன்மொழிப் புலவர் தமிழ்ப் பேராசிரியர் திரு தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் அமெரிக்க நாட்டில் சிகாகோ சர்வ கலாசாலையின் அழைப்பை ஏற்றுச் சென்ற வாரம் அமெரிக்கா சென்றிருக்கிறார் என்ற செய்தி கேட்டுத் தமிழ்ப் பெருமக்கள் பெரு மகிழ்ச்சி யடைவார்கள். அவர் சிகாகோ சர்வகலாசாலையில் 'மொழிவாரி மாகாணங்கள்' பற்றிச் சொற்பொழிவாற்றுவதோடு, தமிழ் இலக்கியத்தைப் பற்றிப் பத்து விரிவுரைகள் நிகழ்த்துவார் என்று அறிகிறோம். 'செப்புமொழி பதினெட்டுடையாள் எனின் சிந்தனை யொன்றுடையாள்' என்ற அமரகவியின் வாக்கை அமெரிக்கர்களுக்கு வலியுறுத்திச் சொல்லத் திரு தெ. பொ. மீ.யை விடச் சிறந்த பேராசிரியர் யாரே உண்டு? தமிழ் இலக்கியத்தின் ஆழத்தையும் அகலத்தையும் எடுத்துரைக்க அவர்களை விடத் தகுதி பெற்றார் யாருண்டு? அவர் பிரயாணம் வெற்றி பெறுவதாக.




திரு தெ. பொ. மீ.

பஸ் கட்டண உயர்வு

சென்னை நகரில் ஓடும் சர்க்கார் பஸ்களில் என்ன அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது என்று இனி யாரும் கேட்க முடியாது. முன்பு ஏழு நயாபைசாவாக இருந்த குறைந்த பட்சக் கட்டணம் இப்போது பத்து நயா பைசாவாக அபிவிருத்தி அடையவிருக்கிறது. கட்டணத்தை உயர்த்தப்போவதால் பிரயாணிகளுக்குச் சௌகரியங்களை உயர்த்தக் கூடும் என்று எதிர்பார்க்கிறீர்களா? மூச்!.... ஒன்றும் பேசக்கூடாது.

'அப்படியானால் கட்டணத்தை ஏன் உயர்த்தினீர்கள்?' என்றால் அதற்கும் ஒரு விடை வைத்


தரத்திற்கும்
உறுதிக்கும்
நிகரற்றது
ஹத்திபாயின்
ஸ்டெயின் லெஸ் ஸ்டீல்
பாத்திரங்கள்
எப்பொழுதும் பிரகாசத்துடன் நீடித்து உழைப்பவை
ஹத்திபாய் துளஸிதாஸ் & சன்ஸ்
122. கன்ஸராசால்...பம்பாய்-2.



இருக்கிறார் நமது அருமை மந்திரி திரு ஆர். வெங்கடராமன் அவர்கள். கட்டணம் கூடுதலானால் பஸ்ஸில் பிரயாணம் செய்பவர்களின் எண்ணிக்கை குறையும்; அதனால் நெரிசல் குறையும்; நடக்கும் பழக்கமும் மக்களுக்கு ஏற்படும் என்பது அவரது வாதம்.

சென்னை நகரின் தெருக்களில் நடைபயிலுவதால் சுகாதார ரீதியில் எந்தப் பெரு நன்மையும் பெற முடியாது என்பது ஒருபுறமிருக்க, இங்கு யாரும் பஸ்களின் சௌகரியத்தைக் கண்டு உல்லாசப் பயணம் செய்வதில்லை என்பதையும் அவருக்கு நினைவுறுத்துகிறோம். மக்களுக்குச் சௌகரியமான பிரயாண வசதி ஏற்படுத்தித் தரவே போக்குவரவு இலாகா உள்ளதே அன்றி, அவர்களை அசௌகரியப்படுத்தி அதனால் நெரிசலைத் தவிர்ப்பதற்காக அது இல்லை என்ற சிறிய உண்மையை மந்திரி புரிந்துகொள்ளாதது விந்தையே! வ ர வி ரு க் கு ம் ஐந்தாண்டுகளில் இன்னும் பலவகைகளில் மக்கள் கசக்கிப் பிழியப் படுவார்கள் என்பதற்கு இந்த பஸ் கட்டண உயர்வை ஒரு முன் அறிவிப்பாகக் கொள்ளலாம்.

காப்டன் கண்டிராக்டர்

இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு வந்திருந்த கிரிக்கெட் கோஷ்டியாரைச் சென்னையில் இரண்டாவது முறையாகத் தோல்வியுறச் செய்த போது காப்டன் கண்டிராக்டரின் புகழ் உச்சநிலையை அடைந்தது. அவரது திறமையைப் பாராட்டி மேற்கு இந்தியத் தீவுக்குச் செல்லும் இந்தியக் கிரிக்கெட் ஆட்டக் கோஷ்டிக்கும் அவரே தலைமை வகித்துச் செல்ல வேண்டும் என்று இந்திய கிரிக்கெட் போர்டு தீர்மானித்ததை எல்லாரும் வரவேற்றனர். மேற்கு இந்தியத் தீவுகளில் முதல் இரண்டு டெஸ்ட் பந்தயங்களிலும் மேற்கு இந்தியக் கிரிக்கெட் ஆட்டக்காரர்களின் 'பம்பர்' 'பீமர்' முதலிய பந்து வீச்சுக்களினால் இந்தியக் கோஷ்டியினர் சிலர் படுகாயமுற்றனர். இதையெல்லாம் விட பார்படாஸில் நடந்த ஆட்டத்தில் கிரிப்பித்ஸ் வீசிய பந்து காப்டன் கண்டிராக்டரின் தலையைப் பதம் பார்த்து, அவர் பிழைப்பாரா மாட்டாரா என்ற கவலையையே ஏற்படுத்தி விட்டது. அவருக்குத் தலையில் ரத்தம் கட்டியுள்ளதை நீக்க டாக்டர்கள் மிகுந்த சிரமப்பட்டு இரண்டு அபாயகரமான ஆப்பரேஷன்களைச் செய்துள்ளனர். இந்திய கிரிக்கெட் ஆட்டக்காரர்களில் சிலரும் மேற்கு இந்தியத் தீவு காப்டன் பிராங்க் வொரலும் ரத்ததானம் கண்டிராக்டருக்கு வழங்கியுள்ளனர்.

காப்டன் கண்டிராக்டர் விரைவில் குணமடைந்து மறுபடியும் இந்தியாவின் பெருமையை நிலைநாட்ட வேண்டும் என்று ஆண்டவனை வேண்டுகிறோம்.

மாயா

காந்தன்

பிரபுவின் மகன் ஒருவன் மனவேதனையுற்றுச் சுகபோக வாழ்வைத் துறந்து சென்று ஏழைகளோடு ஏழையாய் வாழ்கிறான். அங்கு ஏழைப் பெண்ணொருத்தியின் காதல் எதிர்பாராமல் அவனுக்குக் கிட்டுகிறது.

அதே பெண்ணுக்காக எதையும் செய்யத் தயாராயிருக்கிறான் வில்லன். பாதிப் படத்தில் வந்தாலும் படம் முடிகிற வரையில் அவர்களையும் நம்மையும் பாடாய்ப்படுத்தி வைத்துக் கடைசியில் போலீஸாரிடம் சிக்கிக் கொள்கிறான்.

தேவ் ஆனந்த் ஹிந்திப் படங்களில் அநாவசியமாக அலட்டிக் கொள்ளும் பாத்திரத்தை ஏற்பதில்லை. பட உலகில் அவர் வழக்கமாக நிற்கும் தொகுதி ஏற்கனவே முடிவு தெரிந்த தொகுதியாகத்தான் இருக்கும் என்று நிச்சயமாகக் கூறலாம்!

அவருக்கு ஏற்ற கதாநாயகி மாலாசின்ஹா. முன்பின் பார்த்திராத கதாநாயகன் மீது தண்ணீரைக் கொட்டியதுமே அவர் உள்ளம் குளிர்ந்து காதலுக்கு வழியும் பிறந்து விடுகிறது. விழியாலே மொழி பேச ஆரம்பித்து விடுகிறாரே! பிரபுவின் மகனென்று தெரிந்து கொள்ளாமல் மணம் புரிந்து கொண்டு பிறகு உண்மை தெரிந்து காதலை விட்டுக்கொடுத்து விடுகிறார் மாலா சின்ஹா. அந்தச் சமயத்தில் நடிப்பும் அவரை விட்டுக் கொடுத்து விடுகிறது.

தேவ் ஆனந்த், மாலா சின்ஹா இருவருமே கண்ணீர் விடுவதற்கும் அதில் கரைந்து போவதற்கும் தகுந்தவர்களல்ல. விறுவிறுப்பான சம்பவங்களுக்கிடையே சுறுசுறுப்பாகத் தோன்றிக் காதலித்துக் குறுகுறுப்பாக நடிக்கத்தான் தகுந்தவர்கள்.

தேவ் ஆனந்தின் இமர்த் தோழனாக வந்து கடைசியில் அவரையும் அவர் காதலியையும் துப்பாக்கிக் குண்டிலிருந்து தப்ப வைக்கிற வரையில் மிகவும் (அ)சுவாரசியமாய் நடிக்கிறார் ஆகா. ஆனாலும் அதிகப்படியாய்ப் போய்விடாத ஆகாவின் தமாஷ்கள் சில இடங்களில் 'ஆகா' போட வைக்கின்றன.


பாடல்கள் நிறைய இருக்கின்றன; செவிகளில் நுழையவும் செய்கின்றன. ஆனால் அவை உள்ளத்தில் நிறையவே இல்லையே!

சுவையூட்டுவதாக எண்ணிக் கொண்டு சுவைக்குதவாத காட்சிகள் சிலவற்றைப் படத்தில் சேர்த்திருக்கிறார்கள். இத்தகைய கொடுமைகள் வரவர வடநாட்டுப் படங்களில் அதிகமாகி வருகின்றன. இடையிடையே வருகின்ற மேல் நாட்டுப்பாணி நடனங்கள் தாம் அவை. ஹெலன் ஆடுவது போதாதென்று ஆகா வேறு' ஆட்டம் போட்டிருக்கிறார். ஸ்பெயின் நாட்டியக்காரி மாரியா இங்கரீகா என்பவர் ஆடுவதாகப் பெருமையோடு விளம்பரம் வேறு செய்திருக்கிறார்கள். இதில் பெருமைப்படுவதற்கு என்ன இருக்கிறதோ தெரியவில்லை. அந்த ஸ்பெயின் தேசத்து நாட்டியக்காரியின் அசட்டு அபிநயங்களைக் கண்டு படத் தயாரிப்பாளர்களை பயப்படாமல் இருந்ததற்காக அவர்களுக்கு வீரச் சக்கரப் பதக்கம் வேணுமானால் கொடுக்கலாம்.

ஏழை மக்கள் வாழும் இடம் தத்ரூபமாகச் சித்திரிக்கப் பட்டிருக்கிறது. படத்தின் ஆரம்பத்தில் பிரபுவின் வீட்டில் நுழையும் திருடன் ஒரு நொடியில் நல்லவனாக மாறி, தேவ் ஆனந்தின் நண்பனாகிவிடுவது கொஞ்சம் புது மாதிரியாக இருப்பதாக வேண்டுமானால் சொல்லலாம். ஆனால் இயல்பாக இல்லையே. கடைசிக் காட்சியில் வில்லன், கதாநாயகன் — கதாநாயகி இருவரையும் சுட்டுவிட முயலும் தருணத்தில் 'சஸ்பென்ஸ்' மிகவும் நன்றாகப் படமாக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும் அதில் இத்தனை ஆங்கிலப் பட வாடை வீசியிருக்க வேண்டாம்.

பொழுது போக்குக்காக வேண்டுமானால் 'மாலா' சின்ஹாவை, இல்லை இல்லை 'மாயா' சின்ஹாவைப் பார்த்து வைக்கலாம்.




கிரிக்கெட் போன போக்கு!
இப்படி பவுலிங் பண்ணுகிறார்கள் என்று...
மியூசியம்
..இப்படித்....
..தயார் செய்து கொண்டு....
...பேசாமல்; இப்படி பாட்டிங் பண்ணுவார்கள்!
எதையும் தாங்கும்
ஸ்டெச்சர்
மதுரா நகரிலோ!
ஆள் அவுட்...
ஆட்டோகிராப் ப்ளீஸ்!
சாமா

மணிபல்லவம்



நா. பார்த்தசாரதி

12. காவிய நாயகன்

அந்த நேரம் தன் வாழ்க்கையில் தனக்கு நல்வினைப் பயன் விளைய வேண்டிய மங்கல வேளையாக இருந்ததனாலோ, பூர்வ புண்ணிய வசத்தினாலோ சுரமஞ்சரியின் நாவில் புத்தியும் யுக்தியும் கலந்து திறமை வாய்ந்த சொற்களாகவும், கேள்விகளாகவும் இளங்குமரனை நோக்கிப் பிறந்தன. தன் காதலை இன்னும் அதிக உரிமையோடு நிலை நாட்ட வேண்டும் என்ற துணிவு அவனுடைய சோர்விலிருந்து அவளுக்குக் கிடைத்தது. 'பேதைகள் கூடச் சில சமயங்களில் வெற்றி பெற முடியும். விதி மட்டும் நல்லதாக இருக்க வேண்டும்' — என்று சற்று முன் அவனே தன்னிடம் கூறிய சொற்களை நினைத்துக் கொண்டாள் அவள். அந்தச் சொற்களை நினைவுகூர்வதன் மூலம் அவனைத் தானும் வெற்றி கொள்ள முடியும் என்ற நம்பிக்கை அவளுக்குக் கிடைத்தது. தன்னுடைய விதி நன்றாகத்தான் இருக்கிறது என்றாற் போல் அப்போது அவள் மனத்தில் ஒரு துணிவும் தோன்றியது. அந்தத் துணிவோடு அவள் அவனை நோக்கிப் பேசினாள்.

"நான் கேட்பது எதுவாயிருந்தாலும் அது உங்களிடம் உள்ளதானால் தருவதற்கு ஒப்புக் கொண்டிருக்கிறீர்கள்."

"ஆம்! தருவதற்கு ஒப்புக் கொண்டிருக்கிறேன். கேட்டுப் பெற்றுக்கொள்."

"உங்களையே எனக்குத் தந்து விடுங்கள்! இந்த அழகிய உடம்பை நான் ஆள்வதற்கு அளியுங்கள். கண்டு நிறைவடைய முடியாத நயங்கள் பிறக்கும் இந்தக் கண்கள், மௌனமாய் எந்நேரமும் முறுவல் பூத்துக் கொண்டேயிருக்கும் இந்த இதழ்கள், அழகு செழித்து நிமிர்ந்து பரந்த இந்தச் சுந்தரமணித் தோள்கள் — இவை யெல்லாம் எனக்கு உரியவையாக வேண்டும். கொடுப்பதற்கு அவசியம் நேரும் போது உயிர் உடம்பு மனம் முதலியவற்றையும்கூடக் கொடுத்து விடுவதுதான் கொடையின் உயர்ந்த இலட்சணம் என்பார்கள். கொடுக்க முடிந்தவராக இருந்து கொண்டே கொடைக்கு மறுப்பது உங்களைப் போன்றவருக்கு அழகில்லை" என்று கூறியவாறே தாமரை மலர்களை இடுவது போல் தன் கைகளை அவனுடைய பாதங்களில் இட்டு மேலே—நடந்து போவதற்கிருந்த அந்தத் தங்க நிறத் தாள்களைத் தடுத்து நிறுத்தும், தடையாளுள் சுரமஞ்சரி. சில்லென்று பூவிழுந்தாற் போல் தன் பாதங்களைப் பற்றிக் குளிர்ந்த உணர்வைப் பாய்ச்சும் அந்தக் கைகளின் பிடியிலிருந்து விடுவித்துக் கொள்ளத் தோன்றாமல் திகைத்து நின்றான் இளங்குமரன்.

மிகுந்த பசியினாலும் மனத்தின் பரிபூரணமான பாவனைகளாலும் நடந்து போவதே காற்றில் மிதப்பது போல் கனமற்றிருந்த அந்த வேளையில் சுரமஞ்சரியின் வேண்டுகோளைத் தடுக்கவும் முடியாமல், அங்கீகரித்துக் கொள்ளவும் முடியாமல் தயங்கி நின்றான் அவன். எப்படி யெப்படி எல்லாமோ வளர்த்த மனத்தையும், பிடிவாதங்களையும் இப்படி இந்தப் பெண்ணின் தந்திரமான வாதத்தில் தோற்று விட்டதை நினைத்த போது அவனுள் அழுகை பொங்கியது. இவ்வளவு காலம் தன் வைராக்கியத்துக்குத் துணை நின்ற விதி இன்று தன்னைக் கைவிடப் போவதை எண்ணி வேதனை கொண்டான் அவன். எந்த விதத்தினாலும் தன்னை வெற்றி கொள்ளத் தகுதியில்லாத ஓர் எதிரிக்குத் தான் தோற்றுப் போய் விட்டதாக அவன் மனம் தவித்தது. தனக்குத் தானே நினைப்பும் துணையுமின்றித் தனியாய் அலமந்தது.

எல்லாப் பற்றுக்களையும் களைந்துவிட்டுத் தன் வழியில் விரைந்து நடக்கும் போது இன்று இந்த வேளையில் தன்னுடைய பாதங்களைச் சுற்றி வளைக்கும் பூங்கரங்களின் பற்றில் இருந்து மீள முடியாத விதத்தில் தான் சிறைப்பட்டுக் கொண்டிருப்பதை உணர்ந்தான் அவன். தோல்வியின் தளர்ச்சியால் கலங்கும் மனத்தோடு மேலே நிமிர்ந்து இருண்ட வானத்தைப் பார்த்தான். 'நான் முற்றிலும் இருண்டு விடவில்லை' —என்பது போல நட்சத்திரங்கள் அங்குமிங்குமாக மின்னிக் கொண்டிருந்தன. அந்த வானத்தில் தோன்றும் மேகங்கள் மறு பயன் கருதாமல் உலகத்துக்கு மழையைக் கொடுத்துக் கொண்டிருப்பது அவனுக்கு நினைவு வந்தது. அதே வானில் பயன் கருதாமல் சூரிய சந்திரர்கள்மாறி மாறி ஒளியைக் கொடுப்பதும், வேற்றுமை ஏற்றத் தாழ்வுகளைப் பாராமல் காற்று வீசுவதும், ஆகிய உலகின் நிரந்தரமான தியாகங்களை நினைவு கூர்ந்தான் இளங்குமரன். 'இவளுக்கு என் மனத்தையும் உடலையும் நான் தோற்பதா?' — என்று உள்ளே கலங்கும் கருத்தைத் திடப்படுத்திக் கொண்டு அவளுக்குத் தோற்றுப் போகவும் துணிந்தான் அவன். உயர்ந்தகொடையாளியின்பரந்த மனப் பக்குவத்தோடு அவள் கேட்டதற்கு மறுப்பின்றித் தன்னைக் கொடுத்து விடவும் குழைந்தது அவன் கருத்து. தன் உடம்பையும், மனத்தையும் கூடக் கேட்கிறவளுக்கு மறுக்காமல் தியாகம் செய்து விடத் துணிந்தான் அவன். 'உடம்பும் மனமும் தூய்மையாய் நிறைந்த செல்வங்கள். அவற்றை யாருக்காகவும் இழக்கக் கூடாது'— என்று தன் வாழ்வில் கடைசியாகத் தான் சேர்க்க ஆசைப்பட்ட செல்வங்களையும் கூட அவளிடம் அவன் தோற்றுப்போய்க் கொடுத்து விட இசைந்து விட்டான். இந்த முடிவுக்கு வந்த பின் நிர்மலமான உள்ளத்தோடும் எதை இழக்கிறோமோ அதை இழக்கிற துன்பமும் கூடத் தெரியாத சிரித்த முகத்தோடும் கீழே குனிந்து சுரமஞ்சரியைப் பார்த்தான் இளங்குமரன் அவள் அவன் காலடியில் பூவாக விழுந்து கிடந்தாள். பூமாலையை எடுப்பது போல் முதன் முதலாகஅவளைத் தன் கைகளால் தொட்டுத் தூக்கி நிறுத்தினான். அப்படி அவனுடைய கைகள் தன்னைத் தீண்டிய போது சுரமஞ்சரி இந்த உலகத்தில் தன்னைப் போல் பாக்கியசாலி வேறு யாருமே இல்லை என்று எண்ணிப் பெருமிதப்பட்டாள். மேலேயிருந்து யாரோ பனிபுலராத பூக்களை மலை மலையாக அள்ளித் தன் மேல் சொரிவது போல் அவள் உடல் சிலிர்த்தது. அந்த விநாடிகள் முடிவு பெறாமல் நித்தியமாகி அப்படியே பல யுகங்களாகத் தொடர்ந்து வளரலாகாதா என்ற தாபத்தோடு கண்களில் மகிழ்ச்சி மலர அவள் அவன் முகத்தைப் பார்த்தாள். அவன் அவளிடம் பேசினான்:—

''உன்னுடைய வார்த்தைகளுக்கு நான் தோற்றுப் போய் விட்டேன். என்னுடைய தோல்வியை நானே ஒப்புக் கொள்கிறேன்.''

''இல்லை! இல்லை! அப்படிச் சொல்லாதீர்கள். நான் தான் தொடக்கத்திலிருந்து உங்களுக்குத் தோற்றுப் போய்க் கொண்டு வருகிறேன். என்னுடைய தோல்வி நேற்று வரை அங்கீகரிக்கப்படவில்லை. அது யாரால் அங்கீகரிக்கப்பட வேண்டுமோ அவரால் இன்று அங்கீகரிக்கப்பட்டு விட்டது. அவ்வளவுதான். இதை என் வெற்றியாகக் கூறினீர்களானால், 'பேதைகள் கூடச் சில சமயங்களில்-வெற்றிபெற முடியும். விதிமட்டும் நல்லதாக இருக்க வேண்டும்'—என்று நீங்களே சிறிது நேரத்துக்கு முன் சொன்னது போல என் விதி நன்றாக இருந்தது என்பதற்கு மேல் நான் பெருமைப்பட இதில் எனது முயற்சி வேறு ஒன்றுமில்லை.....''

''உன் விதி உனக்கு நன்றாயிருந்த வேளையில் என் விதி என்னைக் கைவிட்டு விட்டது சுரமஞ்சரி! நீ இந்த வெற்றியை நன்றாகக் கொண்டாடலாம். ஏனென்றால் இந்த நகரத்தின் நாளங்காடி ஞான வீதியில் கூடிய பல நூறு தத்துவ ஞானிகளுக்கும், சமய வாதிகளுக்கும் கூட அவர்களுடைய அறிவின் பலத்தால் அடைய முடியாமற்போன வெற்றி இது. நீ உன்னுடைய உணர்ச்சிகளின் பலத்தாலேயே இந்த வெற்றியை என்னிடம் அடைந்து விட்டாய். ஆனால் இப்படி இப்போது உன்னுடைய வார்த்தைகளுக்குத் தோற்றவனின் மனத்தில் பெருகும் பரிதாபத்தை மட்டும் அளக்கவே முடியாது....''

''இன்று எந்த வார்த்தைகளால் உங்களை நான் வென்றதாகச் சொல்கிறீர்களோ அவை நீங்கள் எனக்குக் கற்றுக் கொடுத்த வார்த்தைகள் தாமே? நம்முடைய முதல் சந்திப்பின் போது கடற்கரையில் நான் உங்களுக்கு மணிமாலை பரிசளிக்க முன்வந்த சமயத்தில், 'கொள் எனக் கொடுத்தல் உயர்ந்தது. கொள்ள மாட்டேன் என மறுப்பது அதைவிட உயர்ந்தது'— என்று அன்றைக்கு நீங்கள் என்னிடம் கூறிய வார்த்தைகளைத் தான் இன்றைக்கு நான் உங்களிடம் பேசினேன். அன்று நீங்கள் என்னை வென்று விடக் காரணமாயிருந்த அதே வார்த்தைகள் இன்று நான் உங்களை வெற்றி கொள்ளக் காரணமாயிருந்தனவோ, என்னவோ? எப்படியிருந்தா

னும் வெற்றி உங்களுடைய வார்த்தைகளுக்குத் தானே?''

''வார்த்தைகள் பூக்களைப் போன்றவை. யார் நன்றாகத் தொடுத்தாலும் அவை அழகாயிருக்கும். வென்றவர்கள் பெருமைப்படவும் தோற்றவர்கள் துயரப்படவும் ஒரே விதமான வார்த்தைகளே காரணமாயிருக்குமானால் என்ன செய்யலாம்?''

''வென்றவர் தோற்றவர் என்ற பிரிவே நமக்குள் இங்கு இல்லை அன்பரே! இந்தத் தோல்வியிலும் நீங்கள் தான் என்னை வென்றிருக்கிறீர்கள். என்னுடைய வாழ்வில் கடைசி விநாடி வரை உங்களுக்குத் தோற்றுக் கொண்டிருப்பதை விட வேறெந்தப் பெருமையும் எனக்கு வேண்டாம். தலைமுறை தலைமுறையாகப் பெண்கள் அன்பினால் பிறருக்குத் தோற்றுப் போவதைத் தான் பாக்கியமாகக் கருதி வந்திருக்கிறார்கள். ஆண்களின் வாழ்வில் வேண்டுமானால் வெற்றி யடைவதனால் பெருமை இருக்கலாம். பெண்ணின் வாழ்க்கையில் அன்புக்காகத் தோற்றுக் கொண்டேயிருப்பதைவிடப் பெரிய நிகழ்ச்சி வேறொன்றும் இல்லை. வாழ்க்கை முழுவதும் துணையாக்கிக் கொண்டு நடப்பதற்காக வளைகள் குலுங்கும் கையால் நாங்கள் எந்த ஆண்மகனின் கையைப் பற்றுகிறோமோ அந்த விநாடியிலிருந்து எங்கள் மனம் அவனுக்கு மட்டும் தோற்றுப் போவதில் சுகம் காணத் தொடங்கி விடுகிறது. மலையிலிருந்து கீழே இறங்கும் அருவி அப்படித் தாழ்ந்து கீழே விழ்வதனாலேதான் உல்லாசமடைகிறது. செடிகளில் அழகும் மணமும் நிறைந்த பூக்கள் சூடிக் கொள்வோர் காலடியில் உதிர்வதற்காகவே பூக்கின்றன. உதிர்ந்த பூ திரும்பவும் கிளைக்குப் போக ஆசைப்பட முடியுமோ? வீழ்ந்த அருவி மறுபடி தான் பிறந்து வந்த இடமான நீலமலைச் சிகரத்துக்கு ஏறிப் போக ஆசைப்பட முடியுமோ? பெண் தன்னை இழந்து விடுவதில்தான் சுகம் பெறுகிறாள்''—என்று கூறியவாறே தன் வளைக் கரத்தால், அவன் கரத்தைப் பற்றினாள் சுரமஞ்சரி. அவன் அவள் கையைத் தடுக்கவில்லை.

''நீ பெற வேண்டிய சுகங்களுக்காக உன் தெய்வத்தை மனமார வணங்கி வேண்டிக்கொள் சுரமஞ்சரி!''

''நேற்று வரை பல வேறு தெய்வங்களை நான் வணங்கியிருக்கிறேன். இன்று நான் வணங்குவதற்கு வேறு தெய்வங்கள் இல்லை. நீங்கள் ஒருவரே என் தெய்வமாகி விட்டீர்கள்.''

''உன்னுடைய தெய்வத்தை நீ எந்த வழியில் நடத்திக் கொண்டு போக வேண்டுமோ அந்த வழியில் நடத்திக் கொண்டு போ!''

''கட்டளையே தவறானதாயிருக்கிறதே? தெய்வமல்லவா தன்னைச் சேர்ந்தவர்களை வழி நடத்திக் கொண்டு போக வேண்டும்? இன்னொரு நிகழ்ச்சியும் எனக்கு நினைவு வருகிறது. ஓவியர் மணிமார்பனோடு நீங்கள் இந்த மாளிகையில் நுழைந்த முதல் நாள் 'பிறருடைய வழிக்கு அடங்கி நடந்து நமக்குப் பழக்கமில்லை, எந்த இடத்திலும் எந்தச் சூழ்நிலையிலும் நாம் எப்படி நடந்து போக வேண்டுமென்று நமக்குத் தெரியும்' என்று தணியாத தன்மானவுணர்ச்சியுடனே என்னிடம் பேசினீர்கள். அதே மனிதர்தானா இன்று இப்படி என் முன் 'எந்த வழியில் நடத்த வேண்டுமோ அந்த வழியில் என்னை நடத்திக்கொண்டு போ' — என்று கூறுகிறீர்கள்? இந்த மாறுதலை என்னால் நம்பவே முடியவில்லையே?''

''ஓர் எல்லையின் கடைசிப் புள்ளியில் போய் நிற்பவர்கள் அங்கிருந்து திரும்பி நடந்தால் அதற்கு நேரேயுள்ள எதிர் எல்லைக்குத்தான் நடக்க வேண்டியிருக்கிறது. ஏனென்றால் கடைசியாக ஏறிப் போய் நிற்கிற எல்லை எதுவோ அதற்கு



அப்பால் போவதற்கும் நோக்கமாகக் குறிக் கொள்வதற்கும் ஒன்றுமே இருப்பதில்லை. என்னுடைய எல்லையிலிருந்து நான் திரும்பி நடக்க வேண்டுமென்று தானே நீ இந்தக் கையால் என்னைப் பற்றி இழுக்கிறாய்?''

அவனுடைய இந்த வார்த்தைகளைக் கேட்டுச் சுரமஞ்சரி கண் கலங்கினாள். சில விநாடிகள் ஏதோ வேதனைக்குரிய சிந்தனைகளினால் மனம் வருந்துகிற சாயல் அவள் முகத்தில் தெரிந்தது. பின்பு தனக்குள் ஒரு தீர்மானத்துக்கு வந்தவளாக அவன் கையைப் பற்றியிருந்த தன் வளைக் கரத்தை மெல்ல விடுவித்துக் கொண்டு, ''இப்படி உள்ளர்த்தம் நிறைந்த வார்த்தைகளால் என்னைக் கொல்லாதீர்கள். உங்கள் வழியில் நீங்கள் விரும்புகிறாற் போல என்னை அழைத்துச் செல்லுங்கள். தோற்றவர்களை அழைத்துச் செல்லும் முறையை வென்றவர்கள் தானே முடிவு செய்ய வேண்டும்?'' என்றாள்.


''அப்படியானால் என்னோடு என் வழியில் புறப்படு.''

''இதோ புறப்படுகிறேன்'' என்று சொல்லியபடியே பெருமாளிகையின் வாயிற்படியருகே போய்த் தன் உடலின் பல பகுதிகளைப் பிணித்துக் கொண்டிருந்த பொன் சுமைகளை ஒவ்வொன்றாகக் கழற்றி அந்தப்படியில் குவித்தாள் சுரமஞ்சரி. இறுதியாகக் கால்களின் மாணிக்கச் சிலம்புகளையும் கழற்றி வைத்து விட்டு அவற்றைப் பற்றிய மனத்தின் ஆசைகளும் அறவே கழன்று போய் அவள் எழுந்து புறப்படுவதற்காக நிமிர்ந்த போது அவளுடைய முன் நெற்றியில் மேலேயிருந்து கண்ணீர் வெதுவெதுப்பாகச் சிந்திச் சிதறியது.

திடுக்கிட்டுப் போய்ப் பார்த்தாள் சுரமஞ்சரி. அவள் அந்த அணிகலன்களையெல்லாம் கழற்றி வைத்த படிக்கு ஒரு படி மேலே அவளுடைய தந்தை கண் கலங்கி நீர் பெருக வந்து நின்று கொண்டிருந்தார்.

''இப்படித் தோற்றுப் போகத் துணிகிற மனம் உன் தந்தைக்கும் இல்லையே, சுரமஞ்சரி! உன் தந்தைக்கு இந்தக் குணம் இருந்திருந்தால் தன் வாழ்வின் அவர் தொடக்கத்திலிருந்தே செம்மையாக வாழ்ந்திருக்கலாம் அம்மா....'' என்று நாத்தழுதழுத்து நெகிழ்ந்த குரலில் அவர் அவளை நோக்கிக் கூறிய போது அவருக்கு என்ன மறுமொழி சொல்வதென்று தெரியவில்லை அவளுக்கு. தான் அப்போது நின்று கொண்டிருந்த படிக்கு அடுத்த மேற்படியில் ஏறித் தன் தந்தைக்கு ஏதாவது ஆறுதலாய்ச் சொல்ல வேண்டும் போலிருந்தது. ஆனால் என்ன சொல்வதென்று புலப்படவில்லை. அந்தப் பாசத்தையும் மனத்திலிருந்து கழற்றினாள் அவள்.

''இன்று அமைதியான இந்த இரவு வேளையில் என் தாயும், சகோதரி வானவல்லியும், தோழி வசந்தமாலையும் நன்றாக உறங்கி விட்டார்கள் போலிருக்கிறது! 'சுரமஞ்சரி எந்த வழியில் யாருடன் நடந்து போவதற்காக இத்தனை காலம் தவம் செய்து கொண்டிருந்தாளோ அந்த வழியில் அந்தத் துணையோடு இந்த இருளில் புறப்பட்டுப் போய் விட்டாள்' என்று எல்லாரிடமும் நாளைக்கு விடிந்ததும் சொல்லி விடுங்கள் அப்பா! மனம் இருந்தால் இப்போது எங்களுக்கு ஆசியும் கூறி அனுப்புங்கள்'' என்று சொல்லிக்கொண்டே படிகளில் இறங்கித் திரும்பிச் சென்று தன்னை




Finest
Musk
Soap
டிராலி
மஸ்க் சோப்

வென்றவனுக்கு அருகில் நின்றபடி தன் தந்தையை நோக்கி வணங்கினாள் கரமஞ்சரி.

"ஆசி கூற மனம் இருக்கிறதம்மா! ஆனால் தகுதி இல்லையே?" என்று இளங்குமரனின் பக்கமாகத் திரும்பிக் கை கூப்பினார் அவர். அந்த நிலையில் அவரைக் கண்டு இளங்குமரனுக்கும் அநுதாபம் பெருகியது.

பெருமாளிகைத் தோட்டத்திலிருந்து முன் இரவிலேயே மலர்ந்து விட்ட பூக்களின் மணம் பரவத் தொடங்கியிருந்தது. கரமஞ்சரியைக் கைப் பற்றி அழைத்துக் கொண்டு அங்கிருந்து வெளியேறுவதற்காக மெல்ல நடந்தான் இளங்குமரன்.

இருவரும் மாளிகையின் கடைசி வாயிலையும் கடந்து இருள் உறங்கும் பட்டினப் பாக்கத்துத் தெருவில் இறங்கிச் சென்ற போது, "கரமஞ்சரீ! இன்று மாலை இந்த மாளிகைக்குள் நுழையும்போது நான் துறவியாக நுழைந்தேன். இப்போது ஒரு பெண்ணின் கையையும் நினைவையும் சுமந்து கொண்டு மிகப் பெரிய வாழ்க்கைச் சுமையோடு திரும்புகிறேன்" என்று அவளுடைய காதருகே சிரித்துக் கொண்டே சொன்னான் இளங் குமரன். அவன் அந்த வார்த்தைகளைச் சிரித்துக் கொண்டே சொல்லியிருந்தாலும் அவளுக்கு அவற்றைக் கேட்டு வேதனையாகத்தான் இருந்தது. அவன் தன்னுடைய தோல்வியையே திரும்பத் திரும்ப எண்ணி உருகுவது அவளுக்குப் புரிந்தது.



"தோற்றுப் போனதற்காக வருந்திக் கொண்டே பேசுவது போல் அடிக்கடி பேசுகிறீர்கள் நீங்கள். இந்தவிதமான பேச்சு என்னைப் புண்படுத்துகிறது" என்று தன் மனக் குறையைச் சொன்னாள் அவள்.

அந்தச் சொற்கள் இனியும் அப்படிப் பேச விடாமல் அவன் நாவைக் கட்டுப்படுத்தி அடக்கி விட்டன. மௌனமாக மேலே நடந்தான் அவன். விடுபட்ட பறவைகள் போல் அமைதியான அந்த இரவு நேரத்தில் பூம்புகாரின் வீதிகளில் சுற்றினார்கள் அவர்கள்.

நீண்ட நேரத்துக்குப் பின் நடந்து நடந்து களைத்த நிலையில் பௌத்த மடத்துக்கு முன்னாலிருந்த ஒரு மகிழ மரத்தடியில் கரமஞ்சரியோடு அமர்ந்தான் இளங்குமரன். அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த கரமஞ்சரி அங்கே பசிக் களைப்பைக் கண்டாள்.

"உங்களுடைய முகத்தில் பசிச் சோர்வு தெரிகிறது! நீங்கள் பல வேளைகளாக உண்ணவில்லை போலிருக்கிறது?"

"பல வேளைகளாக அல்ல; பல நாட்களாகவே உண்ணவில்லை! இப்போதுதான் என் பசி எனக்குத் தெரிகிறது. நீயும் என்னைப் போலவே பசிச் சோர்வோடுதான் தெரிகிறாய்."

"நம்முடைய இல்லறம் இருவர் வயிற்றிலும் இப்படிப் பசியோடு தொடங்குகிறது. ஆனால் என்னைவிட அதிகம் பசித்துப் போயிருக்கிறீர்கள் நீங்கள்" என்று சொல்லிச் சிரித்தாள் கரமஞ்சரி.

அடுத்த கணம் அவளுடைய சிரிப்பை அவன் சொற்கள் அடக்கின. அவளை அந்தச் சொற்களால் பரிசோதனை செய்தான் அவன்.

"எந்தவிதமான செல்வங்களும் இல்லாத ஓர் ஏழையைக் காதலிப்பதால் எவ்வளவு வேதனைகள் பார்த்தாயா? என் பசிக்கும் சோறில்லை. உன் பசிக்கும் சோறில்லை. இருவர் பசிக்கும் இருவர் துயரத்துக்கும் இந்த மரத்தடி மண்தான் புகலிடம் போலிருக்கிறது?"

"ஏன் இல்லை? கணவனுடைய வயிறு நிரம்புவதை விடப் பெரிய திருப்தி மனைவிக்குக் கிடையாது. இன்று நீங்கள் எனக்குக் கிடைத்த புண்ணிய தினம். இதை நான் கொண்டாட வேண்டும். உங்களுக்கு என் கையால் நான் சோறு படைக்கவேண்டும்! பிச்சை எடுத்து வந்தாவது அதைச் செய்வேன்" என்று கூறிக்கொண்டே அவள் ஆவேசத்தோடு அங்கிருந்து எழுந்து சென்றாள்.

கரமஞ்சரி பௌத்த மடத்துக்கு அருகே யாத்திரிகர்களுக்குச் சோறிடுவதற்காக இருந்த அறக் கோட்டம் ஒன்றில் போய் ஒரு பெரிய வாழை இலை நிறையச் சோறு வாங்கி வந்து இளங்குமரனுக்கு முன் வைத்தாள். தன் கையால் ஒவ்வொரு பிடியாக எடுத்து அந்தச் சோற்றை அவன் கையில் இட்ட போது அவன் மனம் மகிழ்ச்சியால் நிறைந்தது. இலையிலிருந்த மீதத்தைத் திரட்டிக் கடைசிப்பிடியை அவள் அவன் கையில் வைத்தபோது அந்தச் சோற்றை

அப்படியே கைமறித்து அவள் வாய்க்குள் இடுவதற்குக் கொண்டு போனான் இளங்குமரன். சுரமஞ்சரி அவன்கையால் அதை உண்பதற்கு நாணித் தலையைக் குனிந்து கொண்டாள். தன்னிடம் அன்பு செய்வதை விடப் பெருமைப் படத் தக்க செல்வங்கள், உறவுகள், பாசங்கள், வேறெவையுமே இல்லை என்பதை நிரூபித்துவிட்ட அந்தப் பேரழகுப் பேதையை மலர்ந்த விழிகளால் நோக்கி அவளை ஏற்றுக்கொண்ட நாயகன் என்ற உரிமையோடு இளங்குமரன் முதல்முறையாகப் பார்த்தான். அந்தப் பார்வையே அப்போது அவளை மணப் பெண்ணாக அலங்கரிக்கத் தொடங்கியது.

''சுரமஞ்சரீ! என்னுடைய சோதனைகளில் எல்லாம் நீ வெற்றி பெற்றுவிட்டாய். எல்லாப் பற்றுக்களையும் இழந்து விட்டு ஏதாவது ஒரு பற்றில் மட்டும் இலயிப்பவனைத் துறவி என்கிறார்கள். நீயும் அப்படி உன் செல்வங்களையும் உறவுகளையும் இழந்து விட்டு என்னில் கலந்து என்னோடு மட்டும் இலயித்துவிட்டாய். உன்னுடைய இந்தத் தவத்தை நான் ஏற்றுக் கொண்டு அருள் செய்து தான் ஆகவேண்டும்'' என்று இந்த வார்த்தைகளைச் சொல்லிய போது அவனுடைய மனம் நிறையப் பரிவு பெருகியிருந்தது. அந்தப் பரிவைச் சுரமஞ்சரிக்கும் அளிக்க அவன் மனம் இணங்கிற்று. அந்த எல்லையற்ற பரிவு வெள்ளத்தில் அவள் மூழ்கவும் இடம் கொடுத்தான் அவன். இரண்டாம் முறையாக அவன் கையிலிருந்த சோற்றை அவள் உண்ணும் போது சிறு குழந்தைபோல் அவன் தோளில் சாய்ந்திருந்தாள்.

''இந்த ஒரு கை சோற்றில் என்னுடைய நெடுங்காலத்துப் பசி தணிந்து விட்டது அன்பரே! என்னிடமிருந்து என் கையால் எதையுமே ஏற்றுக் கொள்ள மறுத்த நீங்கள் இன்று ஏற்றுக் கொண்டீர்கள். கொடுக்க வேண்டும் என்ற மெய்யான பரிவோடு எனக்கும் உங்கள் கையால் உண்ணக் கொடுத்தீர்கள். இந்த விநாடியோடு செத்துப் போய் விட்டாலும் இனி எனக்குக் கவலையில்லை. இந்த ஒரே ஒரு விநாடியில் ஆயிரம் ஊழிகள் உங்களோடு வாழ்ந்து அநுபவங்களைப் பெற்று விட்டாற் போன்ற திருப்தி எனக்குக் கிடைத்து விட்டது.'' மகிழ்ச்சி மிகுதியினால் சுரமஞ்சரியின் சொற்கள் முற்றாத மழலைச் சொற்களாய்க் குழைந்து ஒலித்தன.

''பேதைப் பெண்ணே! இப்போது தான் வாழத் தொடங்கியிருக்கிறாய். அதற்குள் ஏன் சாவதற்கு ஆசைப்படுகிறாய்?'' என்று கேட்டுக் கொண்டே இளங்குமரன் தன் மேல் சாய்ந்திருந்த அவளுடைய குழற்கற்றையைப் பரிவோடு கோதினான். மேலே மரத்தின் கிளையிலிருந்து குயில் ஒன்று கூவியது. காற்றில் ஆடியசைந்த மகிழ மரத்தின் கிளைகள் அவர்கள் மேல் பூக்களைச் சிந்தின.

''இந்தக் குயில் ஏன் இப்படிக் கூவுகிறது சுரமஞ்சரி?''

''விடிவதற்காக.''

''யாருக்கு விடிவதற்காக?''

''ஒரு பேதைப் பெண்ணுடைய வாழ்க்கையில் விடிந்து ஒளிகிடைப்பதற்காகத்தான்.''

இந்தக் குறும்பு நிறைந்த பதில் வார்த்தைகளைக் கூறி விட்டுத் தன் சிரிப்பைத் தானே அடக்கிக் கொள்ள முடியாமல் சுரமஞ்சரி சிரித்த போது அவனுடைய சிரிப்பும் பிறந்து அதில் கலந்து எதிரொலித்து இணைந்தது.

13. முடியாத கோலம்

விடிகின்ற நேரத்துக்கே உரிய சில்லென்ற குளிர் காற்று உடம்பில் பட்டு இளங்குமரன் கண் விழித்தான். மரத்தடியில் பொற்காசுகள் சிதறினாற் போல் மகிழம் பூக்கள் உதிர்ந்து மணம் பரப்பிக்கொண்டிருந்தன. விடியப்போகிறது. விடியப் போகிறது என்று இந்த உலகத்துக்குத் திரும்பத் திரும்பச் சொல்லி மங்கல வாழ்த்தெடுப்பது போலப் பறவைகள் காலைக் குரல் எழுப்பிக்கொண்டிருந்தன. கதிரவனின் முதற் கதிர்கள் மண்ணில் படுவதற்குள்ளேயே நீராடித் தவ ஒழுக்கங்களை முடித்துவிடும் ஆவலோடு காவிரிக்குச் செல்லத் தொடங்கியிருந்த அந்த நகரத்து மறையவர்களின் மந்திர ஒலிகளும், பௌத்தர்களின் அற முழக்கமும் அங்கங்கே பூம்புகாரின் வீதிகளிலிருந்து ஒலிக்கத் தொடங்கியிருந்தன. இன்னும் இருள் புலரவில்லை. அறிந்தும் அறிய முடியாதபடி தெரிந்தும் தெரிய முடியாதபடி பேதை இருட்டு என்பார்களே, அப்படி எங்கும் ஓர் இருட்டுச் சூழ்ந்திருந்தது. வழக்கம்போல் இந்த வேளையில் இளங்குமரனுக்குக் கண்கள் விழித்துக் கொண்டன. எழுந்திருந்து நீராடப் போவதற்கு ஆசையாயிருந்தது. ஆனால் எழுந்திருப்பதற்கும் முடியவில்லை.

தாயோடு ஒன்றிக் கொண்டு உறங்கும் சிறு குழந்தை போல் சுரமஞ்சரி

அவனுடைய வலது தோளைத் தன் தலைக்கு அணையாகக் கொண்டு குளிருக்கு ஒடுங்கினாற்போல ஆழ்ந்து கண்ணயர்ந்து கொண்டிருந்தாள். ஏழு உலகங்களையும் வென்று ஆளும் இணையற்ற வெற்றி போல் கவலையில்லாமல் உறங்கும் அந்தப் பேதையைப் பார்த்த போது அவளுடைய உறக்கத்தைக் கலைக்கும் துணிவை இழந்து அப்படியே அசையாமல் இருந்தான் இளங்குமரன். அவளுடைய எழில் நிறைந்த உடல் அவன் தோளில் சரிந்த மல்லிகை மாலையாய் மணந்து கொண்டிருந்தது. சந்திர பிம்பமாய்த் தெரிந்த அவள் முகம் அந்த உறக்கத்திலும் ஏதோ நல்ல கனவு காண்பது போலச் சிரிப்பைக் காண்பித்துக் கொண்டிருந்தது. மனத்திலும், கண்களிலும் அவனுக்காகவே நிறைந்த பரிவோடு தனக்காக எல்லாச் சுகங்களையும் இழந்து விட்டு, எல்லாச் செல்வங்களையும் தோற்று விட்டு இப்படி இந்த மரத்தடியில் வந்து வெறுந் தரையில் உறங்கும் அந்தப் பேதைமையைப் பார்த்துக் கொண்டே வியந்தான் இளங்குமரன். அந்தப் பொன்னுடலில் வைகறைக் குளிர் படாமல் தன்னுடைய மேலாடையை எடுத்து மெல்லப் போர்த்தினான். 'விரும்பியதை விரும்பியபடியே அடைவதைவிடப் பெரிய வெற்றி எதுவும் பேதையர்களுடைய வாழ்வில் இருக்க முடியாது' என்று முதல் நாள் அவளைக் கடுமையாக வெறுத்துப் புறக்கணிப்போடு கூறியிருந்த தானே இப்போது இப்படி அவளைக் குழந்தைபோல் பேணிப் போற்றி உறங்கச் செய்வதையும், அவளுடைய உறக்கம் கலையலாகாதே என்று கவலைப்படுவதையும் எண்ணிய போது அவன் தனக்குள்ளேயே சிரித்துக் கொண்டான். அந்தத் தோல்வியை உணர்ந்த போது அவனுக்கு வெட்கமாக இருந்தது. அதே சமயத்தில் சுகமாகவும் இருந்தது. பொழுதுபுலர்ந்தும் புலராமலும் இருந்த அந்த நேரத்தைப் போலவே அவன் மனமும் குளிர்ந்து மணந்து கொண்டிருந்தது. இப்படி ஒரு காலைப் போது அவன் வாழ்க்கையில் இது வரையில் விடிந்ததில்லை.

''என்னை அடைவதற்காக இவள் செய்த தவம் பெரியது! என்னைப் பெறுவதற்காக இவள் இழந்த சுகங்களும், செய்த தியாகமும் இணையற்றவை'' என்று தனக்குள் தானே சொல்லிக் கொண்டவனாகச் செந்தாமரைப் பூவைப் போல் தன் மார்பின் மேல் படர்ந்து பற்றிக் கொண்டிருந்த அவள் கையை மெல்ல எடுத்து இளங்குமரன தன் கண்களில் ஒற்றிக் கொண்டான். அந்தக் கையின் மென்மையும், தண்மையும், நளினமான நீண்ட விரல்களும், பவழமல்லிகை மணப்பது போன்ற மயக்கமும் ஒருகணம் அவனுடைய நினைவிலிருந்து விலகின. அதனுள் ஓடும் இரத்தம் தன் குலப் பகைவரையும் அவர் கொடுமைகளையும் நினைவூட்டிற்று. உயர்ந்த பாவனைகளால் அந்தத் தீய நினைவை அடக்கிக் கொண்டு பரிவுடனே மறுபடி அவளது கையை எடுத்து அவன் தன் கண்களில் ஒற்றிக் கொண்ட போது அவளே விழித்துக் கொண்டுவிட்டாள். அவனுக்கு வெட்கமாகிவிட்டது. வெட்கத்தோடு அவள் கையை மெல்ல விடுவித்தான் அவன். அவளோ அவன் விடுவித்த கையை அவனிடமிருந்து மீட்டுக் கொள்ளவே முயலாதவளாய் அந்த நிலையில் தான் விழிப்பதைவிட உறங்குவதே நல்லதென்று இருட்டுத்தீர்மானமும் செய்துகொண்டவளாகப் பொய் உறக்கம் உறங்கினாள். அதைப் புரிந்து கொண்டு அவன் புன்னகை பூத்தான்.

அவனுக்கு அந்த விளையாட்டைத் தொடரும் ஆசையிருந்தும் தொடரமுடியாத சூழ்நிலையில் அடக்க முடியாத சிரிப்போடு எழுந்து உட்கார்ந்தான். ''இந்தக் கை எந்தப் பிறவியிலோ சக்தி வாய்ந்த தேவதைகளின் கோவில்களுக்குப் பூச்சுமந்து பூச்சுமந்து புண்ணியம் சேர்த்திருக்க வேண்டும். அதன் பயன் சற்றுமுன் இதற்குக் கிடைத்து விட்டது. இது பாக்கியம் செய்த கை'' என்று சிவப்பு நிறம் படரும் கிழக்கு வானத்தைப் பார்த்துக் கொண்டே அவனுக்குச் சொன்னாள் சுரமஞ்சரி. அவன் தொட்டு ஆண்ட நினைவின் சுகம் அவளுடைய கையிலும் மனத்திலும் நிறைந்திருப்பதை அவளுடைய வார்த்தைகள் பரிபூரணமாய்த் தொனித்துக் கொண்டு பேசின. முறுவல் இளரும் முகத்தினனாய்த் தன் கைகள் நிறையக் கீழே உதிர்ந்திருந்த மகிழம் பூக்களை அள்ளிக் கொண்டு அவள் பக்கம் திரும்பிப் பாக்கியம் செய்த அந்தக் கையை மலர்த்தி அதில் நிறைத்தான் இளங்குமரன்.

இப்போதும் அவனுடைய கண்களின் பார்வையே அவளைப் புதுமணப்பெண்ணாக அலங்கரித்தது.

''புறப்படு! நீராடப் போகலாம். பொழுது நன்றாக விடிவதற்கு முன்பு காவிரியில் போய் நீராடி விட்டு வர வேண்டும்'' என்று எழுந்து நடந்தான் அவன். அவள் மௌனமாய் அவனைப் பின்தொடர்ந்தாள். எல்லாரும் எழுவதற்கு முன் நகரமே அந்தரங்கமாக எழுந்து நீராடிவிட்டு இன்னும் ஈரம் புலராமல் இருப்பது போல் வீதிகளில் எங்கும் மென்குளிர் பரவியிருந்த அந்த

வேளையில் நடந்து போவதே சுகமாக இருந்தது.

புறவீதிக்கு அருகே இலவந்திகைச் சோலையின் மதிலை ஒட்டியிருக்கும் காவிரிப் படித்துறையில் போய் நீராடலாம் என்ற கருத்துடன் சுரமஞ்சரியை அழைத்துச் சென்ருன் இளங்குமரன். புறவீதியில் நுழைந்ததும் பக்கத்திலிருந்த மலர் வனங்களின் மணமும் சேர்ந்து அவர்கள் நடந்து போய்க் கொண்டிருந்த வழி நடைக்கு இங்கிதமான சூழலைப் படைத்தன.

''இப்படி ஒரு காலைப் போது என் வாழ்வில் இதுவரை விடிந்ததில்லை'' என்று அவன் கண் விழித்ததும் எதை நினைத்தானே அதையே அந்த வீதியில் புகுந்த-போது சுரமஞ்சரியும் அவனிடம் கூறினள். இதே போலப் பனி புலராத காலை வேளை ஒன்றில் இந்தக் காவிய நாயகனை அடைவதற்காகத் தான் விரதமிருந்து இருகாமத் திணை யேரியில் நீராடிக் காமன்கோட்டத்தை வலம் வந்த நிகழ்ச்சியை இன்று நினைவு கூர்ந்தாள் அவள். அந்த நினைவு இன்று தன் வாழ்வில் கைகூடி விட்டதை உணர்ந்த பெருமையோடு புதிய கிளர்ச்சி பெற்றவளாகப் புறவீதியில் புகுந்த போது அவள் அவனுடைய கையைப் பற்றிக் கொண்டு அவன் அருகில் இன்னும் நெருக்கமாக நடக்கலானுள். அவனுடைய கையை அவனும் அப்போது விலக்கி விட்டுத் தனியே நடக்க முயலவில்லை.

மறக் குடி மக்கள் மிகுந்து வசிக்கும் புறவீதியில் அந்த வைகறை வேளையில் மனைப் பெண்கள் வாயில்கள் தோறும் தண்ணீர் தெளித்துக் கோலமிடும் காட்சிகள் வீதியின் இருபுறத்திலும் நிறைந்து தோன்றின.

காவிரியில் நீராடுவதற்காகச் சுரமஞ்சரியோடு கைகோத்து நடந்து சென்று கொண்டிருந்த இளங்குமரன் அந்த வீதியின் நடுப் பகுதியில் ஏதோ ஒரு வீட்டருகே வந்ததும் மேலே நடக்கத் தோன்ருமல் சோர்ந்தாற் போலக் கால்கள் தயங்கிட நடுவழியில் நின்ருன்.

''ஏன் நின்று விட்டீர்கள்? நடக்கத் தளர்ச்சியாக இருக்கிறதா?'' என்று சுரமஞ்சரி கனிந்த குரலில் அவனைக் கேட்டாள்.

''தளர்ச்சிதான்! இந்த இடத்தில் தளர்ந்து நிற்பதைத் தவிர வேறென்றும் எனக்குத் தோன்றவில்லை'' என்று அவனிடமிருந்து அவளுக்குப் பதில் வந்தது.

இவர்களுடைய இந்த உரையாடலில் கவரப்பட்டவளாக வீதியில் அந்த வீட்டு வாயிலில் உற்சாகமாகப் பாடியபடி கோலமிட்டுக் கொண்டிருந்த பெண்ணெருத்தி நிமிர்ந்து பார்த்தாள். பார்த்தவள் அப்படியே திகைத்து நின்

ளுன். அவளுடைய தனிமையின் உல்லாச வெளியீடாகிய பாட்டு இதழ்களில் அப்படியே அடங்கி நின்றது.

''முல்லை! நீ நலமாயிருக்கிறாயா?'' என்று அன்புடனே அவளை நோக்கிக் கேட்டான் இளங்குமரன். கோலமிட்டுக் கொண்டிருந்த அந்தப் பெண் யார் என்று இப்போது சுரமஞ்சரிக்கும் புரிந்தது. தான் இட்டுக் கொண்டிருந்த கோலத்தை அரைகுறையாக நிறுத்திவிட்டு ஆவலோடு இளங்குமரனுக்கு அருகே வந்த அந்தப் பெண் அவன் தன்னை நலம் விசாரித்ததற்கு மறுமொழி கூறாமல், அதிக அக்கறையோடு அவனை வேறொரு கேள்வி கேட்டாள்:

''உங்கள் பக்கத்தில் நிற்பது யார்?''

''என்னுடைய வாழ்க்கைத் துணைவி சுரமஞ்சரி.''

இளங்குமரனுடைய நாவிலிருந்து மிகத் தெளிவாக ஒலித்த இந்த வார்த்தைகளைக் கேட்டு முல்லையின் கையில் இருந்த கோலப் பேழை கீழே நழுவி விழுந்து உடைந்தது. இளங்குமரன் இதைக் கண்டு அதிர்ச்சியடைந்தான்.

''இதென்ன காரியம் செய்தாய்? முல்லை? கோலப் பேழையை உடைத்து விட்டாயே?''

''ஆம். உடைத்துத்தான்விட்டேன்.''

''அரைகுறையாக நிறுத்தியிருக்கிற இந்தக் கோலத்தை இனி எப்படி முடிப்பாய்...?''

''....................''

''உனக்கு எப்போதுமே இந்தப் பரபரப்பும் பதற்றமும் கூடாது முல்லை.''

''................''

பதில் பேசாமல் தன் முகத்தையே பார்த்துக்கொண்டு சிலையாக நின்ற முல்லையின் கண்களில் நீர் பெருகி வருவதை இளங்குமரன் கண்டான். இப்படி நடக்கும் என்றுதான் அவன் எதிர்பார்த்தான். எதிர்பார்த்தபடியே நடந்தது. ஏதோ கோபம் நிறைந்த பேச்சைப் பேசுவதற்குத் துடிப்பது போல் முல்லையின் செவ்விதழ்கள் துடித்தன. எதிரே நிற்கிற அவளுடைய முகம் உணர்ச்சிகளின் மயானமாகி அங்கே எந்த ஆசைகளோ எரிந்து அழிவதையும் அவன் புரிந்து கொள்ள முடிந்தது. ஒரு கணம் பின்னால் திரும்பிப் பக்கத்தில் நின்ற சுரமஞ்சரியின் மேல் தன் பார்வையைப் படரவிட்டான். அவள் பயந்தாற் போல அவன் முதுகுக்குப் பின் ஒண்டி நின்று கொள்ள முயன்றுகொண்டிருந்தாள். மறுபடி அவன் முன் பக்கம் முல்லையைத் திரும்பிப் பார்த்தபோது,

''ஒரு விநாடி நில்லுங்கள். இதோ வருகிறேன்'' என்று அவனிடம் சொல்லிவிட்டு நடைப் பிணம் போலத் தளர்ந்து உள்ளே சென்றுள் முல்லை. அவள் வீட்டுக்குள்ளே சென்றிருந்த நேரத்தில் சுரமஞ்சரி மெல்லிய குரலில் அவன் காதருகே ஒரு கேள்வி கேட்டாள்.

''இது என்ன வேதனை? இந்தப் பெண் ஏன் இப்படிக் கண்கலங்குகிறுள்?''

''இதன் காரணம் உனக்குத் தெரியத்தான் வேண்டுமோ?''

''அப்படி ஒன்றுமில்லை. கேட்கத் தோன்றியது. கேட்டேன்.''

''நீ எதைப் பெற்று மகிழ்ந்து கொண்டிருக்கிறாயோ அதைப் பெற முடியாமல் அழுகிறுள் அவள்.''

அவன் சுரமஞ்சரிக்கு இப்படிப் பதில் கூறிக் கொண்டிருக்கும் போதே முல்லை உள்ளிருந்து திரும்பி வந்து விட்டாள். ஒன்றும் பேசாமல் புயல் புறப்பட்டு வருவது போல் நடந்து வந்து தனக்கு முன்னால் அவள் கை நீட்டித் தன்னிடம் அளித்த பொருள்களை வாங்கிக் கொண்டு அவைகளை என்னவென்று பார்த்தான் இளங்குமரன்.

திருநாங்கூரில் குருகுலவாசம் செய்த காலத்தில் அவளுடைய பிறந்த நாள் மங்கலத்துக்குப் பரிசாக அவன் அளித்த பாடல் உள்ள ஏட்டையும் அப்போது அவன் கொடுத்திருந்த நாகலிங்கப் பூவையும் இப்போது அவனிடமே திருப்பி அளித்திருந்தாள் அவள். அந்தப் பூ இதழ்கள் வாடிச் சருகாகியிருந்தன.

''முல்லை! நீ என்னுடைய நன்றிக்கு உரியவள். சிறு வயதிலிருந்தே உன் கைகளால் நான் பல நாள் உணவு பெற்றிருக்கிறேன். என்னுடைய உடம்பில் நான் புண்பட்டு வந்த போதெல்லாம்

நீ என் காயங்களை மருந்திட்டு ஆற்றியிருக்கிறாய். அப்படியெல்லாம் நன்றிக் கடன்பட்டிருந்தும் என்னுடைய இந்த உடம்பை நான் உனக்குக் கொடுக்க முடியாமல் போய் விட்டது. என் உடம்பையும் மனத்தையும் நான் இந்தப் பெண் கரமஞ்சரிக்குத் தோற்றுப் போய் இவளுக்காகத் தியாகம் செய்து விட்டேன். யாரை அதிகமாக வெறுக்கிறோமோ அவர்கள் மேல் கூட அன்பு செலுத்தத் துணிந்துவிட வேண்டுமென்றுதான் இந்தப் புதிய வாழ்க்கைக்கு நான் என்னைத் தியாகம் செய்தேன். அதே போல நீயும் இப்போது ஒரு தியாகம் செய்ய வேண்டும். நான் என்னால் அதிகமாக வெறுக்கப் பெற்ற இவளுக்கே என்னை விட்டுக் கொடுத்துத் தியாகம் செய்தது போல நீ உன்னால் அதிகமாக விரும்பப்பட்ட என்னை உன் விருப்பங்களிலிருந்தும், ஆசைகளிலிருந்தும், கனவுகளிலிருந்தும் விட்டுக் கொடுத்துத் தியாகம் செய்துவிட வேண்டும். இது உன்னால் முடியும். என்னுடைய நன்றியின் நினைவாக இந்தப் பாடலும், இந்தப் பழம் பூவும் உன்னிடம் இருப்பதைக்கூட நீ விரும்பவில்லையா?''

''நன்றி என்ற வார்த்தைக்கு இனிமேல் அர்த்தமில்லை. என்னை ஏமாற்றிவிட்டு என்னுடைய அழகைப் புகழ்கிற நன்றி எனக்கு வேண்டாம். இந்த ஏட்டிலிருக்கும் பாடலில் அப்படிப்பட்ட நன்றிதான் இருக்கிறது! நன்றியை எதிர்பார்க்கிற இடத்திலிருந்துங்கூட ஏமாற்றங்கள் மட்டுமே கிடைக்கிற உலகம் இது. மெய்யான நன்றி இந்த உலகத்திலேயே இல்லை. ஏட்டிலும், எழுத்திலும் புகழ்கிற இந்தப் போலி நன்றிக்காகவா இத்தனை காலம் நான் ஏங்கிக் கிடந்தேன்? எதை எதையெல்லாம் ஆசைப்பட்டுத் தவித்தேனோ அதையெல்லாம்கூடத் தியாகம் செய்யச் சொல்லுகிறீர்களே? இந்த நன்றியைத் தியாகம் செய்வதுதானா எனக்குப் பெரிய காரியம்?''

''உன்னைப் போன்றவர்களின் தியாகம்தான் இந்த உலகத்துக்கு அழகிய சரித்திரங்களைக் கொடுக்கிறது முல்லை! கணவன் மனைவி என்ற உறவுகளை அடைவதும் இழப்பதும் நம்முடைய உடம்பின் வாழ்க்கைக்கு அப்பால் பொய்யாய் மறைந்து போகிற சாதாரண அநுபவங்கள். குணங்கள்தான் என்றும் நிலைத்து வாழப் போகின்றவை. குணங்களால் வரும் புகழ்தான் காவியங்களில் வாழும். காலமெல்லாம் வாழும். அந்த நிறை வாழ்வுக்குத்தான் நான் ஆசைப்படுகிறேன்.''

''என்னைப் போன்ற பேதைப் பெண்ணுக்கு என்றும் எதனாலும் தணியாத குறை வாழ்வை அளித்து விட்டு நீங்கள் மட்டும் நிறைவாழ்வு வாழ ஆசைப்படுகிறீர்களே?'' என்று அவனை நோக்கிக் கூறிக் கொண்டே வந்தபோது முல்லையின் குரலில் அழுகை ஊடுருவிப் பேச்சைத் தடைப்படுத்திற்று. கண்களில் இடையறாத நீர்ப் பெருக்கு உடைந்து பெருக அவள் தனக்கு முன் தவித்துக் கொண்டு நிற்பதைப் பார்த்து இளங்குமரன் திகைத்தான்.

அழுகையால் உடைந்து தளரும் குரலில் அவளே மேலும் கூறினாள்:

''நீங்கள் என்னுடைய வாழ்வில் இறுதி வரை எனக்குத் துணையாக வர முடியாமல் இந்தப் பெருமாளிகைப் பெண் உங்களை நடுவழியிலேயே என்னிடமிருந்து பிரித்துக் கொள்வாள் என்பது அன்றே எனக்குத் தெரியும். முதன் முதலாக இந்திர விழாவின் போது பூத சதுக்கத்தில் படையலிடுவதற்காக என்னுடன் எனக்குத் துணையாக வந்து முழு வழிக்கும் துணை வராமல் பாதி வழியிலேயே என்னை மறந்துவிட்டு இவளோடு இவள் பல்லக்கில் ஏறிப் போனவர் தானே நீங்கள்?''

''உன்னுடைய துக்கத்தில் சிறு குழந்தை போல் நீ எதை எதையோ இணைத்துப் பேசி என்மேல் குற்றம் சுமத்துகிறாய்? உன் வேதனைகளை நான் உணர்கிறேன். ஆனால் உன்னை எப்படி ஆறுதல் கொள்ளச் செய்வதென்றுதான் எனக்குத் தெரியவில்லை.''

''எனக்கு யாருடைய ஆறுதலும் வேண்டாம். நான் அழுது அழுது சாவதைத்தவிர எனக்கு வேறு வழியில்லை'' என்று கூறிவிட்டுக் கிளர்ச்சியற்ற தளர் நடையாய் நடந்து அவள் வீட்டுக்குள் போவதற்குத் திரும்பிய போது,

''இந்தக் கோலத்தை முடிக்காமல் இப்படி அரைகுறையாக விட்டுப் போகிறாயே முல்லை?'' என்று இளங்குமரன் அவளைக் கேட்டான்.

''இந்தக் கோலத்துக்குத் தொடக்கம்தான் உண்டு. இறுதி தெரியவில்லை. முடிவும் இல்லை. நான் இதை முடிக்கப் போவதுமில்லை'' என்று போகிற போக்கில் அழுகைக்கிடையே அவள் கூறிவிட்டுப் போன மறுமொழி அவனுடைய நெஞ்சின் ஆழத்தில் போய்த் தைத்துப் புண்படுத்தியது.

அவளுடைய அந்த மறுமொழியில் அவனுடைய வாய்ச் சொற்கள் கேட்ட கேள்விக்கும் பதில் இருந்தது. மனம் கேட்ட கேள்விக்கும் பதில் இருந்தது. அந்தச் சொற்களின் பொருள் எல்லை எவ்வளவுக்கு நீள்கிறது என்று புரியாமல் தவித்து நின்றான் அவன். சுரமஞ்சரியும் அவனுக்குப் பின்னால் மருண்டு போய் நின்றாள். **(அடுத்த இதழில் நிறையும்)**


பவழத்தீவு
கதை: வாண்டுமாமா
சித்திரம்: ரமணி
13
சூலபாணியின் ஆட்களால் தாக்கப் பட்டுப் படகையும் படகோட்டிகளையும் இழந்து தன்னந் தனியனாக்கப் பட்ட சேனாபதி நந்திவர்மர், இளவரசன் - ஆனந்தன் என்ன ஆனானோ என்று கவலையோடு தேடிக் கொண்டு வருகிறார். அப்போது கந்தனால் செய்தி முடிந்து அனுப்பப் பட்ட அணிலைக் காட்டுப் பூனை துரத்திக் கொண்டிருப்பதைக் காண் கிறார்......
எத்தனை பெரிய காட்டுப் பூனை? சீறுகிறதே.
என்னவா இதுவும் பூனை புலியாகுமா? பயந்து ஓடி விட்டது.
அடடே! கந்தனின் தோழனல் லவா நீ?
அவன் தோளை விட்டுக் கீழே இறங் கவே மாட்டாயே! கந்தன் எங்கே?



ஓ..இது என்ன? உன் உடலில் எதையோ கட்டி இருக்கிறது!
இளவரசரின் செய்தியல்லவா? ஒரு குழியில் விழுந்து கிடக்கிறோம். உடனே வரவும்...
சின்ன அணிலே! அந்த இடத்தைக் காட்டு. அவர்களைக் காப்பாற்றியாக வேண்டும்.
ஆனந்தா! இத்தனை ஆழ-மான குழிக்குள் எப்படி விழுந்-தீர்கள்?
எல்லாம் விவரமாக மேலே-வந்து கூறுகி-றோம்.
இதோ வந்து விட்டேன்.
காட்டுக் கொடிகளால் கயிறு தயாரித்து...


ஆனந்தா! இதைப் பற்றிக் கொண்டு மேலே ஏறி வாருங்கள்.
கந்தா, நீ மான் குட்டியோடு ஏறி வா.
கந்தா, உன் அன்பில் செய்த உதவியை எங்களால் மறக்கவே முடியாது.
நடந்தவைகளை ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொண்டார்கள்.
நம் படைகளை விட்டுப் பிரிந்து வெகு தூரம் வந்து இப்படி யாகிவிட்டது. வந்த காரியமும் கைகூடவில்லை. திரும்பிச் செல்லவா மனமும்....
ஏன் திரும்ப வேண்டும்? இன்னும் கொஞ்ச தூரம்தான். நான் கட்டு மரம் தயாரித்துத் தருகிறேன். கவலைப் படாதீர்கள்.
சேனாபதியாரே, கந்தன் சொல்வது தான் சரி. பின் வாங்கக் கூடாது. எழுந்திருங்கள்.

தொடரும்


யாரோ இவள் யாரோ?

என யாரும் கேட்க, எவரும் வியக்க...



...உங்கள் மேனியெழிலை மிளிரச் செய்வது

செங்கமல வண்ண ப்ரீஸ்




கமலவண்ண ப்ரீஸ்...கொஞ்சிக் குழைந்து உங்கள்
உரிமைப் பொலிவுக்கு மெருகிழைக்க வந்துதித்த வில்லே...
...நேச மொழி பேசிவரும் வாசனைச் செல்வம்.

எழிலுக்குரிய ஒளிபெறுவீர்! அழகுதிலகம் நீங்களே
என்றெவரும் பேசிடும் வண்ணம் மெருகுமிளிரும்
உங்கள் மேனிவண்ணம்...செங்கமலவண்ண
ப்ரீஸ் செயல்வண்ணம்!

லண்டனிலுள்ள இராஸ்மிக் சார்பாக இந்துஸ்தான் லீவர் லிமிடெடினால் இந்தியாவில் தயாரிக்கப்பட்டது. BZ. 20-X52 TM

காணாமல் போன கடிதங்கள்



பஞ்சாப் முதன் மந்திரி திரு கெய்ரான் அவர்களுக்கு,

நீங்கள் அமைத்திருக்கும் மிகப் பெரிய மந்திரி சபையைப் பார்த்துப் பல பேர்கள் பலவிதமாகப் பேசி நகைத்து வருகிறார்கள். சிலர் கண்டித்தும் வருகிறார்கள். 90 காங்கிரஸ் எம். எல். ஏ.க்கள் கொண்ட சபையில் 30 பேருக்கு நீங்கள் மந்திரிப் பதவி, டெபுடி மந்திரிப் பதவி, காரியதரிசிப் பதவி என்று கொடுத்திருக்கிறீர்களாம்! இதுதான் ஜனநாயகமா என்று கேட்டு உங்களைக் குடைகிறார்கள்! மீதியுள்ள 60 பேர் என்ன பாவம் பண்ணினார்கள்? அவர்களுக்கும் ஏதாவது பதவி கொடுத்து மந்திரி சபையை முழுமையாக்குவது தானே? கொடுப்பதற்கு இலாக்காக்களா இல்லை?

என்வரையில் நீங்கள் முப்பது பேருக்குப் பதவி கொடுத்தது தவறே அல்ல. மந்திரிகள் நிறையப் பேர் நடமாடினால் தானே என் போன்ற பூமாலை வியாபாரிகள் நாலு ரூபாய் சம்பாதிக்கலாம். ஒரு வேளை பஞ்சாபில் பூமாலைகள் கட்டுவோர் குறைவா? இல்லை, தெரியாமல் கேட்கிறேன். ஓர் அவசரத்துக்கு 90 மாலைகள் கிடைப்பது கஷ்டமா? ஒரு வேளை பூமாலைப் பஞ்சத்தை முன்னிட்டுத் தான் நீங்கள் மந்திரிசபையின் எண்ணிக்கையை முப்பதுடன் நிறுத்திக் கொண்டு விட்டீர்களோ?



அடுத்தாற் போல் சென்னையைப் பாருங்கள்! இங்கு மாலைக்கோ பூவுக்கோ பஞ்சமில்லை. அப்படியிருந்தும் 9 மாலைகளுக்கு மேல் செலவாகாத விதத்தில் — ஏதோ சொந்தப் பணத்தில் சிக்கனம் பிடிப்பது போல் எண்ணிக் கொண்டு 9 பேரோடு மந்திரி சபையை முடித்துக் கொண்டு விட்டார்கள்! இவர்களை எவ்வளவோ நம்பியது, எடுத்த எடுப்பிலேயே ஏமாற்றத்தோடு தொடங்கியிருக்கிறது. இன்னும் போகப் போக என்னென்ன ஏமாற்றங்களோ......! சென்னை மந்திரி சபையைப் பார்க்கும் போது நீங்கள் பரவாயில்லை என்றுதான் சொல்லுவேன். போயும் போயும் 9 மாலைகளுக்கு இங்கு என்ன கிடைத்து விடும்?

திரு கெய்ரான் அவர்களே, யார் என்ன சொன்னாலும் கேட்காதீர்கள். மாலைச் செலவைப் பாராமல் மளமளவென்று மீதியுள்ள அறுபது பேரையும் மந்திரிகளாக்கி விடுங்கள். தனியாக ஒரு 'ஸ்பெஷல்' மாலை கட்டிக் கொண்டு வந்து உங்களுக்குப் போடுகிறேன்.

இப்படிக்கு,

ஒரு பூமாலை வியாபாரி.

* * *

இந்தியாவுக்கு விஜயம் செய்த அமெரிக்க ஜனாதிபதியாரின் மனைவியார் திருவாட்டி கென்னடிக்கு :

இந்நாட்டுக்கு விருந்தாளியாக நீங்கள் வந்து இறங்கியதும், நான் எவ்வளவோ மனக்கோட்டைகள் கட்டிக் கொண்டிருந்தேன். இந்தத் தமிழ் நாட்டுக்கு நீங்கள் வருவீர்களானால், இங்கு எங்களுடைய இணையற்ற தின்பண்டமாக விளங்கும் இட்டிலியில் ஒரு நாலைந்து கடச்கடத் தட்டில் வைத்து, சட்னி, சாம்பார், மிளகாய்ப் பொடி இவற்றையும் வைத்து உங்களைச் சாப்பிடச் சொல்ல வேண்டுமென்று நினைத்தேன். ஆனால், என்ன காரணத்

தாலோ, தமிழ்நாடு விஜயத்தைத் தங்களுடைய சுற்றுப் பிரயாணத் திட்டத்தில் சேர்க்காமல் விட்டு விட்டார்கள். இதுதான் போகட்டுமென்றால், புது டெல்லியில் தங்களுக்கு இந்திய முறையில் விருந்து அளித்தார்களே! அதிலேயாவது, தமிழகத்தின் சுவை மிகு, மணமிகு சூடான இட்டிலி சாம்பாருக்கு இடம் அளித்தார்களா?

ராஷ்டிரபதி பவனில் தங்களுக்கு அளித்த விருந்தில், ரஸகுல்லா, குலோப் ஜாமூன், பர்பி இவற்றையே கொண்டு வந்து வைத்து இதுதான் இந்தியத் தின்பண்டங்கள் என்று சாதித்திருக்கிறார்கள். நீங்களும், இதை நிஜமென்று நம்பி இரண்டொரு ரஸகுல்லாக்களை ருசிபார்த்ததோடு திருப்தியடைந்து விட்டீர்கள்! இதை நினைக்கும்போது தான் எனக்கு வெறும் மிளகாய்ப் பொடியைச் சாப்பிட்டது போன்று வயிறு எரிகிறது!

ஓர் இட்டிலிக்கு முன் ரசகுல்லாவோ, குலாப் ஜாமூனோ, பர்பியோ எதிர்த்து நிற்கவே முடியாது. அப்படி எதிர்த்து நின்றால் அவையெல்லாம் சட்டினியாகிவிட வேண்டியதுதான்!



இட்டிலி யில்லாத எந்த விருந்தும் இந்திய விருந்தாகி விடாது. இதை நீங்கள் இப்போதாவது தெரிந்துகொள்ளுங்கள்.

போனதெல்லாம் போகட்டும். மறுபடியும் நீங்கள் இந்நாட்டுக்கு வரும்போது சொல்லி அனுப்புங்கள்! டெல்லி விமானக் கூடத்திலே வந்து இறங்கியதும், சுடச்சுட இட்டிலி சாம்பாரின் மணம் தங்களை வரவேற்கும்படி நானும் தயாராக அங்கு வந்து விடுகிறேன்.

தங்களிடம் அபிமானமுள்ள,

இட்டிலிப் பிரியன்.

* * *

புது தில்லி, வதந்தி நிருபர்களுக்கு. ஒரு சென்னைக் காக்காய் கரைவது :

கா...கா...கா...க்ரா...! அன்பான வதந்தி நிருபர்களே!

''இந்த முறை மந்திரிகளின் ஜாபிதாவைத் தயாரிப்பதில் பிரதமர் நேரு கண்டிப்பாக நடந்து கொள்ளக் கூடும் என்று தெரிகிறது'' என்பதாக ஒரு வதந்திச் செய்தியை நீங்கள் தூக்கிப் போட்டிருக்கிறீர்களே, இதைப் பார்த்துத் தான் அப்படியே நான் மனங் கரைந்து போனேன்.

தேர்ந்தெடுக்கப்பட்ட காங்கிரஸ் எம். பி.க்கள் ஒவ்வொருவரும் தமது பெயர் மந்திரி ஜாபிதாவில் இடம் பெறுமா என்று எதிர்பார்ப்பது இயற்கை. சில புள்ளிகள் இதனால் நேருஜியின் கவனத்தைக் கவர என்னென்ன வித்தைகளெல்லாமோ செய்து வருவதாக இங்கெல்லாம் கூட பலமான 'வதந்தி' அடிபட்டு வருகிறது.

டெல்லிக்கே சென்று அங்கேயே 'முகாம்' போட்டுக் கொண்டிருப்பவர்கள் பலப் பலர். நேரு நடமாடும் இடங்களாகப் பார்த்துக் குறுக்கே செல்பவர்கள் பலர்; நேருஜியின் கண்களில் தென்படும்படியாகத் தம்மைப் பற்றிய புகைப்படங்களைப் பத்திரிகைகளில் பிரசுரிக்கச் செய்பவர்கள் பலர்; இப்படிப் பலப் பல விஷயங்களில் நேருஜியின் கவனத்தைக் கவருவது தெரிந்ததே. ஒன்றுமில்லை; மத்திய நிதி மந்திரிப் பதவிக்கு அடிபடும் பெயர்களின் எண்ணிக்கையைப் பார்த்தாலே பிரமிக்கத் தான் வேண்டியிருக்கிறது. இதற்கு அடுத்தபடியாகக் கல்வி மந்திரிப் பதவி; அதற்கும் அடுத்தபடியாக வர்த்தகத் தொழில் மந்திரிப் பதவி! யார் கழுத்தில் எந்தப் பதவி மாலை விழப்போகிறதோ! எவ்வளவு நேரம் கழுத்தை நீட்டியவாறு கா. எம். பி.க்கள் காத்திருப்பது?

இது சம்பந்தமாக அங்கு எந்தெந்த ராஜ்யத்துக் காக்கைகள் மும்முரமாகப் பறந்து கொண்டிருக்கின்றன? — இவை பற்றி ஒன்றிரண்டு வதந்திகளாவது நீங்கள் வெளியிட்டால் மிகுந்த உதவியாயிருக்கும். டெல்லியில் நிரந்தரமாகவே படே படே காக்காய்கள் உண்டு என்பது எனக்குத் தெரியும். அவற்றோடு போட்டியிட்டால் மற்றக் காக்காய்கள் தோற்றோட வேண்டியதுதான். இருந்தாலும் ஏதோ ஒரு நப்பாசை..... எனவே, டெல்லியின் காக்காய் வட்டாரத்தில் என்ன பேசிக்கொள்ளப்படுகிற தென்பதை ஒரு (வ)தந்தி மூலம் தெரிவித்தால் நலமாயிருக்கும்.

இப்படிக்கு,

ஒரு பட்டணத்துக் காக்காய்.


கால்கேட்டின் மூலம்
நாள் முழுவதும் வாய் துர்நாற்றத்தை
அகற்றி பற்கள்
சொத்தையாவதையும் தடுங்கள்!
ஏனெனில், ஒரே தேய்ப்பில் கால்கேட் டென்டல் கிரீம் துர்நாற்றத்தையும் சொத்தையையும் உண்டாக்கும் கிருமிகளில் 85 சத விகிதத்தை ஒழிக்கிறது.
கால்கேட் உடனடியாக வாய் துர்நாற்றத்தை 10ல் 7 சந்தர்ப்பங்களில் அகற்றுகிறது என்பதையும், உணவு சாப்பிட்டவுடன் கால்கேட்டினால் பற்களைத் துலக்கும் முறையால், பற்பசை வரலாற்றிலேயே இதுவரை கண்டிராத பெருமளவில், ஏராளமானவர்களுக்குச் சொத்தை ஒழிக்கப்படுகிறது என்பதையும் விஞ்ஞான பரிட்சைகள் நிரூபித்துள்ளன! இந்த சாதனை கால்கேட் ஒன்றுக்குத்தான் உண்டு! சாப்பிட்டவுடன் வாயை கொப்பளித்தால் மட்டும் போதாது—சாப்பிட்டவுடன் வழக்கமாக கால்கேட் டென்டல் கிரீமினால் உங்கள் பற்களை நன்றாகத் துலக்குங்கள். இதன் வீரியமும், ஊடுருவும் தன்மையுமுள்ள நுரை பற்களின் இடைவெளிகளிலே புகுந்து, சொத்தைக்கும், துர்நாற்றத்துக்கும் காரணமாக இருக்கும் அழுகிய பதார்த்த அணுக்களை அகற்றுகிறது.
கால்கேட்டின் நீடித்திருக்கும் நூதன நறுமணத்திற்காக, குழந்தைகள் அதனாலேயே பல் துலக்க விரும்புகிறார்கள்.
COLGATE DENTAL CREAM
வழக்கமாக கால்கேட் உபயோகித்தால், அது:
✔ துர்நாற்றத்தை அகற்றுகிறது
✔ சொத்தையைத் தடுக்கிறது
✔ பற்களை அதி வெண்மையாக வைத்திருக்கிறது
COLGATE TOOTH POWDER
நீங்கள் பற்பொடியை விரும்பினால், இந்த பலன்கள் அனைத்தையும் கால்கேட் டூத் பவுடர் மூலம் அடையலாம். ஒரு டப்பி பல மாதங்களுக்கு வரும்.
COLGATE
COLGATE DENTAL CREAM
பரிசுத்தத்திற்கும், வாயில் நறுமணம் கமழவும், வெண்ணிற பற்களைப் பெறவும் உலகத்திலேயே பெரும்பாலான மக்கள் மற்றெல்லா பற்பசைகளையும் விட கால்கேட்டையே பெரிதும் விரும்புகிறார்கள்.



புகைப் படம்: சென்னை உயர் நீதி மன்றம் கனம் பிரதம நீதிபதி அவர்களின் அனுமதியுடன் பிரசுரிக்கப்பட்டது


ஸர் டி. முத்துசாமி அய்யர்

சென்னை உயர் நீதி மன்றக் கட்டடத்திலே இரண்டு அதிசயமான தீபங்கள் இருந்து வருகின்றன. ஒன்று, இரவில் வரும் கப்பல்களுக்கு வழிகாட்டுவதற்காக அந்தக் கட்டடத்தில் அமைத்திருக்கும் கலங்கரைத் தீபம். மற்றொன்று, கட்டடத்தின் உள்ளே நடு நாயகமான மேன்மாடிக் கூடத்திலே நீதிக்கு என்றும் வழிகாட்டும் முறையில் அமைத்திருக்கும் ஸர். டி. முத்துசாமி அய்யர் அவர்களின் உருவச் சிலையாகும்.

ஸர் டி. முத்துசாமி அய்யர் அவர்களின் சரித்திரமே ஒரு விளக்கடியில் தானே ஆரம்பமாயிற்று? தமிழ் நாட்டில் எந்தப் பள்ளிக்கூடக் குழந்தையைக் கேட்டாலும் உடனே, ''ஏழை முத்துசாமி அய்யர் தெரு விளக்கடியில் வாசித்து முன்னுக்கு வந்த'' பாடத்தை ஒப்புவித்து விடும் அல்லவா?

நீதிபதி முத்துசாமி அய்யர் அவர்கள் 1832-ம் ஆண்டு ஜனவரி 28-ந் தேதி திருவாரூருக்குப் பக்கத்தில் உள்ள உச்சுவாடி என்ற கிராமத்தில் பிறந்தார். அவருடைய தந்தையின் பெயர் வேங்கட ரமண சாஸ்திரி. தாயாரின் பெயர் ரங்கநாயகி அம்மாள். முத்துசாமிக்கு ஒரு மூத்த சகோதரர் மட்டும் உண்டு. சகோதரிகள் இடையாது. ஆரம்பக் கல்வி பெறும் காலத்திலேயே தாயார் இறந்து விடவே சிறுவனின் கஷ்டம் தாளவொண்ணாததாகி விட்டது. மூத்த சகோதரரும் தகப்பனாரும் அளித்த சிறு ஆதரவு போதாமல், உச்சுவாடி கிராமக் கணக்குப் பிள்ளையினிடம் கணக்குகள் எழுதி உதவும் வேலையில் முத்துசாமி அமர்ந்தார். இதற்கு மாதம் ஒரு ரூபாய் சம்பளம். இதைக் கொண்டு அவ்வப்போது புத்தகங்கள் வாங்கிப் படித்து வந்தார்.

ஒரு நாள் திருவாரூர் தாசில்தார் முத்துசாமி நாயக்கர் என்பவர், கணக்குப் பிள்ளையின் கணக்குகளைத் திடீரென்று பரிசோதனை செய்ய வந்தார். தாசில்தாரின் கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாமல் தவித்தபோது எட்டு வயதுச் சிறுவனாக இருந்தபோதிலும் அருகில் இருந்த முத்துசாமி, சர்வே நம்பர்கள், கிஸ்தி ரிஜிஸ்தர், இவ்விதக் குறிப்பேடுகளைத் தேடிக் கொண்டு வந்து கொடுப்



பதைப் பார்த்துப் பிரமிப்படைந் தார். சிறுவனைத் தட்டிக் கொடுத் துப் படிப்பதற்குச் சில புத்தகங்களை வாங்கிக் கொடுத்தார். சிறிதளவு பண மும் கொடுத்து உதவினர். அதற்கு அதிக மாக அவராலும் ஒன்றும் செய்ய முடிய வில்லை. ஏனெனில் தாசில்தாருக்கே அப்போது மாதச் சம்பளம் இருபது ரூபாய்தான்! சிறுவன் முத்துசாமிக்குச் சிறு உதவியே பேருதவியாக விளங் கிற்று. தாசில்தார் முத்துசாமி நாயக்கர் வாங்கிக் கொடுத்த புத்தகங்களைத்தான் திருவாரூர் பள்ளிக்கூடத்தில் முத்து சாமி படித்தார். தெரு விளக்குகளின் அடியில் அமர்ந்து மட்டும் அவர் இந்தப் புத்தகங்களைப் படித்துவிட வில்லை. சில பெரிய மனிதர்களின் வீட்டுப் பிள்ளை களுக்கு உபாத்தியாயர்கள் 'ட்யூஷன்' சொல்லிக் கொடுப்பார்கள். அவற்றை வீட்டுக்கு வெளியே திண்ணை ஓரமாக நின்று கொண்டு முத்துசாமி குறித்துக் கொள்வார். செல்வந்தர்களின் வீடு களுக்குள் செல்லவொட்டாமல் அவ ருடைய ஏழைமை அவரைத் தடுத்திருக் கிறது. இப்படிக் கஷ்டப்பட்டுப் படித்த தெல்லாம் வீண் போக வில்லை. திரு வாரூர் பள்ளியில் எல்லா வகுப்புக்களி லும் முதல் பையனாக அவர் முன் வந்த தும், தாசில்தாரும் இன்னும் சிலரும் அவருக்கு உதவி தேடிக் கொடுத்துச் சென்னைக்கு அனுப்பி வைத்தார்கள். சென்னையில் ராஜதானி உயர்தரப் பள் ளியில் சேர்ந்து படித்தார் முத்துசாமி. இங்கும் அவர் திறமை சுடர் விட்டது. ராஜதானிப் பள்ளியிலும், பின்னர் கல்லூரியிலும் ஒவ்வொரு வகுப்பிலும் முதல் மாணவர் என்ற பெயர் பெற்றார்.


சென்னை ராஜதானிக் கல்லூரியில் ஒரு வியாசப் போட்டியில் கலந்து கொண்டு 'எல்பின்ஸ்டன்' பரிசுத் தொகையாக ஐந்நூறு ரூபாய் பெற்றதும் இவருடைய புகழ் இன்னும் பரவிற்று.

அதன்பின் அரசாங்க ஊழியத்தில் சேர்ந்து பொறுப்பான பதவிகள் பல வகித்து வந்தார். உத்தியோகம் பார்த்தபடியே சட்டக் கலை பயின்று அதிலும் ராஜதானியின் இரண்டாவது மாணவன் என்ற கீர்த்தியை அடைந் தார். அரசாங்க ஊழியத் துறையில் அவர் வகித்த பதவிகளில், ரெவினியூ அதிகாரி, கல்வி அதிகாரி, துணை கலெக் டர், சென்னை மாகாண மாஜிஸ் டிரேட், ஜில்லா முன்சீபு ஆகியவற்றைச் சிறப்பாகக் குறிப்பிட வேண்டும். மது ரையில் அவர் ஜில்லா முன்சீபாக விளங் கியபோது வெளியிட்ட சில தீர்ப்புக்கள் பிரபலமடைந்தன. அதன் மீது 1878ம் ஆண்டு அரசாங்கம் அவரை உயர்நீதி மன்றத்தில் நீதிபதி பதவி ஏற்கும்படி கேட்டுக் கொண்டது. முதன் முதலில் சென்னை நீதி மன்றத்தில் ஓர் இந்தியர் நீதிபதியாகப் பதவி ஏற்றவர் ஸர் முத்து சாமி அய்யர்தான். சுமார் பதினேழு ஆண்டுகள் வரை திரு அய்யர் அவர்கள் நீதிபதியாகப் பணியாற்றி வந்தார்கள். இந்தப் பதினேழு ஆண்டுகளையும், ''சென்னை உயர்நீதி மன்றத்தின் சரித் திரத்தில் பொற்காலம்'' என்று சட்டக் கலைஞர்கள் கூறியுள்ளார்கள். ஏனெ னில், நீதிபதி என்ற முறையில் அவர் வெளியிட்ட பல அரிய கருத்துக்களும், வழக்கு விசாரணைகளில் அவர் கடைப் பிடித்து வந்த நியதிகளும் அவ்வளவு தூய்மையுடன் உயர்ந்து விளங்கிவந்தன.

ஸர் எர்ட்லி நார்ட்டன் என்ற சென்னை நீதிமன்ற பிரபல வழக்கறிஞர் ஸர் முத்துசாமி அய்யர் அவர்கள் நீதித் துறையில் எவ்வாறு சிறந்து விளங்கி, மற்றவர்களுக்கும் வழிகாட்டி வந்தார் என்பதை விவரித்துப் பல நூல்களும் கட்டுரைகளும் எழுதியிருக்கிறார்கள். அவை நீதிக் கலையின் சிறந்த இலக்கியங் களாக இன்றும் விளங்கி வருகின்றன.

ஸர் முத்துசாமி அய்யர் அவர்கள் சங்கீதம் முதலிய நுண் கலைகளிலும் பெரிய மேதையாகவே விளங்கி வந் தார். ஒரு சமயம் சென்னை விக்டோரியா மண்டபத்தில் ஐரோப்பிய சங்கீதத்துக் கும் இந்திய சங்கீதத்துக்கும் உள்ள வேற்றுமைகளை விளக்கிப் பிரசங்கம் செய்தார். அதைக் கேட்டு ஐரோப்பிய சங்கீத நிபுணர்களும் இந்திய முறை சங்கீத வித்துவான்களும் பிரமித்துவிட் டார்கள். ஸர் முத்துசாமி அய்யர் அவர்கள் தமது வாழ்க்கையில் குறுக் கிட்ட துன்ப துயரங்களை யெல்லாம் கடந்து மேன்மை பெற்ற நிலையிலும் அடக்கமே உருக்கொண்டு திகழ்ந்தார். இதற்கெல்லாம் அவருக்கு வழிகாட்டி யாக இருந்து வந்த நூல் ஒன்று உண்டு. அது வேறு எதுவும் இல்லை. திருக் குறளேயாகும். திருக்குறளைப் படித்து அதன்படி செயல்படுவார்களானால் எவ ரும் மேன்மை அடைய முடியும், எந்தக் கஷ்டங்கள்நேரிடினும் அவற்றை வெற்றி பெற முடியும், சிறந்த அறிவாளியாக வாழ முடியும் என்பதற்குத் திரு முத்து சாமி அய்யரின் வாழ்க்கையே ஒரு பிர மாணமாகும். வள்ளுவர் வாக்கு வழியி லேயே வாழ்க்கையை நடத்தி அவர் சிறப்புப் பெற்றார்.

தமிழகத்தின் இத்தகைய ஒப்பற்ற புதல்வருக்கு, தரும தேவதையின் உறை விடமாகக் கருதும் நீதிமன்றத்திலே சிலை செய்து வைத்த உயர்நீதி மன்றப் பெரியோர்களின் மாண்பையும் இங்கு நாம் போற்ற வேண்டியது நம்முடைய கடமையாகும். — கதிர்



வது ஒரு டிக்கெட் எடுத்து என்னை அனுப்பப் போறியா? இல்லே, நானு நாலு வீட்டிலே பிச்சை எடுத்துத்தான் கங்கையிலே முழுகணுமா?''

அலமுவுக்குக் கோபம் வருவது புதிதல்ல. ஆனால் குடும்பத்தி லிருந்து தன்னைத் தனியே பிரித்துக் கொண்டு போவது புதிது. அம்மாவின் இந்த விந்தைப் புதிருக்கு என்ன காரணம் என்று மூளையை உடைத்துக் கொள்ளச் சுந்தரத்துக்கு நேரம் இல்லை. இன்னும் அரை மணி நேரத்தில் அவர் அலுவலகத்தில் இருந்தாக வேண்டும். இங்கிலாந்திலிருந்து வந்திருக்கும் ஒரு வர்த்தகப் பிரமுகரை அவர் வரவேற்றாக வேண்டுமே!



''ஏம்மா, இதுவரை நாங்கள் நீ கீறிய கோட்டைத் தாண்டி இருக்கிறோமா? இப்போ மட்டும் உனக்கென்ன பெரிதாகச் சந்தேகம் வந்துடுத்து? உனக்குக் காசிக்குப் போயாகணும். அவ்வளவுதானே? பேஷாப் போயிட்டு வாயேன்'' என்று அப்பொழுது தப்பித்துக் கொண்டு விட்டார் சுந்தரம்.


அலமு அப்படியே சுர்ரென்று உட்கார்ந்து விட்டாள். அவளுக்கு விவரம் தெரிந்த நாள் முதலாய் அப்படிச் சுர்ரென்று இரண்டே முறைகள் தாம் உட்கார்ந்திருக் கிறாள். முதல் முறை அம்மாஜி உட்காரும்போது அவ ளுக்கு வயது இருபது.

ராஜாவைப் போல் ஆஜானுபாகுவாய், நிலமும் நீச்சம் நிறைந்தவராய் வில் வண்டி வைத்தா வுக்கு, வாழ்க்கை என்ன என்பதே தெரியாத பத்து வயதுச் சிறுமியாக இருந்தபோது வாழ்க் கைப்பட்டு, வீட்டுக்குப் பெரியமனுஷியாக ஆனாள் அலமு. பெரியவர்கள் என்று சொல்லிக்கொள்ள யாரும் இல்லாத அரண்மனை போன்ற வீட்டில் நுழைந்த போது அவளுக்குக் கண்ணைக் கட்டி விட்டதைப் போலத்தான் இருந்தது. ஐந்தாறு வருஷங்கள் போனதும் அவளுக்கு ஒவ்வொன் றாய் விளங்கியது. முதன்முறையாக விளங்கிய போது சுந்தரம் பிறந்தார். இரண்டாம் முறை விளங்கிய போது, பாலுவும் மூன்றும் முறையாக விளங்கிய போது வேணுவும் பிறந் தார்கள். அடுத்தடுத்து நான்கு வருஷங்களுக் குள்ளே மூன்று குழந்தைகளைப் பெற்றவுடன், 'எங்கள் அலமு இருபது வயசுக்குள்ளே ரொம் பப் பெரிய மனுஷியாயிட்டா! குடும்பத்தைக் கவனிக்க இனி நான் வேண்டாம். அலமு ஜமாய்த்து விட மாட்டாளா?' என்று வேடிக் கையாகச் சொல்வார் வைத்தா.



கண்ணீர் இதழ்கள்

வாசவன்



வது ஒரு டிக்கெட் எடுத்து என்னை அனுப்பப் போறியா? இல்லே, நாலு நாலு வீட்டிலே பிச்சை எடுத்துத்தான் கங்கையிலே முழுகணுமா?''

அலமுவுக்குக் கோபம் வருவது புதிதல்ல. ஆனால் குடும்பத்திலிருந்து தன்னைத் தனியே பிரித்துக் கொண்டு பொங்குவது புதிது. அம்மாவின் இந்த விந்தைப் புதிருக்கு என்ன காரணம் என்று மூளையை உடைத்துக் கொள்ளச் சுந்தரத்துக்கு நேரம் இல்லை. இன்னும் அரை மணி நேரத்தில் அவர் அலுவலகத்தில் இருந்தாக வேண்டும். இங்கிலாந்திலிருந்து வந்திருக்கும் ஒரு வர்த்தகப் பிரமுகரை அவர் வரவேற்றாக வேண்டுமே!

''ஏம்மா, இதுவரை நாங்கள் நீ கீறிய கோட்டைத் தாண்டி இருக்கிறோமா? இப்போ மட்டும் உனக்கென்ன பெரிதாகச் சந்தேகம் வந்துடுத்து? உனக்குக் காசிக்குப் போயாகணும். அவ்வளவுதானே? பேஷாப் போயிட்டு வாயேன்'' என்று அப்பொழுது தப்பித்துக் கொண்டு விட்டார் சுந்தரம்.

அலமு அப்படியே சுர்ரென்று உட்கார்ந்து விட்டாள். அவளுக்கு விவரம் தெரிந்த நாள் முதலாய் அப்படிச் சுர்ரென்று இரண்டே முறைகள் தாம் உட்கார்ந்திருக்கிறாள். முதல் முறை அம்மாதிரி உட்காரும்போது அவளுக்கு வயது இருபது.



ராஜாவைப் போல் ஆஜானுபாகுவாய், நிலமும் நீச்சும் நிறைந்தவராய் வில் வண்டி வைத்தாவுக்கு, வாழ்க்கை என்ன என்பதே தெரியாத பத்து வயதுச் சிறுமியாக இருந்தபோது வாழ்க்கைப்பட்டு, வீட்டுக்குப் பெரியமனுஷியாக ஆனாள் அலமு. பெரியவர்கள் என்று சொல்லிக்கொள்ள யாரும் இல்லாத அரண்மனை போன்ற வீட்டில் நுழைந்த போது அவளுக்குக் கண்ணைக் கட்டி விட்டதைப் போலத்தான் இருந்தது. ஐந்தாறு வருஷங்கள் போனதும் அவளுக்கு ஒவ்வொன்றாய் விளங்கியது. முதன்முறையாக விளங்கிய போது சுந்தரம் பிறந்தார். இரண்டாம் முறை விளங்கிய போது, பாலுவும் மூன்றும் முறையாக விளங்கிய போது வேணுவும் பிறந்தார்கள். அடுத்தடுத்து நான்கு வருஷங்களுக்குள்ளே மூன்று குழந்தைகளைப் பெற்றவுடன், 'எங்கள் அலமு இருபது வயசுக்குள்ளே ரொம்பப் பெரிய மனுஷியாயிட்டா! குடும்பத்தைக் கவனிக்க இனி நான் வேண்டாம். அலமு ஜமாய்த்து விட மாட்டாளா?' என்று வேடிக்கையாகச் சொல்வார் வைத்தா.



கண்ணீர் இதழ்கள்

வாசவன்

வேடிக்கை வினையாகி விட்டது: ஒரு நாள் வில் வண்டிப் பந்தயத்தில் கலந்து கொள்வதற்காக மன்னார்குடிக்குப் போனவர், வண்டி குடை சாய்ந்து, சக்கரம் மேலே ஏறி நிமிஷ நேரத்தில் பிராணனை விட்டார் வைத்தா. அந்தச் சமாசாரத்தைக் கேட்டவுடனேயே அலமு அப்படியே குர்ரென்று உட்கார்ந்துவிட்டாள். துணைக்கென்றிருந்த ஒரேயோர் ஆணி வேரையும் இழந்த பிறகு, இந்த இளமையையும், மூன்று குழந்தைகளையும் எப்படி வைத்துப் பரிபாலிக்கப் போகிறோம் என்ற பயம் அவளை முறுக்கிற்று.

அதற்கப்புறம் அவளுக்குக் குர்ரென்று உட்கார அவகாசமே இல்லை. இடையிலே ஐம்பது வருஷங்களாக எத்தனையோ இடிகளையெல்லாம் கண்டிருக்கிறாள். அப்பொழுதெல்லாம் ஓய்ந்து போகாதவள் இப்பொழுது இரண்டாவது முறையாகக் குர்ரென்று உட்கார்ந்து விட்டாள்.

பையன்களைப் படிக்க வைத்து, பாட வைத்து, முன்னுக்குக் கொண்டு வர அவள் எத்தனை பெரிய மனிதர்களின் காலைப் பிடித்திருப்பாள்? காலைப் பிடித்தால்தான் என்ன? அது பிச்சை கேட்பது போல் இராது. சகோதரனுக்கு ஒரு தங்கை அதிகாரத்துடன் ஆணை இடுவது போலிருக்கும்.

ஒவ்வொரு பிள்ளைக்கும் ஏற்றமான இடங்களில் சம்பந்தம் கொண்டாள். சுந்தரத்துக்கு வியாபாரத்தில் நோக்கம் இருந்தது. அவரை அந்த வகையில் ஊக்கிவிட ஒரே நாளில் பணத்தைக் கைநிறையக் கொண்டுவந்து கொடுத்து, ''பணத்தைக் கொண்டு பணம் பண்ணு. அதே சமயத்திலே பணத்துக்கு இன்னொரு பேர் நாணயம் என்கிறதை மறக்காதே. நாணயமில்லாத வகைகளில் வருகிற பணம் நஞ்சு என்கிறதையும் மறந்துவிடாதே!'' என்று 'வியாபாரோபதேசம்' செய்வித்தாள்.

சுந்தரம் அம்மாவின் உபதேசப்படி நடந்தார். வியாபாரம் பிரவாகமாகப் பொங்கியது. இரண்டாவது பிள்ளை பாலுவுக்கு மத்திய அரசாங்கத்தில் பெரியதொரு வேலை. ஆயிரம் ரூபாய் சம்பளம். வேறு ஓர் ஆங்கிலேயரின் எண்ணெய்க் கம்பெனியில் மானேஜராக இருந்தார். நான்கு இலக்கத்தில் சம்பளம்.

குடும்பம் குபேர நிலைக்கு உயர்ந்துவிட்டது. மூன்று பிள்ளைகளுக்கும் குழந்தைப் பஞ்சம் இல்லை. பேரன் பேத்திகள் என்றும், கொள்ளுப் பேத்திகளென்றும் குடும்பம் கிளைத்துப் பல்கி விட்டது.

அதற்கெல்லாம் பிரதியுபகாரமாக இந்தக் குடும்பத்தில் நடப்பதென்ன? 'காசிக்குப் போறேன்' என்றதும் சிரிப்பதுதான் பிரதியுபகாரமோ? 'நீ காசிக்குப் போனால், இந்தக் குடும்பமும் கைலாசத்துக்குப் போய்விடும்' என்று உபசாரத்துக்காவது சொன்னார்களா?

அலமு இப்பொழுது இரண்டாவது முறையாக அழுதாள். தன்னுடைய தொய்வில் அயர்ந்து ஒடுங்கி விடுகிற அழுக்குக் கண்ணீரை அவள் எப்பொழுதும் விட்டவள் இல்லை. முதல் முறை அழுது தன்னை ஓர் உழைக்கும் இயந்திரமாக்கிக் கொண்டாள். இந்த இரண்டாவது அழுகையில் இயந்திரத்தை உயிர்ப்பிக்கும் ஓர் உறுதியைத் தேவியைப் போலக் கொஞ்சம் கொஞ்சமாகச் சேகரித்துக் கொண்டிருக்கிறாள்.

தனக்கு ஆறுதல் சொல்கிறதை விட வெள்ளைக்கார வியாபாரியை வரவேற்பது சுந்தரத்துக்கு உயர்வாகப் போய் விட்டது. இதற்கு அலட்சியப் படுத்த முடியாத அர்த்தம் தான் என்ன? இனி அவள் இந்தக் குபேரக் குடும்பத்துக்கு வேண்டாம். அவள் ஆற்றில் ஓடுகிற தண்ணீர்தான். ஓடி ஓடிக் கடலில் கலந்து விடத்தான் வேண்டும். ஓடி வந்த பாதையில் பழைய உறவோடு திரும்பி ஸ்பரிசிக்கிற அதிர்ஷ்டம் ஆற்றுத் தண்ணீருக்கு இல்லை. அதைப் போலத்தானே ஆக்கிவிடப்பட்டிருக்கிறாள் அவளும்? வாழ்ந்து விட்டவள் வாழ்கிற குடும்பத்துக்கு வேண்டாம். ஐயோ, இவர்கள்தான் எத்தனை நன்றி கெட்டவர்கள்?

அவள் நெற்றிக் கண் நெருப்பிழந்து விட்டது. 'ஓ' என்று வாய்விட்டு அலறினாள்.

அழுகை ஓலத்தைக் கேட்டுப் பெரிய மருமகள் பட்டா ஓடி வந்தாள். ஆச்சரியத்தால் ஒரு கணம் ஸ்தம்பித்துப் போனாள். 'அழவைப்பவளால் கூட அழ முடியுமா?'

''ஏன் அம்மா அழறேள்?'' என்று பயந்து பயந்து கேட்டாள் பட்டா.

அலமுவுக்கு அழுகையை விட ஆத்திரம் பற்றிக் கொண்டது. 'இந்தப் பட்டா பார்த்து அனுதாபப்படும் அளவுக்கு என் நிலை கீழாறு மண்டிவிட்டதா?' அவளுக்கு எதுவும் நேர்ந்துவிடவில்லை. ''என்னை யாரும் எதுவும் கேட்க வேண்டாம்!'' எப்படிச் சீறிப் படபடத்து விட்டாள்?

பட்டா வாயடைத்துப் போனாள். 'தன்னைக் கேட்காமல் இந்த வீட்டில் ஓர் இலை கூடக் காற்றில் அசையக் கூடாது' என்று கண்டிப்பாக இருப்பவள் தானா, இப்பொழுது 'என்னை யாரும் எதுவும் கேட்க வேண்டாம்' என்று சொல்கிறாள்? நீண்ட நேரத்துக்குப் பிறகு கூட மாமியாரின் புதிர்ப் பேச்சிலிருந்து அவளால் விடுபட முடியவில்லை. பட்டாவும் ஒருத்திக்கு மாமியாராகி விட்டவள்தான். ஆனாலும் அவளால் இன்னும் அடங்கிப் போகக் கூடிய ஒரு மருமகளாக இருக்கவே முடிந்தது. பட்டா ஒரு பெருமூச்சின் நிழலோடு வெளியேறினாள்.

அலமு கதவை அறைந்து சாத்திக் கொண்டு வழுவழுப்பான தரையில் நெஞ்சைப் போர்த்திக் கொண்டு சாய்ந்தாள்.

வீட்டிலிருந்தவர்களுக்கு இது விந்தையாக இருந்தது. அலமுவுக்குக் கோபம் வருவதும், 'காசிக்குப் போறேன்' என்று சொல்வதும் புதிதில்லை என்று இலேசாக நினைத்தவர்களுக்கு அவள் ஒரு கடுமையான சவாலை விட்டுவிட்டு, அறைக்குள் புழுங்கிக் கொண்டிருக்கிறாள். நிஜமாகவே அவள் காசிக்குப் போக விரும்புகிறாளா? இந்தக் குடும்பம் முழுதும் வியாபித்துக்கொண்டிருக்கிற அவளுடைய மூர்க்கமான நிழலை அத்தனை சுலபமாக அள்ளிக் கொண்டு அவளால் போக முடியுமா? 'முடியாது' என்று தான் நினைத்தார்கள். சற்று நேரத்தில் 'யார் அங்கே ஜன்னல் கதவைப் படீர் என்று சாத்துகிறது?' என்று அதட்டல்போட்டுக்கொண்டே அறையிலிருந்து வெளிவரப் போகிறாள் என்று அலட்சியமாக இருந்தார்கள்.

அவர்கள் நினைத்ததில் தவறில்லை. நேற்று வரை அந்தக் குடும்பத்தை விட்டுப் போவதைப்பற்றி அலமு மனசளவில் கூட நினைத்துப் பார்த்தவள் இல்லை. அதற்குக் கடுமையான காரணம் உண்டு. தன் நேரடியான கவனிப்பின்றி வாழ்ந்து குப்பை கொட்டுகிற திறமை அந்தக் குடும்பத்தில் யாருக்கும் இல்லை என்று அவள் நினைத்திருந்தாள். பாங்க் கணக்கிலிருந்து பால் கறக்கும் பசுக்கள் வரை அவளுக்குத் தெரிந்திருக்க வேண்டும்.

இந்தக் கோபம் ஒரு பெண்ணுக்கு வருவது போல மென்மையாக இராது. கம்பீர புருஷன் ஒருவன் புறத்தைத் தட்டிவிட்டுக் கொண்டு 'விட்டேறு பார்' என்று பாய்வதைப் போலப் பௌருஷமாக இருக்கும். வெளியே போய்ப் பதினாயிரம் பேரைச் சமாளித்து வருகிற ஆண் சிங்கங்கள் அவளைச் சமாளிக்க முடியாமல், 'எங்களுக்கென்ன அம்மா தெரியும்?' என்று கையைப் பிசைய வேண்டியதாயிருக்கும்.

இப்படியெல்லாம் அரசோச்சிய அலமுதான், இப்பொழுது அறையில் கிடந்து அவலம் அவலமாகத் துடித்துக் கொண்டிருந்தாள்.

இந்த வெறுப்புக்கு வித்திட்ட சம்பவம் நேற்றிரவு நிகழ்ந்தது.

மணி பன்னிரண்டுக்கு மேல்தான் இருக்க வேண்டும். அலமுவுக்குத் தூக்கம் வரவில்லை. வருவதும் இல்லை. 'புறக்கடைத் தூம்பு அடைக்கப்பட்டிருக்குமோ?' என்ற ஒரு சந்தேகப் பொறி தெறித்தது. அந்தத் தூம்பு வழியாக நேற்றிரவு ஒரு பாம்பு வந்ததிலிருந்து அவளுக்கு அதிலே பெரியதொரு விழிப்பு. விடிந்து எழுந்தால் அவளுக்கு ஆயிரம் பிடுங்கல்கள். அந்தத் தூம்பு ஞாபகம் எப்படியோ அவளை அதுவரை ஏமாற்றி விட்டு விட்டது. எழுந்து போனாள். அவள் சந்தேகப்பட்டதைப் போலவே தூம்பு அடைக்கப்படவில்லை.

தூம்பை அடைத்து விட்டுத் திரும்பும் போது அவளுக்குப் பிடிபடாத பெருமை. 'இந்தக் கட்டை இல்லையானா ஒரு நாளுக்குக் குடும்பம் ஒழுங்கா நடக்குமா?' என்று வாய் விட்டுச் சொல்லிச் சிரித்துக் கொண்டாள்.

அந்த இரண்டும் கெட்ட நேரத்தில் மேலே அறையிலிருந்து கலகலவென்று சிரிப்பொலி சிலிர்த்தது. அலமு நின்றாள். நிதானித்தாள். புதிதாகக் கல்யாணமான அவள் பேரனும், பேரனின் மனைவியும் அப்படிக் கூத்தடித்துக் கொண்டிருக்கிறார்கள். சிரித்துச் சீரழிவதற்குப் பகல் பொழுது இருக்கும் போது பாதி ராத்திரியில் கண் விழித்திருந்துதான் களிக்க வேண்டுமா என்ன? அந்தப் புதிய புருஷப் பயலுக்கு நாளைக்கு ஒன்று வந்து விட்டால் அந்தச் சிரமத்தை ஏந்திக் கொள்வது இந்தப் பழைய பாட்டிதானே?

அலமுவுக்கு அப்படி இப்படி என்று சொல்ல முடியாத கோபம். லௌகிகம் என்பதைப் பற்றியெல்லாம் அவளுக்கு அக்கறை இல்லை. அவளுக்குச் சரியென்று படாதது அந்த வீட்டில் நடக்கக் கூடாது. அப்படி நடப்பதைப் பார்த்துக் கொண்டு ஒதுங்கிப் போக முடியுமோ? விர்ரென்று நடை பாதையை விட்டு விலகி, மேல் அறைப்பக்கம் போனாள். கதவைத் தட்டி, அவர்கள் கன்னத்தில் அறைந்து, 'காலாகாலத்தில் படுக்கப் போகிறீர்களா, இல்லையா?' என்று கேட்கத் துடித்த அவள் காதில்தான் அந்த இடி மெதுவாக இறங்க ஆரம்பித்தது.

''இந்தப் பாட்டிக்குக் கொஞ்சமாவது ஒதுங்கி இருக்கத் தெரியாதோ? நாம் தனித்திருக்கிற இடங்களில் கழுகு மாதிரி வட்டமிடுகிறாளே! அவள் இருக்கிற வரையில் நமக்கு நிம்மதியே இல்லை.'' பேரனின் புது மனைவி பெருமூச்சு விடுகிறாள்.

''இந்த வீட்டில் அவள் தனக்குத் தெரியாமல் எதுவும் நடக்கக் கூடாது என்று நினைப்பவள். அவளுக்கு இந்த வீட்டில் ரொம்ப மதிப்பு. எதிலாவது கொஞ்சம் பிசகிருந்தால், பாட்டி காசிக்குப் போய் விடுவதாகப் பயமுறுத்துவாள்!'' இது பேரனின் குரல்.

''அவள் காசிக்குப் போனால் குடியா முழுகிப் போய்விடும்? நன்றாகப் போகட்டுமே! எதிர்த்துக் கேட்பதற்கு இந்த வீட்டில் ஒருவருக்காவது தைரியம் இல்லை. நீங்களாவது தைரியமாகப் பேசப் போகிறீர்களா, இல்லையா?''

''பேசுகிறேன், பேசுகிறேன்!''

''அவள் காசிக்குப் போனால் தான் நாம் நினைத்தபடியெல்லாம் கடற்கரை போகலாம். தெரிகிறதா?''

''தெரிகிறது!''

''தெரிந்தால் மட்டும் போதாது. தைரியம் வேண்டும்.''

''தைரியம்தானே? நிறைய இருக்கிறது. நம் விஷயத்தில் தலையிட இந்தக் கிழத்துக்கு என்ன உரிமை இருக்கிறது? நாளைக்குப் பாரேன், வெளுத்துக் கட்டி விடுகிறேன்!''

அலமுவுக்கு அதற்கு மேல் கேட்டுக் கொண்டிருக்க முடியவில்லை. பயல் குட்டியின் புது மயக்கத்தில் பிதற்றுகிறான் என்று ஒதுங்கிப் போகலாம்தான். ஒதுங்கிப் போவதென்பது அவளால் ஆகக் கூடிய காரியமா? அறிவின் முனை முனைப்புக்கும், விழிப்புக்கும் அலமு வாழ்க்கை ஏட்டில் இடம் இல்லை. பாசத்தின் பயங்கர ஆளுகைக்குத்தான் ஏடுகள் கொள்ளாத உதாரணங்கள் உண்டு.

அவளுக்கும் எதிர்ப்பா?

'இந்தக் கிழத்துக்கு என்ன உரிமை இருக்கிறது....?'

அவள் கால்களுக்குள் மடங்கிப் பாலாடை பாலாடையாய் விளக்கெண்ணெய் குடித்த பயல் இப்படிச் சொல்கிறான்! அவன் நெஞ்சில் விட்ட விஷத் தளிரை உணர்ந்து கொள்ளக் கூடிய அறிவு இப்பொழுதுதான் அலமுவின் களி மண் மூளையில் முளை விடுகிறது.

அவள் பிரத்தியாளாகி விட்டாள். இந்தக் குடும்பத்தில் நிகழும் எந்தக் காரியத்துக்கும் அவள் இனித் தேவையில்லை. துருப் பிடித்துப் போன ஆணியை நன்றி இல்லாமல் கழற்றி எறிவதைப் போல, இந்தக் குடும்பத்தின் உணர்வுகளிலிருந்து அவள் விலக்கப்படுகிறாளா....?

கனிந்து கனிந்து நெருப்பு அவள் நெஞ்சத்தை ஊடுருவித் தீய்த்தது. படுக்கையில் போய் விழுந்தாள்.

நள்ளிரவில் புதுத் தம்பதி கூட்டணி வகுத்துப் பாட்டிக்கு ஓர் எதிர்ப்பை உருவாக்கியதற்குக் காரணம் இருந்தது.

ஒரு வாரத்துக்கு முன்னால் புது மணம் கண்ட அவர்கள் முன்னிரவு நேரத்தில்


கி.ராஜேந்திரன் எழுதும்
போர்முனை
ஏப்ரல்
15ல்
கல்கி புத்தாண்டு மலரில் ஆரம்பம்

மொட்டை மாடியில் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது உலர வைத்த வடகத்தை எடுப்பதற்காக அங்கே வந்து சேர்ந்த அலமுவின் கண்ணில் அவர்கள் துரும்பாய் உறுத்தினார்கள்.

படுக்கையில் விழுந்த அலமுவுக்கு நெஞ்சு அடங்கவில்லை.

இன்று புதிதாக வந்தவன் சொன்னான். நாளைக்கு அதைக் கேட்டுப் பழையவர்களும் பேசுவார்கள். அதற்கெல்லாம் சந்தர்ப்பம் வைக்காமல் நிஜமாகவே காசிக்குக் கிளம்பி விட வேண்டும். இங்கேயுள்ள அசடுகள் குடும்பம் 'நடத்தத் தெரியாமல் குட்டிச்சுவராகப் போவதற்கு அவள் காசிப் பிரயாணம் தான் வழிகோலும்.

தேய்ந்த இருளோடு பழி வாங்கும் எண்ணம் இறுகி விட்டது.

இரவில் தூங்கியவர்கள் காலையில் விழித்து எழுந்தார்கள்.

இரவில் தூங்காத அலமு காலையில் விழுந்தாள். விழுந்தாள் என்றால், தன்னுள்ளே லயித்து, தன்னையே வளைத்துக் கொள்ளுகிற ஒடுக்கம் அல்ல. ஒருமுகமான அமைப்போடு இயங்கிய குடும்பத்தின் நீரோட்டத்தில் கரும் புள்ளியாகத் தன்னையே இறுக்கிக் கொண்டாள்.

''அம்மா.....!''

பட்டாவா அழைக்கிறான்? பெண்டாட்டியின் சேலை முன்றானையைப் பிடித்துக் கொண்டு அலையும் பயலைப் பெற்ற சண்டாளி அல்லவா அவள்?

''அம்மா...!''

''ஊம்.....!''

''ஸ்நானம் செய்ய வேண்டாமோ?''

''இனி எனக்குக் கங்கையில் தான் ஸ்நானம்!''

''நாங்களாம் உங்களுக்காகச் சாப்பிடாமல் இருக்கோம்.''

''இருங்கோ. இந்தக் குடும்பம் குபேரக் குடியா வர்றதுக்கு நான் எத்தனையோ நாள் பட்டினியா இருந்திருக்கேன்.''

''ரொம்ப நேரம் ஆயிடுத்து அம்மா.''

பட்டா போய் விட்டான்.

'கடனைக் கழித்து விட்டுப் போயிட்டா. என்னுடைய கடனை இவனைப் படைச்ச சர்வேசுவரன் வந்தாலும் தீர்த்துவிட முடியுமோ?'

சுந்தரம் வீடு திரும்பிய பொழுது மணி ஆறு ஆகியிருந்தது.

வயிற்றைப் பிசையும் சங்கடத்தைக் கையைப் பிசைந்து கொண்டு சொன்னான் பட்டா. சுந்தரம் கை வலிக்கும் மட்டும் கதவை இடித்தார். நீண்ட நேரப் புதிருக்கு நிழலாய்ச் சமைந்து போன அலமு கதவைத் திறந்தாள்.

''என்னம்மா இதெல்லாம்?'' அவர் கண்களில் மனம் தேங்காய்ப் பூவாய் உதிர்ந்தது.

''என் தலைவிதி. நடக்க வேண்டியது காலம் தாழ்ந்து நடந்திருக்கு. இந்த மூடத்துக்குச் சோறனை ஏற்படுற விதி எழுபது வயதிலே வந்திருக்கு.''

இத்தனை அறிவுப் புதிரோடு அவள் எப்பொழுதும் பேசியவள் அல்ல. கோபம், தாபம், கண்டிப்பு, 'காசிக்குப் போகிறேன்' என்கிற வெளி மயமான சிதறல்களிலேயே உழன்றவனுக்கு இப்படி ஓர் அறிவுப் பொறி துடித்துத் தெறிப்பானேன்? பயந்துதான் விட்டார் அவர். ''யாராவது உன்னை ஏதாவது சொன்னார்களா? சொல்லு. அவர்களை வெளியிலே பிடித்துத் தள்ளிக் கதவைச் சாத்தறேன். சொல்லம்மா.''

''என்னை எந்தக் கழுதையடா நாக்குமேலே பல்லைப் போட்டுச் சொல்ல முடியும்? உங்க அப்பா வாயிலேயே ஒரு வார்த்தை கேட்டவளில்லேடா நான்.''

சுந்தரம் அயர்ந்து ஒடுங்கிப் போனார். அவருக்குப் பேச முடியவில்லை.

''சுந்தரம்!''

''ஏம்மா?''

''டிக்கெட் எடுத்துட்டயோ?''

''அவசியம் நீ காசிக்குப் போய்த்தான் தீரணுமா?''

''இந்த அழுக்குப் பிண்டம் செய்த காரியத்தைக் கங்கையிலே கொண்டுதான்டா கழுவியாகணும்.''

''நீ என்ன காரியம் செய்தே அப்படி?''

''அதெல்லாம் இப்போ வேண்டாம். நான் இந்தக் குடும்பத்தின் அழுக்கையும், அவலத்தையும் பொதியாய்ப் போட்டுக் கொண்டு கழுதையாய்ச் சுமந்திருக்கேன். அதற்கு நன்றியா நான் வேறொன்றும் கேட்கலே. காசிக்கு ஒரு டிக்கெட் மட்டும் எடுத்துக் கொடுத்துடு. அதற்கு மேலே நான் பேச விரும்பலே.''

''மழைக்காலமா இருக்கே அம்மா. ரயில் பாதை யெல்லாம் கோளாறு இருக்குமே!''

''கோளாறு எங்கே இருந்தாலும் பரவாயில்லே. எப்படியாவது நான் இங்கேயிருந்து தொலைஞ்சாகணும்.''

''எப்போம்மா திரும்பி வருவே?''

''நான் வருகிறதுக்காகப் போகல்லே.''

''ஏம்மா, எங்களை யெல்லாம் இப்படிப் பழி வாங்கறே?''

''உங்களைப் பழி வாங்கலேடா! என்னையே நான் பழி வாங்கிக்கறேன். அவர் என்னை இருபது வயசிலே மொட்டை மரமாக நிறுத்தி வைச்சுட்டுப் போனப்புறம் கூட நான் யார் தயவையும் நாடிப் போகலே. உங்களை ஆளாக்கிறதுக்குத்தான்டா நாய் பேய் காலிலே கூடப் போய் விழுந்தேன். இப்போ அதெல்லாம் எதுக்கு? நீ ஒன்னும் தர வேண்டாம். எனக்குக் காசிக்குப் போய்க் கொள்ளத் தெரியும்'' என்றாள் அலமு.

''வேண்டாம்மா. நானே உன்னை அனுப்பி வைக்கிறேன். துணைக்கு ஓர் ஆளையும் அழைச்சிண்டு போ!''

''துணை இல்லாமப் பழக்கப்பட்டுப் போனவள் நான். எனக்கு யாரும் வேண்டாம்.''

''அம்மா! நீ ஆலமரமா விழுது விட்டே. நாங்க அந்த நிழலிலே தங்கி யிருக்கிறோம். அந்த நிழலைப் பறிச்சிண்டுதான் போவேன்கிறே. நன்னாப் போ. ஆனா, அந்தக் காசி விசுவநாதன் உன்னை இங்கே திருப்பி அனுப்புவான். அப்போதும் நாங்க உனக்கு அடங்கின குழந்தைகளா நடக்கக்காத்திண்டிருக்கோம்.''

அலமு ரயிலேறி விட்டாள்.

அப்பொழுது பேய் மழை உலுக்கிக் கொண்டிருந்தது. 'ஒன்றும் ஆகாமல் ஒழுங்காக ரயில்

போய்ச் சேர வேண்டுமே' என்று அலமு உதறி விட்டுப் போன குடும்பத்தினர் துடித்தனர்.

அவர்கள் துடிப்பு பொய்த்துப் போகும் நிகழ்ச்சி நடந்து விட்டது. காசிக்குப் போன 'ஸ்பெஷல்' விஜயவாடாவுக்கு அருகே கவிழ்ந்து விட்டது. தண்டவாளத்தின் அடிப் பாலத்தில் சண்டி முறிந்து வந்த காட்டாறு பாலத்தை இடித்துப் பேயாட்டம் போட்டு விட்டது. ஐந்து பெட்டிகள் சர்வ நாசம். கடைசி மூன்று பெட்டிகள் மட்டும் தப்பித்தன. உயிர்ச் சேதம் சரியாகக் கணக்கிடப்படவில்லை. உதவிப் படை வேண்டிய அளவு போய்ச் சேருவதற்கு வெள்ளம் விட வில்லை.

அலமுப் பாட்டியின் குடும்பம், 'கங்கையிலே முழுகப் போனவள், காட்டாற்றில் முழுகி விட்டாளே' என்று அழுது புரண்டது. வெள்ளத்தின் சீற்றம் தணியும்வரை போய்ப் பார்த்து வரக் கூட வகையில்லாமல் சுந்தரம் அறைக்குள் கிடந்து குமுறினார்.

ஏழாவது நாள்.

அலமு வீட்டுக்கு வந்து சேர்ந்தாள்!

யாரும் எதிர்பார்க்க வில்லை. சொர்க்கத்திலிருந்து அலமு மீண்டு வந்ததாகவே எண்ணிக் குதி போட்டார்கள். அவள் மட்டும் சலிப்போ, சந்தோஷமோ கொள்ளவில்லை.

''அம்மா! இனி நீ காசிக்குப் போக மாட்டாயே?'' என்று சற்றுக் கவலையுடன் கேட்டார் சுந்தரம்.

''இந்த ஜன்மத்திலே எனக்குக் காசியில்லே. பிராப்தம் இருந்தா ரயில் கவிழுமோ?''

''நான் காசி விசுவநாதனை வேண்டிண்டேனே, அம்மா! அவன்தான் உன்னை நடு வழியிலே திருப்பி அனுப்பிச்சுட்டான்.''

''அவன் திருப்பி மட்டும் அனுப்பல்லே, எனக்கு நிஜமான அறிவையும் கொடுத்து அனுப்பிச்சிருக்கான். விபத்தைக் கண்ணுலே பார்த்தேன். ஜீவன்கள் தவிச்சிண்டு மடியறதைக் கண்டு துடிச்சேன். அது மூலமா நான் ஒண்ணு தெரிஞ்சுண்டேன். நான் காசிக்குப் புறப்பட்ட போது இங்கேயுள்ள அத்தனை ஜீவன்களும் தவித்தீர்கள். இப்படி ஜீவ ஹிம்சை செய்துட்டு ஆயிரம் காசிக்குப் போனாலும் என் பாவம் தொலையாது. அதனாலே விட்ட குறையைத் தொடர ஓடி வந்துவிட்டேன்.'' இப்போது அலமு மூன்றாவது முறையாகக் கண்ணீர் விட்டாள். முதல் இரண்டு முறைகளும் அவள் தனக்காகக் கண்ணீர் விட்டாள். இப்பொழுது தான் பிறத்தியாருக்காகக் கண்ணீர் விடத் தெரிந்துகொண்டிருக்கிறாள்.

''எங்கள் பாக்கியம் நீங்கள் வந்தீர்கள்'' என்றாள் பட்டா.

''நான் இன்னொண்ணையுங்கூடத் தெரிஞ்சிண்டு வந்திருக்கேண்டி பட்டா! பாலத்துக்கு அடியிலே ஓடின ஜலம் ஒரு சீரான நிலையைக் கடந்துட்ட உடனே ரயிலே கவிழ்ந்துடுத்து. நானும் இந்தக் குடும்பத்திலே ஒரு சீரான நிலைக்கு மேலே இத்தனை காலமா ஓடி வந்திண்டிருக்கேன். எப்படின்னு கேட்கிறியா? இந்தக் குடும்பத்தை நான் குபேர நிலைக்குக் கொண்டு வந்தது உண்மைதான். அதுக்காக நானே அதிகார பீடத்திலே ஏறிண்டிருக்கணுமா? இந்த உலகத்தைப் படைச்சவன் எல்லாத்தையும் மனுஷக் குழந்தைகளுக்குக் கொடுத்துவிட்டு, ஒதுங்கிப் போயிடல்லையா? அதே மாதிரி நான் ஒதுங்கிண்டிருக்க வேணும். சிறிசுகளுக்கு வழியை விட்டு நான் விலகியிருக்க வேணும். எனக்கு அந்தப் பக்குவம் வரல்லே. ஒரு பயங்கர ராக்ஷஸியைப் போல உங்களை யெல்லாம் ஆட்டிப் படைச்சிருக்கேன். 'நம்மாலேதானே இந்தக் குடும்பம்' என்கிற வெறியிலே, சிறிசுகளின் தாம்பத்திய வாழ்க்கையிலே கூடப் புகுந்து தொந்தரவு கொடுத்திருக்கேன். எவ்வளவு பெரிய தவறு? இந்தத் தவறுக்கு நிமிஷத்துக்கு நிமிஷம் நானே தண்டனையும் கொடுத்திண்டிருந்திருக்கேன். நியாயமாகக் கிடைச்சிருக்க வேண்டிய நிம்மதியை இழந்து, சதா ஆடிக் காத்தா நான் அவஸ்தைப் பட்டிண்டிருந்ததைத் தண்டனையின்னுதானே சொல்லணும்? அதுக்கெல்லாம் பிராயச்சித்தம் ஒண்ணு இருக்கு!''

''என்ன அது?''


''தனி வாழ்க்கை!''

''மறுபடியும் காசியா?''

''இல்லே. அவுட் ஹவுஸிலேதான் இனி என் ஜாகை. பட்டா! அங்கே ஜபமாலையும் பஞ்சபாத்திரமும் கொண்டு வந்து தந்துவிடு'' என்று கொல்லைப்புறத்தின் நீண்ட பாதையிலே நடந்தாள் அலமு.



பிரபல விளம்பர ஏஜன்ஸி ஸ்தாபனமான போமாஸாக்குக் கல்கத்தாவில் புதிய காரியாலயம் மார்ச் 13-ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்தக் கல்கத்தா காரியாலயத்தின் டைரக்டர் பொறுப்பை வகிக்கும் திரு காம்பெல் பானர்மன் விளம்பரக் கலையில் நிபுணத்துவம் பெற்றவர். இவரது நிர்வாகத் திறமையிலே கல்கத்தா காரியாலயம் சிறப்பாகப் பணியாற்றும் என்று எதிர்பார்க்கலாம்.



நந்த வனம்

சோமு

13. சித்திர விசித்திரம்

சிங்கம்புத்தூர் மாளிகையின் மாடி யறையிலே தன்னந்தனியாக இருந்து காதல் நினைவுகளிலே உள்ளத்தைச் சுழல விட்டவண்ணம் உட்கார்ந்திருந்த வில்வ நாதனுக்கு மறுபடியும் அதிர்ச்சியைக் கொடுத்தது, தாமரைச் செல்வியின் தோற்றம்.

''செல்வி! நீ வந்து நின்றதை நான் கவனிக்கவேயில்லை! நீண்ட நேர மாக இங்கே நிற்கிறாயோ?'' என்று கேட்டான் வில்வன்.

''செல்வி! என்னிடம் உனக்குக் கோபமா?'' என்று கேட்டான்!

''ஆமாம். நான் வந்து நீண்ட நேரம் ஆயிற்று. நீங்கள் நிமிர்ந்து பார்த்தால்தானே. எதிரே நிற்கிற மனிதர்களைப் பார்ப்பது என்பதே உங் களுக்கு வழக்கமில்லையே!''

கொஞ்சும் இங்கிதத்தோடு இப்படிக் கூறினாள் செல்வி. அவளுடைய முகத் தைக் கூர்ந்து பார்த்தான் வில்வநாதன்.

''ஆமாம். உங்களிடம் எனக்கு அளவுகடந்த கோபம். அந்தக் கோபத் தைத்தானே சற்று நேரத்துக்கு முன்பு உங்களிடம் வெளியிட்டுச்சொன்னேன்!''

செல்வி சிரித்தாள். அப்படிச் சிரித்த போது அந்தச் சிரிப்பிலே ஒரு வேதனை யின் கீற்று துவண்டது. தன் இதயத்தின் உணர்ச்சிகளை மறைத்துக் கொண்டு மேலீடாக ஒரு மகிழ்ச்சியைப் போர்த்தி நிற்கிறாள் என்பதை வில்வநாதனால் ஊகிக்க முடிந்தது.

''செல்வி! உன்னுடைய மன நிலை எனக்குப் புரிகிறது. நீ உனது உணர்ச்சி களை இப்பொழுது மறைத்துக் கொள்ள முயற்சி செய்கிறாய். அது எனக்கு நன் ருகத் தெரிகிறது!''

வில்வநாதன் இப்படிச் சொன்ன போது தாமரைச் செல்வி மீண்டும் சிரித்தாள்.

''வில்வநாதா! என்னுடைய உணர்ச் சிகளைப் பற்றித் தயவுசெய்து மறுபடி யும் பேசாதீர்கள்! அவற்றை நீங்கள் புரிந்து கொண்டு விட்டீர்கள் என்ற மகத்தான உண்மையை வெளியிட்டதற் காக உங்களுக்கு நன்றி செலுத்துகிறேன். போதுமா?''

இப்படிச் சொன்னதும் செல்வியின் கண்கள் கலங்கின. அந்தக் கலங்கிய கண்களையே பார்த்தான் ஓவியஇளைஞன்.

பெண் மனம் என்பது எத்தனை விசித் திரமான ஒரு தத்துவம்! அந்திவானத் தில் விளையாடுகிற கோடிக்கணக்கான வர்ணக் கோலங்களைப் போல ஒளியும் வர்ணங்களும் முயங்குகிற ஒரு சித் திரமா பெண் மனம்!

இவ்வாறு எண்ணியவனாகச் செல்வி யின் முகமண்டலத்திலே படர்ந்த உணர்ச்சி ஓவியங்களையே ஆழ்ந்து பார்த் தான் அந்த ஓவியன்!

இளமையும், கபடமில்லாத அன் பும், இதய விலாசமும் அந்த முகத் திலே எழுந்து நின்று பேசின. மாசற்ற ஒரு நேசமும், குறைவற்ற பரிபூரண மான இதய வேட்கையும் அவளுடைய பரந்த விழிகளிலே மிதந்தன. இதற்கு முன்பு எத்தனையோ பல சுவரோவியங் களிலே இத்தகைய கண்களை, இத்த கைய உணர்ச்சிக் கீற்றுகளை வில்வநாதன் கண்டிருக்கிறான். இப்பொழுது அத் தகைய இதயத் துடிப்புகளை யெல்லாம் உயிர் ஓவியத்திலே வாழ்க்கையனுபவ மாகக் கண்டபோது அவனுடைய உள்ளத்தில் ஒரு சிலிர்ப்பு ஏற்பட்டது. மனத்தின் கோடியிலே, இதயத்தின் ஆழத்திலே ஏதோ ஒன்று வேதனை செய்தது. அவனுக்கு எதிரே நின்று மோக ஒலிகளிலே துடித்த அந்தப் பெண்மை இதயத்தின் நாத அலைக ளோடு இணைந்து கலந்து ஒலிக்காமல் வில்வநாதனுடைய இதயம் மறுகியது. அவனுடைய உள்ளம் குமைந்தது. சங்கீதத்தில் 'சுருதி சேர்வது' என்று சொல்வார்கள் அல்லவா, அப்படிச் சேர முடிய வில்லை! செல்வியின் இதயஒலி களின் சுருதியோடு சேர முடியாமல் ஏதோ ஒன்று வில்வநாதனுடைய இத யத்தை அமுக்கியது. அவனுக்கு நன் ருகத் தெரிந்தது, தனது இதயத்தின் சுருதி வேறு, அந்த இளங் கன்னியின் இதய சுருதி வேறு என்று! வீணையிலே சுருதி குறைந்தால் நரம்புகளை முறுக்கிச் சேர்ப்பார்களே. அப்படி இதயத்தையும் முறுக்க முடியுமா?

வில்வநாதன் குழம்பினான். செல்வி சொன்னாள்:

''ஆசிரியரே! என்னை மன்னித்து விடுங்கள். நான் பைத்தியக்காரி போல் நடந்து கொண்டு விட்டேன். எனக்கே அதைப் பற்றி அவமானமாக இருக்கிறது. நான் நடந்து கொண்ட விதம், நான் உங்களிடம் பேசிய பேச்சு, நான் வரைய முயன்ற ரிஷியசிருங்கரின் சித்திரம் எல்லாவற்றையும் மறந்து விடுங்கள்!''

இப்படிச் சொன்னாள் செல்வி. வில்வநாதனுக்கு இதயத்தில் இடி விழுந்தது போல் இருந்தது.

''செல்வி!'' — இப்படிச் சொல்லிக் கொண்டே தன்னையும் மீறிய ஒரு தாபத்திலே எழுந்து சென்று தாமரைச் செல்வியின் கரங்களைப் பற்றினான் வில்வநாதன்.

ஒரு விநாடி. மறுகணம் அந்தக் கைகளை உதறினாள் செல்வி. அப்படி உதறியபோது அவளுடைய முகத்தில் துலங்கிய உணர்ச்சிகள்! அவை என்ன? வெறுப்பா? இல்லை. கோபமா? இல்லை! துன்பமா? துயரமா? ஏக்கமா?

வில்வநாதனுடைய உடம்பு முழுதும் ஆடியது. மின்சாரம் ஓடுகிற கம்பிகளில் தப்பித் தவறி எப்படியோ கைபட்டுவிட்டால் ஒருவித அதிர்ச்சி ஏற்படுமே அப்படியிருந்தது வில்வநாதனுக்கு. ஆனால் இந்த அதிர்ச்சியில் ஒரு வித்தியாசம்.

அந்த வித்தியாசம் என்ன?


'' செல்வி! என் வாழ்வில் இதுவரை இல்லாத ஒரு புதுமை இது. இதுவரை இல்லாத ஒரு குழப்பம் இது. நீ எந்த விநாடி இந்த அறையிலிருந்து மறைந்தாயோ, அந்த விநாடியிலிருந்து நான் ஒரு நிலையில் இல்லை. ஐயோ! என்னையும் அறியாமல் ஏதோ ஒன்று என்னை என்னவோ செய்கிறது. விவரிக்க முடியாத ஒரு மகிழ்ச்சி. அதற்குள் அளவிட முடியாத ஒரு வேதனை. நெருப்பைப் போல் சுடுகிறது. அதே சமயம் பனிக்கட்டி போல் குளிருகிறது! இப்படி ஒரு—''

தாமரைச் செல்வி சிரித்தாள். ஆனால் அந்தச் சிரிப்பிலே கண்ணீர் உதிர்ந்தது!

''ஆசிரியரே! நீங்கள் என்னுடைய குரு. என் உள்ளத்தில் தோன்றிய ஓவியக் கனவை நனவாக்க வந்தவர் நீங்கள். அது எனக்கு நன்றாகத் தெரியும். ஆனால் என்னுடைய உள்ளமோ, என்னுடைய உணர்ச்சிகளோ—''

இதுவரை அடக்க முயன்று அலை வீசித் தத்தளித்துக் கொண்டிருந்த உணர்ச்சிகள் கரையை உடைத்துக் கொண்டு பாய்ந்தன. செல்வி தனது முந்தானையிலே முகத்தைப் புதைத்துக் கொண்டாள். ஆனால் இந்த முறை அவள் அங்கிருந்து ஓடவில்லை. முந்தானையில் முகத்தை மறைத்துக் கொண்டு விம்மினாள். ஏங்கினாள். மறுகினாள். கண்ணீர் வடித்தாள்.

வில்வநாதனுக்கு என்ன செய்கிறோம் என்ற நினைவேயில்லை. செல்வியின் அருகிலே சென்று முந்தானைக்குள்ளே மறைந்திருந்த எழில் முகத்தை நிமிர்த்தினான்.



சிரிக்கின்ற தாமரை மலர் கண்ணீர் வடித்தால் எப்படியிருக்கும்? நிலவைப் பொழிகின்ற பௌர்ணமிச் சந்திரிகை ஒதுங்கி ஒடுங்கிப் பிரலாபித்தால் எப்படியிருக்கும்? இசையைப் பொழிகிற குயில் வாய் விட்டு அழுதால் எப்படி? அப்படியிருந்தது அந்த ஓவியனுடைய கண்களுக்கு!

''செல்வி! என்ன இது? என்ன விபரீதமான காரியம் செய்கிறாய்?''

இப்படிக் கேட்டான் வில்வநாதன்.

''ஆம். விபரீதந்தான். விபரீதமாகத்தான் அழுகிறேன். இந்த விபரீதமெல்லாம் வேண்டாம் என்றுதானே ஓடினேன்? ஆனாலும் அப்படியே ஓடி மறைந்துவிட என்னால் முடியவில்லை. மீண்டும் வந்து உங்களைப் பார்க்க வேண்டும், மீண்டும் வந்து உங்களுடைய முகத்தின் உணர்ச்சிகளைக் கண்ணால் காண வேண்டும், மீண்டும் இந்த அறைக்கு வந்து உங்களுடைய முன்னிலையிலே இப்படி ஓலமிட்டு அழவேண்டும்போல் இருந்தது! அதனால்தான் ஒரு பைத்தியக் காரிபோல் இப்பொழுது இங்கே மறுபடியும் வந்தேன். இப்படி நடந்து கொண்டது தவறு என்று எனக்கு நன்றாகத் தெரியும். என்னுடைய அறிவு என்னைக் கண்டிக்கிறது. ஆனால் என் இதயம் என்னை இயக்குகிறது! என்ன செய்வேன்! இந்த ஏக்கமும், இந்தத் துயரமும் விபரீதமானவை என்று எனக்கே தெரிகிறது. ஆனாலும் என்னால் என்னால்——''

''செல்வி!''

வில்வநாதனுடைய குரலில் எல்லை கடந்த தாபம் ஒலித்தது. செல்வியின் அகன்ற விழிகளையே பார்த்தவாறு அவன் சொன்னான்:

''செல்வி! நீ அழலாமா? நீ இப்படிக் கண்ணீர் வடிக்கலாமா? எழிலும் உல்லாசமும் நிரம்பிய ஒரு பூங்கொடி நீ! எந்த ஓவியத்திலும் காண இயலாத ஒரு வண்ண மலர் நீ! இறைவன் உன்னைப் படைத்தது எப்பொழுதும் நீ சிரித்துக் கொண்டே இருக்க வேண்டும் என்பதற்காகத்தான். இப்படிக் கண்ணீர் வடிப்பதற்காக இல்லை. செல்வி! உலகம் என்ற இந்த நந்தவனத்தில் மகிழ்ச்சி என்ற வாசனையோடு இன்ப மணம் பரப்புவதற்காகவே மலர்ந்த ஒரு ஜீவ மலர் நீ! நெஞ்சில் கனல் மணக்கிற பூக்களைப் போலத் துயர வாழ்வு வாழ்வதற்காகப் படைக்கவில்லை உன்னை இறைவன்!''

இப்படிச் சொல்லிக் கொண்டே செல்வியின் முந்தானையை எடுத்து அவளுடைய கண்களைத் துடைத்தான் வில்வநாதன். இறகை ஏந்தும் அந்த ஓவிய விரல்கள் அவளுடைய கண் இமைகளிலேபட்டதும், தாமரைச் செல்வியின் மேனி முழுதும் சிலிர்த்தது. ஏதோ ஒரு சுந்தரக் களிப்பு உடம்பு முழுதும் பரவியது! அவளுடைய முகத்திலே படர்ந்திருந்த துயரம் அந்தச் சிலிர்ப்பிலே கரைந்து மறைந்தது. அவளுடைய கண்களிலே பரவசம் பாய்ந்தது!

'டக் டக்' என்று மாடிப் படிகளிலே ஓசை கேட்டுச் சரேல் என்று முகத்தைத் துடைத்துக் கொண்டு நின்றாள் செல்வி. வில்வநாதன் வாசற்படிகளிலே வந்து நின்று ஜமீந்தாரை வரவேற்றான்.

''என்ன ஆசிரியர் பெருமானே!'' என்று சொல்லிக் கொண்டே முகம் முழுதும் பரந்த புன்னகையோடு நடந்து வந்தார் அனவரத புவனபதி! அறையினுள்ளே தகப்பனாருடைய வரவை எதிர் பார்த்து நின்றாள் தாமரைச் செல்வி.

''என்ன செல்வி! நீ சாப்பிடவே வரவில்லை என்று அம்மா ஆவலாதி சொல்லுகிறாளே! ஒரு வாரமாகத் தனியாக உன்னுடைய அறையிலேயே இருந்து ஏதோ வரைந்துகொண்டே இருந்தாயாமே! உன்னுடைய ஆசிரியரைக் கூட மறந்து விட்டாயாமே!''

இவ்வாறு கேட்டார் ஜமீந்தார். செல்விக்கு வெட்கமாக இருந்தது. அன்பு ததும்பும் தந்தையின் முகத்தையும், திகைப்போடு நின்று கொண்டிருந்த வில்வநாதனின் முகத்தையும் மாறி மாறிப் பார்த்தாள்.

''என்ன ஆசிரியரே! ஒரு வாரமாக அவளுக்கு அப்படி என்ன பரீட்சை?''

ஜமீந்தார் இப்படிக் கேட்டதும் வில்வநாதனுக்கு என்ன சொல்வது என்றே ஒன்றும் ஓடவில்லை. ஏதோ மறுமொழி சொல்பவன் போல் ஜமீந்தாரைப் பார்த்துச் சிரித்தான். ஜமீந்தாரும் வில்வநாதன் மறுமொழி சொன்னால் எப்படித் திருப்தி அடைவாரோ, அதுபோலத் திருப்தி அடைந்தவராக மேலே பேச ஆரம்பித்தார்:

''அப்படி என்ன சித்திரம் அது? ஒரு வாரமாக மாடிக்குக்கூட வராமல் ஒரேயடியாக இருந்துவரைந்தாயாமே?''

மகளைப் பார்த்து இப்படிக் கேட்ட ஜமீந்தாருக்கு வில்வநாதன் பதில் சொன்னான்:

''அண்ணலே! செல்வியின் சித்திரத் திறமை எனக்கே வியப்பாக இருக்கிறது. அவளுக்குக் கற்பிக்க ஆரம்பித்ததிலிருந்து, நானே புதிது புதிதாகக் கற்றுக் கொண்டு வருகிறேன்!''

இப்படிச் சொன்னான் வில்வநாதன். ஏற்கனவே செல்வியிடம் பல முறைகள் சொன்ன வார்த்தைதான் இது! என்றாலும் இப்பொழுது அந்த வார்த்தைகளில்

ஒரு புதிய பொருள் இருப்பது போல நினைத்தாள் தாமரைச் செல்வி. அந்த நினைவிலே ஓரக் கண்ணால் வில்வநாதனைப் பார்த்தாள்.

''தம்பி! நீ சொல்வது உண்மையான வார்த்தை. கல்வியைப் பற்றிப் பெரிய பெரிய ஆசிரியர்கள் எல்லாரும் சொல்லி யுள்ள ஒரு பெரிய உண்மை இது. கற்றுக் கொள்ளுவதற்கு ஒரு சரியான வழி, கற்றுக் கொடுப்பதுதான் என்று மேனாட்டு ஆசிரியர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் காலத்தில் என் தகப்பனாரும் இதை அடிக்கடி சொல்லுவார்!''

இப்படி ஜமீந்தார் கூறியதும் வில்வநாதன் சொன்னான்:

''ஆமாம். என் தந்தையும் அடிக்கடி இதையேதான் சொல்லுவார். அந்த வார்த்தையை உண்மை என்று நிரூபித்து விட்டாள் செல்வி.''

''அப்படியானால் பரீட்சையில் தேறி விட்டாள் என்று சொல்லுகிறாய்! அப்படித்தானே?'' என்று கேட்டார் ஜமீந்தார் அனவரதன்.

''ஆமாம்!'' என்று சொல்லும் போதே வில்வநாதனுடைய குரலில் ஒரு வித அச்சம் ஒலித்தது. இந்த அச்சத்தை ஜமீந்தார் கவனித்தார்.

''தம்பி! பரீட்சையில் தேறி விட்டாள் என்று நீ சொல்வதைப் பார்த்தால், அவளிடம் உனக்கு ஒரு பயம் அல்லவா தெரிகிறது! இனிமேல் அவள் தான் உனக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்றே கூறுவாய் போலிருக்கிறதே!''

மகளிடம் உள்ள அளவு கடந்த வாஞ்சையினால் இப்படிச் சொல்லி விட்டு, மட்டற்ற மகிழ்ச்சியோடு சிரித்தார் அனவரதர். அந்தச் சிரிப்பிலே சேர்ந்து சிரித்தார்கள் வில்வநாதனும், தாமரைச் செல்வியும்!

இந்த நிகழ்ச்சி நடந்த மறு நாட் காலை ஜமீந்தாருடைய 'கோச்' வண்டியிலே மூவரும் செண்பக நாயகி கோயிலுக்குச் சென்றார்கள்.

''தம்பி! திருவிழாவுக்கு இன்னும் சில மாதங்களே இருக்கின்றன. சுவர்ச் சித்திரங்களைப் புதுப்பிக்கிற வேலையை இனியும் தாமதிப்பதற்கில்லை!'' என்று சொன்னார் ஜமீந்தார்.

''அண்ணலே! இனி மேல் தாமதிக்க வேண்டிய அவசியம் இல்லை. தொடர்ச்சியாக இந்த நந்தவனத்திலேயே இருந்து கொண்டு, சித்திர வேலையை முடித்து விடுவேன்!''

இவ்வாறு சொன்னான் வில்வநாதன்.

''தொடர்ச்சியாக இங்கேயே இருக்க வேண்டுமா என்ன?'' என்று கேட்டாள் தாமரைச் செல்வி. இந்தக் கேள்விக்கு அனவரதர் பதில் சொன்னார்:

''ஆமாம், அம்மா! நீ ஒரு வாரமாக உன் அறையிலேயே இருந்து ஏன் அப்படி ஒரே நிலையாகப் பரீட்சை எழுதினாய்? அது போலத்தான் வில்வநாதனும் இதே வேலையாக இருந்து முடித்துவிடுகிறேன் என்று சொல்லுகிறான்; பரீட்சையில் தேறுவது என்றால் வேடிக்கையா? என்ன ஆசிரியரே! சொல்லும் ஐயா! நீர் வைத்த பரீட்சையில் செல்வி தேறிவிட்டாள். அதற்கு ஒரு வாரம் பிடித்தது. நான் வைக்கப் போகிற பரீட்சையில் நீர் தேற வேண்டாமா? அதற்கு எத்தனை நாட்கள் பிடிக்கும்?''

ஜமீந்தார் ஆவல் நிரம்பியவராக இவ்வாறு கேட்டதும், செல்வி வில்வநாதனையே பார்த்தாள். அவன் கண்களை மூடிக்கொண்டு தீவிரமாக யோசித்தவாறு சொன்னான்:

''ஜமீந்தார் அவர்களே! எனக்கு நீங்கள் கொடுத்துள்ள இந்தப் பரீட்சை மிகவும் கடினமானது. இந்தப் பரீட்சையில் தேறுவதற்கு எத்தனை நாட்கள் பிடிக்கும் என்று எனக்கே தெரியவில்லை! ஆனாலும்.....''

வில்வநாதன் வார்த்தைகளை இழுத்துக் கொண்டே நின்றதும், தாமரைச் செல்வி சட்டென்று கேட்டாள்.


''என்னுடைய பரீட்சையைவிடவா இது கடினமான பரீட்சை! இல்லை. இல்லவே இல்லை!''

மகள் இப்படிச் சொன்னதும் அந்த வார்த்தைகளின் உட்பொருள் தெரியாமல், அவற்றிலே ஒலித்த வேடிக்கையைப் புரிந்து கொண்டவர் போல் ஜமீந்தார்


சென்னை வால்டர் தாம்ஸன் கம்பெனியைச் சேர்ந்த திரு 'விகவநாதனுக்கும், சௌ. சாவித்திரிக்கும் விவாகம் சேலத்தில் நடந்தது.

திரு எல். எஸ். கல்யாண சுந்தரம் அவர்கள் குமாரி சௌ. மகாலக்ஷ்மிக்கும், திரு ராமச்சந்திரனுக்கும் விவாகம் நடைபெற்றது.

திரு எல். என். வேங்கட் ராமய்யர் அவர்களின் புதல்வர் திரு நாராயண சாமிக்கும் சௌ. சாந்தாவுக்கும் திருமணம் நடந்தது.







கல்கி

சந்தா விகிதம்

	ஒரு வருஷம் ரூ. ந.பை.	ஆறு மாதம் ரூ. ந.பை.
இந்தியா, இலங்கை	15—00	7—50
பர்மா, மலேயா, வெளி நாடுகள்	18—00	9—00

தனிப் பிரதி விலை 30 நயா பைசா

சந்தா தொகை முன்னதாக அனுப்பப்படவேண்டும். வி. பி. பி. கிடையாது. இலங்கை நேயர்கள்மட்டும் வி.பி.பி.மூலம் சந்தா தொகையைச் செலுத்தலாம்.

மானேஜர், கல்கி காரியாலயம், சென்னை-10

சிரித்தார். வில்வநாதனோ இந்த வார்த்தைகள் எதையும் செவியிலே வாங்கிக் கொள்ளாதவனாகத் தனது யோசனையிலேயே ஆழ்ந்து நின்று பேசினான்.

''இந்தச் சுவர் ஓவியங்களைப் புதுப்பிக்கிற வேலைக்காக ஏற்கனவே திட்டங்கள் வகுத்து விட்டேன். வர்ணங்களையும் வரிசைப்படுத்தி, மனத்துக்குள் இந்த வேலையை ஒரு வகையாக உருவாக்கியிருக்கிறேன். ஆனாலும் இது ஒரு கடுமையான தவம். இந்தத் தவத்தைச் செய்து சித்தி பெறுவதற்கு எத்தனை நாட்கள் பிடிக்குமோ சொல்லத் தெரியவில்லை. என்றாலும் ஒன்று உறுதி கூறுகிறேன். என்னுடைய தந்தையின் கட்டளையை நிறைவேற்றுகிறேன் என்ற உறுதியோடு இந்தப் புண்ணியப் பணியில் ஈடுபடுவேன். மனம், மொழி, மெய் மூன்றும் ஒன்றிய நிலையிலே இந்தப் பணியை மேற்கொள்வேன். அதுபற்றி நீங்கள் கவலைப்படவே வேண்டாம்!''

உறுதி நிரம்பிய குரலில் வில்வநாதன் இப்படிச் சொன்னதும் தாமரைச்செல்வி சொல்லுவாள் :

''ஆசிரியரே! இந்தப் பணியை இத்தனை பக்திசிரத்தையோடு நீங்கள் மேற்கொள்வது பற்றி எங்களுக்கு மகிழ்ச்சிதான். ஆனால் அந்தத் தவத்துக்கு மத்தியில் எங்களையும் சிங்கம்புத்தூர் மாளிகையையும், அந்த மாடி அறையையும் மறந்து விடாதீர்கள்!''

மகள் இப்படிச் சொன்னதும் ஜமீந்தார் சிரித்தார். வில்வநாதனும் சிரித்துக்கொண்டே செல்வியைக் குழப்பத்தோடு பார்த்தான். செல்வி புன்முறுவலோடு அவனையே கூர்ந்து பார்த்தாள். இருவருடைய பார்வையும் இரண்டு விதமான மனநிலைகளிலிருந்து வந்தது!

அன்று செண்பக வனத்திலிருந்து மூவரும் திரும்பியபோது, மறு நாளிலிருந்து வில்வநாதன் செண்பகநாயகி கோவிலிலேயே தங்கியிருந்து சித்திர வேலையை முடிப்பதற்கு உரிய ஏற்பாடுகளைத் திட்ட மிட்டுச் சொல்லிக்கொண்டே வந்தார்!

அனவரத புவனபதியின் குணம் எல்லாருக்கும் நன்கு தெரிந்ததுதான். ஒரு திட்டத்தை முடிவு செய்து விட்டார் என்றால், உடனே அதை நடத்தியாக வேண்டும் அவருக்கு! எனவே, மறுநாள் பொழுது விடிந்து, மாளிகையிலிருந்து சித்திரப்பொருள்களோடு வில்வநாதன் செண்பக வனத்துக்குப் புறப்படுகிற வரையில் அவருக்கு உறக்கம் வரவில்லை !

ஆம்; அன்றிரவு முழுதும் ஜமீந்தார் உறங்கவில்லை. ஆனால் அந்தச் சிங்கம்புத்தூர் மாளிகையில் அவர் மட்டும்தானா உறங்கவில்லை! வில்வநாதனும் உறங்கவில்லை. இரவு முழுதும் சுவர் ஓவியங்களும், வர்ணங்களும் இறகுமாகச் சேர்ந்து அவனுடைய உள்ளத்தில் ஏதேதோ கோடுகளை வரைந்து கொண்டிருந்தன. அவனால் உறங்க முடியவில்லை; அவ்வளவுதானா? தாமரைச் செல்வியும் உறங்கவில்லை! வறண்டு போயிருந்த அங்க தேசத்தில் ரிஷியசிருங்கரின் வரவினால் மழை பொழிந்தது போல, அவனுடைய இதயத்தில் கற்பனை முகில்கள் இன்ப மழையைப் பொழிந்து கொண்டிருந்தன! ஊடே ஊடே மின்னல் மின்னியது ; இடியும் இடித்தது !

பொழுது விடிந்ததும் சிங்கம்புத்தூர் மாளிகையிலிருந்து வர்ணங்கள், கலைப் பொருள்கள், இறகுகள், மற்றும் ஓவிய சாதனங்கள் அத்தனையும் எடுத்துக்கொண்டு 'கோச்' வண்டியிலே வில்வநாதன் ஏகாந்தமாகப் புறப்பட்டான். அப்படி அவன் புறப்பட்டபோது ஜமீந்தாரும் செல்வியும் அவனை வழியனுப்பினார்கள். மகள் சொன்ன பழைய 'வேடிக்கைப்' பேச்சை இப்போது மறுபடியும் சொன்னார் அனவரதர்:

''ஓவியநாதரே! வர்ணத் தவத்தில் மூழ்கிப் போய்எங்களைமறந்துவிடாதீர்!''

தந்தை இப்படிச் சொன்ன போது தாமரைச் செல்வி வில்வநாதனுடைய விழிகளையே பார்த்தாள். 'கோச்' வண்டி புறப்பட்டது! (தொடரும்)

திருமூலர் தவமொழி

ராஜாஜி

இறைவனைப் பிரும்மா, விஷ்ணு சிவன் என்று மூன்று வடிவங்களாகப் பகுத்துப் பாடுகின்றன நம்முடைய சமய நூல்கள். இந்த மூன்று நிலைகளிலும் நிற்கிற ஈசன் ஒருவனே என்பதைப் பாடுகிறார் திருமூலர்.

நின்றனன் மாலொடு
நான்முகன் தானாகி

[மால்—திருமால், விஷ்ணு. நான்முகன்—பிரும்மா.]

தான் ஒருவனே திருமாலாகவும் பிரும்மாவாகவும் நிற்கிறான் எம்பெருமான்.

நின்றனன் தான், நிலம்
கீழோடு மேலென

நிலத்திலும், நிலத்துக்குக் கீழும், மேலே வானத்திலும் மூன்று உலகத்திலும் அவனே வியாபித்து நிற்கிறான்.

நின்றனன் தான் நெடு
மால்வரை ஏழ்கடல்

[நெடுமால்வரை—நெடிய பெரு மலை. ஏழ்கடல்—ஏழு கடல்கள் என்று சொல்கிற நீர்ப்பரப்பு முழுதும்.]

எங்குமாய், எல்லாமாய்ப் பரந்து நிற்கிறான் இறைவன் என்பதை, நிலத்திலும், மேலுலகிலும், கீழுலகிலும், உலகப் பரப்பு அவ்வளவிலும் வியாபித்து நிற்கிறான் என்று பாடுகிறார். இப்படிப் பட்ட சர்வவியாபியான பரம்பொருள் பக்தர்களுக்கு எப்படி இருக்கிறான்?

நின்றனன் தானே
வளங்கனி யாயே

[வளங்கனி—வளமான நல்லதிங்கனி.]

எங்குமாய் நிற்கிற அந்தப் பரம்பொருள் பக்தர்களுக்கு அருட்கனியாக வந்து நிற்கிறான்.

நின்றனன் மாலொடு
நான்முகன் தானாகி
நின்றனன் தான், நிலம்
கீழோடு மேலென
நின்றனன் தான், நெடு
மால்வரை ஏழ்கடல்
நின்றனன் தானே
வளங்கனி யாயே!

இறைவனுடைய சர்வவியாபகத்தை மேலும் பாடுகிறார்.

உண்ணின்று ஒளிரும்
உலவாப் பிராணனும்

[உண்ணின்று—இந்த உடம்பினுள் இருந்து. ஒளிரும்—ஒளி வீசுகிற. உலவாப் பிராணனும்—அழிவற்ற உயிரும்.]

இந்த மனித உடம்புக்குள் அழிவற்ற நித்தியப் பொருளாக நிற்கிற ஆன்மாவும்.

விண்ணின்று இயங்கும்
விரிகதிர்ச் செல்வனும்

[விண்ணின்று—வானத்தில் நின்று. இயங்கும்—ஒளி வீசுகிற. விரிகதிர்ச் செல்வனும்—விரிந்து பாயும் கதிர்களையுடைய சூரியனும்.]

வானில் நின்று கதிர் வீசுகிற சூரியனும் இறைவனே.

மண்ணின்று இயங்கும்
வாயுவு மாய்நிற்கும்

[மண்ணின்று இயங்கும்—மண்ணுலகில் பரந்து வீசுகிற. வாயுவுமாய் நிற்கும்—காற்றாகவும் நிற்கிறான் ஈசன்.]

இந்த உடம்பினுள் நிற்கிற ஆன்மாவும், விண்ணிலே கதிர் வீசுகிற சூரியனும், மண்ணுலகம் முழுதும் பரந்து வீசுகிற காற்றும், எல்லாம் இறைவனே என்று பாடுகிற முனிவர், பாடலை முடிக்கும்போது நுட்பமான உண்மையைக் காட்டுகிறார்.

கண்ணின்று இயங்கும்
கருத்தவன் தானே


[கண்ணின்று—புலன்களில் நின்று. கண் என்பதில் எல்லாப் புலன்களும் அடங்கும். இயங்கும் கருத்து—புலன்கள் வழி நாம் அடையும் உணர்வு.]

புலன்களின் வழியே நாம் அடையும் உணர்வு இறைவனுடைய சக்தியே. கண்ணுக்குக் கண்ணாகவும், காதுக்குக் காதாகவும் அப்படியே எல்லாப் புலன்களுக்கும் உள் நின்ற புலனாகவும் இருப்பது பரம்பொருளே. இதுவே உபநிஷத்திலும் சொல்லப்படுகிறது.

உண்ணின்று ஒளிரும்
உலவாப் பிராணனும்
விண்ணின்று இயங்கும்
விரிகதிர்ச் செல்வனும்
மண்ணின்று இயங்கும்
வாயுவு மாய்நிற்கும்
கண்ணின்று இயங்கும்
கருத்தவன் தானே!

(அடுத்த இதழில் முடியும்)

திருநீர்மலை



ஆண்டவனுடைய அருளைப் பெறுவதற்குக் குறுக்கு வழி ஏதேனும் உண்டா என்று கேட்டால் இல்லை என்றுதானே சொல்வீர்கள்? நானும் அப்படித்தான் சமீப காலம் வரையில் எண்ணிக் கொண்டிருந்தேன். அது எவ்வளவு பெரிய தவறு என்பதும், பேஷான குறுக்கு வழி இருக்கிறது என்பதும் திருநீர்மலைக்குச் சில தினங்களுக்கு முன்னால் சென்றிருந்த போது தெரிய வந்தது.

''மற்ற இடங்களில் நீங்கள் ஆயிரம் அசுவமேத யாகங்கள் செய்தாலும் சரி, திருநீர்மலையில் ஒரு தடவை ஆகுதி செய்வதில் நூற்றில் ஓர் அம்சத்துக்குக் கூட ஈடாகாது! தபஸ்விகள் மற்ற இடங்களில் கல்ப காலத்துக்குச் செய்கிற தபஸ் திருநீர்மலையில் க்ஷணக் காலத்துக்குச் செய்யப்படுகிற தபஸுக்குச் சமானமாகாது!'' என்று ஒரே போடாகப் போட்டார் குருக்கள்.

உடனே தரையில் பத்மாசனத்தில் உட்கார்ந்து குறைந்தபட்சம் ஒரு பத்து கல்ப காலத்துத் தவத்தின் பயனையாவது அடைந்திருப்பேன். தரை ரொம்பவும் சுத்தமாக இருந்ததால் வேஷ்டி அழுக்காகி விடுமோ என்ற கவலைகூடக் கிடையாது. ஆனால் பாருங்கள், சரியான சமயத்தில் மடப்பள்ளியிலிருந்து சர்க்கரைப் பொங்கல்

ளெறும் வாசனை கமகமவென்று மென்காற்றில் மிதந்து வந்து தவக்கோலம் பூணுவதிலிருந்து என்னைத் தடுத்தாட் கொண்டு விட்டது!

நீள மூச்சை உள்ளுக்கிழுத்து மணத்தை ரசித்தபடியே, ''பக்தர்கள் கிடுகிடு வென்று பதவி உயர்வு பெறும்படியாக அப்படி என்ன விசேஷம் இருக்கிறது திருநீர் மலையிலே?'' என்று கேட்டேன்.

''அதுவா? ஆண்டவனுடைய பிரீதி முழுவதற்கும் இலக்கான இடம் இது.''


''உங்களுக்கு எப்படித் தெரியும்?''


''என்ன கேட்டாய்?''

''ஆண்டவனுடைய பிரீதி முழுவதற்கும் இலக்கான இடம் இது என்பது உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்று கேட்கிறேன்.

''நான் சொல்லி நீ நம்ப வேண்டாமப்பா, வேண்டாம்! சாட்சாத் அந்த முனிஸ்ரேஷ்டர் வால்மீகிக்கு ஆகாசவாணியே தெரிவித்திருப்பதை நம்பலாமோ இல்லியோ?''

''ஆ! தேவலோகத்தில் வால்மீகி தவறாமல் ரேடியோ கேட்கிறாரா? டிரான்ஸிஸ்டர் தானே? அப்படித்தானிருக்கும்! நான்கூட இன்னும் கொஞ்ச நாளில் ரேடியோவில் பேசப் போகிறேன். கேட்டு விட்டு எப்படி இருந்தது என்று சொல்லச் சொல்லுங்கள்!''





''அடேடே! அசரீரியைக் குறிப்பிட்டால்... நீ என்னப்பா.....''

''ஓ, சரி, சரி! வால்மீகி முனிவர் என்ன வேண்டினார்? அசரீரி என்ன சொல்லிற்று?''

''வால்மீகி முனிவர் தவம் செய்வதற்கு ஏற்ற இடம் கிடைக்காமல் தவித்தார். எந்தச் சூழ்நிலையும் அவருக்குச் சரிப்பட்டு வரவில்லை. மனத்தை அடக்கித் தியானத்தில் ஆழ்ந்து போகும் சக்தியைப் பெற முடியவில்லை. அப்போதுதான் ஆகாசவாணி அவரைத் திருநீர்மலைக்குப் போகும்படி சொல்லிற்று. இங்கேதான் வால்மீகி முனிவருக்காக ஸ்ரீ ராமபிரான் பிரத்தியட்சமானார்.''

''ரிஷிகள் தவம் செய்வதற்குக் காட்டுக்கல்லவோ போவார்கள்?''

''ஆமாம். காத்தற்கடவுளாகிய விஷ்ணு பள்ளிகொள்ளத் தேர்ந்தெடுத்த கடல் ஆறு அரங்கம் என்ற இம்மூன்றில் இது அரங்கமாக (தீவு) இருந்திருக்கிறது. ஒரு காலத்தில், தோதமென்னும் மலையில் சயனித்திருப்பவன் தோத்தாத்திரிநாதன். மலையைச் சுற்றிலும் பெரிய தடாகம். அதைக் காண்டவம் என்ற பெயர் கொண்ட பெரிய கானகம் சூழ்ந்திருந்திருக்கிறது. அந்த வனத்திலே எத்தனையோ ரிஷிகள் நுரையையும் தழைகளையும் அத்தி இலைகளையும் உட்கொண்டு இறைவன் திருவடிகளையே தியானித்தபடி வசித்திருக்கிறார்கள்....''

''சரிதான். அவர்கள் சர்க்கரைப் பொங்கலை ருசி பார்த்ததில்லையோ?'' என்று கேட்டேன் மடப்பள்ளி பக்கமாகக் கண்களைத் திருப்பியபடியே.

''மலை ஏறிவிட்டுத் திரும்பி வாருங்கள். இலை போட்டு வைக்கிறேன்'' என்றார் குருக்கள் புன்னகையுடன்.

உபசரச் செல்கையில் குருக்கள் கூறியதற்கும் ஒரு படி மேலே போய் விட்டார் கோவில் தர்மகர்த்தா திரு வி.என். வரதப்பன். ''இந்த க்ஷேத்திரத்துக்கு வரவே வேண்டாம். மலையையும் கோபுரத்தையும் தூரத்திலிருந்து தரிசித்தாலே போதும். சகல பாவங்களும் தீர்ந்து விடும்'' என்றார் அவர்.

''அது என்ன கதை?'' என்று கேட்டேன்.

''கதையில்லை. நிஜம்தான்'' என்று கூறி விட்டுத் தொடர்ந்தார் திரு வி. என். வரதப்பன். ''ஆந்திர தேசத்து நிலப் பிரபு ஒருவர் தாள முடியாத வயிற்றுவலியுடன் போராடினார். ஊர் ஊராகச் சென்று அதைப் போக்கிக் கொள்ள என்னென்னவோ செய்து பார்த்தார். ஒன்றும் பிரயோசனப்படவில்லை. ஒரு தடவை இப்படி சிரமப்பட்டவாறே ரயில் பிரயாணம் செய்து கொண்டிருக்கையில், தூரத்தில் ஒரு குன்றும் அதன் உச்சியில் கோபுரமும் அவர் கண்களுக்குத் தென்பட்டன. உடனே, 'என் நோய் தீர்ந்தால் இந்தக் கோயிலுக்கு நிலம் எழுதி வைக்கிறேன்' என்று வேண்டிக் கொண்டார். அவ



ருக்கு அது எந்த ஊரைச் சேர்ந்த ஆலயம், அதில் குடிகொண்டிருக்கும் தெய்வத்தின் பெயரென்ன என்பதுகூட அப்போது தெரியாது. இன்றைக்கும் ஓங்கோலில் ஸ்ரீ ரங்கநாதப் பெருமானுக்கு நிலம் உண்டு.

“இங்கே வந்து சேர்ந்ததும் எக்ஸிகியூடிவ் ஆபீசர் இருக்கிறாரா என்று விசாரித்தேன். ஓங்கோலுக்குப் பண வசூலுக்காகப் போய் இருப்பதாகச் சொன்னார்கள். அதனால்தான் இது ஞாபகம் வந்தது” என்றார் திரு வி. என். வரதப்பன்.

திரு வி. என். முத்துரங்கமுதலியார் அவர்களுடைய சகோதரர் குமாரரும் அமைச்சர் திரு பக்தவத்சலம் அவர்களுடைய மருமகனுமாகிய திரு வி. என். வரதப்பன், ஸ்ரீ முத்துரங்க முதலியார் இறைவன் திருவடிகளைச் சேர்ந்த பிறகு கோயில் டிரஸ்டியாகப் பொறுப் பேற்றுக் கொண்டு திறம்பட நிர்வகித்து வருகிறார். திருநீர்மலைச் சுற்றுவட்டாரத்தில் இறைவனுக்கு மட்டுமே நிலம் இருக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடு, அங்கே தமக்கிருந்த நிலம் முழுவதையும் கோயிலுக்கு எழுதி வைத்துவிட்ட பெருந்தகை ஸ்ரீ வி.என் முத்துரங்க முதலியார் அவர்கள். சித்தப்பாவைப் போலவே தெய்வ பக்தியும் தயாள சிந்தையும் குறைவறப் பெற்றுள்ள திரு வரதப்பன் அவர்களுடைய நன்முயற்சியால் திருநீர்மலைக் கோயில், படிக்கட்டுகள், குளம் முதலியனவெல்லாம் புதுப்பிக்கப்பட்டு ஏப்ரல் மாதம் ஒன்பதாம் தேதியன்று மகாஸம்புரோக்ஷணமும் நடைபெறவிருக்கிறது.

மலையின் மீது ஏறிச் செல்கையில்தான் ஆண்டவனுடைய பிரீதி முழுமைக்கும் இலக்கான இடம் இது என்று சொன்னார்களே, அதிலுள்ள உண்மை புரிந்தது. ‘இவ்வளவு அழகிய இடம் ஆண்டவனுடைய பிரீதிக்கு இலக்காகாமல் எப்படி இருக்க முடியும்’ என்று நினைத்துக் கொண்டேன். நெடுந் தூரத்துக்கு நெடுந்தூரம் பச்சைப் பசேல் என்ற வயல் வரப்புக்கள், ஆங்காங்கே சிறு சிறு குன்றுகள், அடக்கமானதும், அழகானதுமான ஊரை ஒட்டினாற்போல நீராழிமண்டபத்துடன் கூடிய கோயிலைச் சேர்ந்த குளம், வளைந்துநெளிந்து நிதானமாகப் பாயும் அடையாறு நதி எல்லாம் வனப்புச் சொட்டக் காட்சி தந்தன. இன்னும் குருக்கள் கூறியது போல் அந்தக் காலத்திய, நீரும் கானகமும் சூழ்ந்த தோயாத்ரியைக் கற்பனைக் கண்கொண்டு பார்த்த போது, அந்த அதியற்புத சௌந்தர்யத்தில் லயித்துப் போன இறைவன், நின்றான், இருந்தான், கிடந்தான், நடந்தான் என்ற நான்கு திருக்கோலங்களிலும் அங்கே புகுந்து கொண்டது குறித்து அதிசயப்படத் தோன்றவே யில்லை. ரொம்பவும் நியாயமான காரியம்தான் என்றே எண்ண வேண்டியிருந்தது.

மலைமீது ஏறிச் செல்லப் படிகள் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளன. ஒரு படிக்கு ரூபாய் இருபத்தைந்து வீதம் நன்கொடை வசூலித்திருக்கிறார்கள். ஆறு படிகளை அமைக்கத் தொகை வழங்கியவர்கள் உண்டு என்றாலும் அறுபது தொழிலாளர்கள் ஒன்றுகூடி இரண்டணா, நாலணா, எட்டணா என்று வசூலித்து ஒரு படியை அமைக்க உதவியிருக்கிறார்கள் என்பதும் கவனிக்கத்தக்கது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் தங்கள் வசதிக்கு ஏற்ப இந்தப் புனிதத் திருப்பணியில் பங்கெடுத்துக் கொண்டு இறைவனுடைய கருணைகடாட்சத்துக்குப் பாத்திரராகியிருக்கிறார்கள் என்பதை உணர்த்துகின்றன, படிகளில் பொறிக்கப்பட்டுள்ள விவரங்கள். இருபுறங்களிலும் கைப்பிடிச் சுவர்கள் அகலமான மேடை போலவே அமைந்திருக்கின்றன, சற்று வயதானவர் உட்கார்ந்து இளைப்பாற வசதியாக.

உயரே கோபுரம் பழுது பார்க்கப்பட்டுக் கண்களைப் பறிக்கும் நிறங்களில் புது மெருகுடன் காட்சி தருகிறது. அதற்குச் சற்று முன்னால் பக்தகோடிகளை வரவேற்று முகமன் கூறுவது போல அமைந்துள்ளது விசாலமான ‘கல்கி மண்டபம்’. கல்கி அதிபர் ஸ்ரீ சதாசிவம் அவர்களும் அவரது வாழ்க்கைத்துணைவியார் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களும் மனமுவந்து இந்த நல்ல கைங்கரியத்தைச் செய்திருக்கிறார்கள். அமரர் கல்கி அவர்களது

நினைவைப் போற்றும் வகையில் ரங்கநாத ருக்கு இந்தக் காணிக்கையைச் செலுத்திப் பெருமாளின் அருளைப் பெற்றிருக்கிறார்கள்.

கோயிலின் நான்கு புறங்களிலும் புதிதாகச் சுற்றுவட்டச் சுவர் எழுப்பப்பட்டிருப்பதுடன் கட்டாந்தரையாக இருந்த இடங்களில் சிமெண்டுத் தளமும் போடப்பட் டிருக்கிறது. மலையின் அடிவாரத்தில் உள்ள கோயிலிலும் இதே போல் பல புதிய முன்னேற்றங்களைக் காணலாம். மலை மீதும் சரி, கீழேயும் சரி, மின்சார விளக்குகள் போடுவதற்கான பொருள் செலவு முழுவதையும் ஸ்ரீ வி. என். வரதப்பன் அவர்களே மேற்கொண்டிருப் பதை அறிந்தேன். கோயிலைச் சேர்ந்த அர்ச்ச கர்களுக்கும் இதர ஊழியர்களுக்கும் புதி தாகக் குடியிருப்பு வசதிகள் செய்து தரப்பட் டுள்ளன. க்ஷீரபுஷ்கரணியின் படிக்கட்டுக் களும் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

நீர்வண்ணனை (நின்றான்) கீழே தரிசித்து விட்டு வந்த நாங்கள், மலை மேலே ஸ்ரீ ரங்க நாதரையும் (கிடந்தான்) திருவிக்கிரமனை யும் (நடந்தான்) பிரகலாதனுக்காகச் சாந்த சொரூபியாகக் காட்சி தரும் நரசிம்மனையும் (இருந்தான்) தரிசித்து விட்டுக் கீழே இறங்கத் தொடங்கினோம்.

எதிரே புது மணம் புரிந்து கொண்ட தம்பதிகள் உற்றமும் சுற்றமும் புடைசூழக் குதூகலம் பொங்கித் ததும்ப மலை ஏறிக் கொண்டிருந்தார்கள். ''கோயிலைப்பொறுத்த வரை ஒரு திருமணத்துக்குப் பதினைறு ரூபாய் தான் இவர்களுக்குச் செலவு'' என்றார் திரு வி. என். வரதப்பன். ஏழை எளியவர்களுக் குப் பேருபகாரமாக அமைந்துள்ளது இந்த ஏற்பாடு என்பதைப் புரிந்து கொண்டேன். திருமணத்துக்கு ஏற்ற மாதங்களில் தினம் இரண்டு, மூன்று என்று கல்யாணங்கள் நடை பெறுகின்றன இங்கே.

''அதோ தெரிகிறது, பார்த்தீர்களா?'' என்று ஒரு குன்றைச் சுட்டிக்காட்டினார் திரு வி. என். வரதப்பன் அவர்கள். ''அதோ அந்தக் குன்றிலேதான் திருமங்கை ஆழ்வார் வந்து தங்கி யிருக்கிறார். எங்கு பார்த்தாலும் ஜலப் பிரளயமாக இருக்கவே அவரால் தோத் தாத்திரிநாதனைத் தரிசிக்க முடியவில்லை. ஒரு நாளா, இரண்டு நாட்களா, ஆறு மாதங்கள் அந்தக் குன்றின் மேலேயே பக்திமேலீட்டால் பொறுமையோடு காத்திருந்திருக்கிறார், இறை வனைத் தரிசிக்காமல் திரும்புவதில்லை என்ற உறுதியோடு. கடைசியில் ஒரு வழியாக நீரும் வடிந்திருக்கிறது. கண்குளிர நீர் வண்ணனை யும் ரங்கநாதனையும் மற்றத் தெய்வங்களையும் தரிசித்து விட்டு மங்களாசாஸனமும் செய் திருக்கிறார்.''

அன்றாயர் குலக் கொடியோடு
அணிமாமலர் மங்கையொடன்பளவி
அவுணர்க்கு
என்றானும் இரக்கமில்லாதவனுக்கு
உறையுமிடமாவது இரும்பொழில்சூழ்
நன்றாயபுனல்நறையூர் திருவாலிகுடந்தை
தடம் திகழ்கோவல்நகர்
நின்றான் இருந்தான் கிடந்தான்
நடந்தாற்கு இடம்
மாமலையாவது நீர்மலையே.

என்பது ஆழ்வார் அருளிய திருமொழி.

அவரைக் காட்டிலும் நாம் ஒரு விதத்தில் அதிர்ஷ்டசாலிகள்தான். அவரைப் போல ஆறு மாதங்கள் தெய்வ தரிசனத்துக்காகக் காத்திருந்து அவதிப்பட வேண்டாம். மிகச் சுலபமாய்த் திருநீர்மலையைச் சென்றடைந்து மகாஸம்ப்ரோக்ஷணத்தில் பங்கெடுத்துக் கொண்டு புனிதமடையலாம். அதோடு அங்கே ஏப்ரல் ஆறும் தேதி முதல் எட்டாந் தேதி வரை அண்ணாசாமி பாகவதர் அவர் களுடைய ஹரிகதைகளையும் ஒன்பதாம் தேதி யன்று இரவு ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களுடைய இன்னிசையையும் கேட்டு ரசித்து மகிழலாம். நாதவெள்ளத்திலும் பக்தி வெள்ளத்திலும் மூழ்கித் திளைக்கலாம். பாக்கியசாலிகள்தானே நாம்?

— குட்டி கிருஷ்ணன்





அத்தியாயம் முப்பத்தொன்று

பணமும் பதவியும்

முருகையன் அதிகாரியின் அறைக்குள் நுழைவதற்கு முன்பே அவனுடைய வியாபாரம் சம்பந்தமான காகிதக் கட்டுக்கள் மேஜையில் தயாராக இருந்தன. அருகில் இருந்த நாற்காலியைச் சுட்டிக் காட்டி அதிகாரி அவனை உட்காரும்படி சொன்னார். 'ராமநாதன் — தலைமை அதிகாரி' என்ற எழுத்துக்கள் அவருக்குப் பின்னால் தொங்கிய பலகையில் பொறிக்கப்பட்டிருந்தன.

நடுத்தர வயதும், உருவமும், மாநிறமுமாக இருந்தார் அவர். உருண்டையான முகமும் அழுத்தமான மனோபாவமும் அவர் தோற்றத்தில் தெரிந்தன.

தனக்கு வந்திருந்த கடிதத்தை எடுத்து அவரிடம் நீட்டி, "இது சம்பந்தமாகத்தான் வந்திருக்கிறேன்" என்றான் முருகையன்.

கடிதத்தைப் பார்த்து விட்டு அவனிடமே திருப்பிக் கொடுத்தார். அவனை மறுபடியும் நன்றாக உற்று நோக்கினார்.

"உங்கள் வியாபாரத்தைப் பற்றி எங்களிடம் புகார்கள் வந்திருக்கின்றன. இந்தக் காகிதங்கள் அவ்வளவும் புகார்க் கடிதங்கள். இதற்கு நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?"

கடிதங்களைக் கண்டு திடுக்கிட்டான் முருகையன். திடீரென்று ஏதேதோ அதிர்ச்சி தரும் நிகழ்ச்சிகள் ஒன்றன்பின் ஒன்றாக நடைபெற்று வருவதாக அவனுக்குத் தோன்றியது.

"எடுத்ததற்கெல்லாம் புகார் செய்பவர்கள் சிலர் இருக்கிறார்கள். காலையில் கூட இப்படித்தான் ஒருவர் என்னிடம் வந்தார். நேரில் வந்து விஷயங்களைத் தெரிந்து கொண்டவுடன் அவர் திரும்பி விட்டார்."

அதிகாரி ராமநாதன் இதைக் கேட்டுத் தமக்குள் மெதுவாகச் சிரித்துக் கொண்டார். அந்தக் கடிதங்கள் யாரால் எதற்காக எழுதப் பெற்றன என்பது அவருக்கும் தெரியாது; முருகையனுக்கும் தெரியாது.

அவ்வளவும் குமரவேலின் தூண்டுதலால் எழுதப்பட்ட புகார்க் கடிதங்கள். பெரியபாளையம் கிராமத்திலேயே இப்படியெல்லாம் 'மொட்டைப் பெட்டிஷன்கள்' எழுதிப் போடுவதில் கை தேர்ந்தவர் அவர். அதே வேலையை அவர் பட்டணத்திலும் சாதுரியமாய்ச் செய்திருந்தார். அதோடு அவை எப்படியெல்லாம் செயல்படுகின்றன என்பதையும் ஆவலோடு அவர் கண்காணித்து வந்தார்.

ஆனால் அவர் நடப்பைத் தெரிந்து கொண்டு மிகைப்படுத்திச் சொல்லியிருந்தாரே தவிர ஆதாரம் இல்லாமல் எதையும் செய்து விடவில்லை.

"மிஸ்டர், முருகையன்!" என்று அதட்டினார் அதிகாரி. "புகார்க் கடிதங்களுக்குத் தக்க காரணங்கள் இருக்கின்றன என்பதை நன்றாகத் தெரிந்து கொண்ட பிறகுதான் உங்களை இங்கே அழைத்திருக்கிறோம்."

முருகையனுக்கு அப்போதுதான் தன் முதலாளிப் பதவியின் மீதே வெறுப்பு ஏற்பட்டது. நெருப்பு இல்லாமல் புகை வந்து விடாது. பங்களாவுக்கு வந்து அவனை ஒரு மனிதர் நேருக்கு நேர் தர்மத்தின் பெயரால் குற்றம் சாட்டினார். இப்போது அந்த அதிகாரியோ சட்டத்தின் பெயரால் குற்றம் சாட்டுகிறார்.

அங்கே தர்மம்!

இங்கே சட்டம்!

சிறிது நேரம் முருகையன் யோசனை செய்து விட்டு, "கடையில் நடக்கும் விஷயங்களை இன்றைக்குத்தான் நான் நேரில் வந்து கவனித்திருக்கிறேன்; இது

வரையில் நடந்த எதுவுமே எனக்குத் தெரியாது'' என்றான்.

''இதை நான் நம்ப வேண்டும் என்கிறீர்களா?'' என்று கேட்டார் அதிகாரி.

''நம்பினால் நம்புங்கள், நம்பாவிட்டால் வேண்டாம். நான் உண்மையைத்தான் சொல்கிறேன்.''

''சட்டம் தெரியாது என்பதால் குற்றத்திலிருந்து தப்ப முடியாது என்பது தெரியுமா?''

''தெரியும்'' என்று பணிவோடு பதில் அளித்தான் முருகையன்

அதிகாரி ராமநாதனுக்கு முருகையன் விநோதமான மனிதனைக் காட்சியளித்தான். அவருக்கு அவனை நம்பவும் முடியவில்லை; நம்பாமலிருக்கவும் முடியவில்லை.

''மிஸ்டர், முருகையன்! ஆரம்பத்தில் உங்கள் மனுவைப் பார்த்து, உங்களுக்கு அநுமதி வழங்கும்படி சிபாரிசு செய்தது நான்தான். நீங்கள் படித்தவர் என்பதை அறிந்தேன்; பொதுநலத்துக்காகக் கஷ்டப்பட்டவர் என்பதனால் எனக்கு உங்களிடம் மதிப்பு ஏற்பட்டது; தொழிலைப் பெருமையோடு செய்வீர்கள் என்று நம்பினேன்..... ஆனால்?....''

அவர் கூறியது புதிராக இருந்தது முருகையனுக்கு.

''நான் யாரிடமும் என்னைப் பற்றி எதுவும் சொல்லிக்கொண்டதில்லையே?''

''உங்களுடைய மனுவில் விற்பனைக்கு அநுமதி கேட்டு எழுதும்போது உங்களைப் பற்றிய தகவல்கள் கொடுத்ததை அதற்குள் மறந்துவிட்டீர்களா?''

''என்ன!''

''உங்களுடைய கல்லூரிக் கல்வியை நீங்கள் நாட்டுக்காகக் கெடுத்துக் கொண்டது, நீங்கள் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறைக்குப் போனது, வாழும் உரிமை கோரி அநுமதி கேட்டது இவ்வளவும் உங்களுக்கு நினைவில்லையா?''

முருகையனுக்கு அந்த அதிகாரியின் ஒவ்வொரு சொல்லும் ஒரு கூர் வாளாக இருந்தது. இதையெல்லாம் அவன் எப்போது எழுதினான்? இவ்வளவும் மாணிக்கம் செய்திருக்கிறாரா! வெறும் காகிதங்களில் கையெழுத்து வாங்கியது இதற்குத்தானா?

''என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். நான் எனக்குத் தெரியாமலே பெருந் தவறுகளைச் செய்து விட்டேன்'' என்று நாத் தழுதழுக்கக் கூறினான் முருகையன்.

''தெரியாமல் என்றால்?''

''தயவுசெய்து என்னை எதுவும் கேட்காதீர்கள். நான் சட்டப்படி குற்றம் செய்திருந்தால் அதற்காக என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமோ, அதை எடுத்துக் கொள்ளுங்கள். வாழ்க்கையில் இது எனக்கு ஒரு மறக்க முடியாத பாடமாக இருக்கட்டும்.''

அதிகாரி ராமநாதனுக்கு முருகையனின் சொற்களில் இருந்த உண்மை பளிச்சென்று புலப்பட்டு விட்டது. இது போன்ற செயல்களை நன்கு அறிந்திருந்தவராதலால் முருகையனின் நிலையை நன்கு புரிந்து கொண்டு விட்டார். திறமை கொண்ட ஒரு நாணயமில்லாத மனிதரின் கைப்பாவை அவன்! ஏமாற்றுக்காரர் ஒருவரின் பழியை மட்டும் சுமக்கும் சுமைதாங்கி அவன்!

''உங்களை நான் நம்புகிறேன். ஆனால் நீங்கள் இந்தக் குற்றத்தைச் செய்யவில்லையே தவிர, இதற்குத் தெரிந்தோ, தெரியாமலோ ஒரு கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறீர்கள்.''

''அதுதான் சொல்லி விட்டேனே? நான் தண்டனைக்கு அஞ்சவில்லை. உங்கள் கடமையிலிருந்து உங்களைத் தடுக்கவில்லை. நீங்கள் செய்யும் முடிவை நான் மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன்.''

அதிகாரி ராமநாதன் முருகையனைப் பார்த்து அன்போடு சிரித்தார். நூற்றில் ஒரு மனிதர்கூட முருகையனைப் போல் வெகுளியாகவும் துணிவோடும் இருந்து அவர் பார்த்ததில்லை. அவனைச் சந்தித்தது அவருக்கு மகிழ்ச்சி தந்தது.

''இப்போது எந்த நடவடிக்கையும் எடுக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. எச்சரிக்கை செய்து அனுப்புவதற்காக அழைத்தேன். ஒரு விஷயத்தில் நீங்கள் கவனமாக இருப்பது அவசியம். ஒன்று இனிமேல் நீங்கள் நேரடியாக இருந்து தொழிலைக் கவனிக்க வேண்டும்: இல்லாவிட்டால் அதை விட்டுவிட வேண்டும். எனக்குள்ள பொறுப்புக்களை எனக்குக் கீழே உள்ளவர்கள் சரியாகக் கவனிக்கவில்லையென்றால் அது என் தவறுதான். தெரிந்ததா?''

''இனிமேல் கட்டாயம் நான் நேரில் கவனிக்கிறேன்'' என்றான் முருகையன்.

அதிகாரி ராமநாதனை இருந்தவர் மனிதர் ராமநாதனாக மாறி அவனிடம் கலகலப்போடு சிறிது நேரம் அளவளாவினார். அவர் பேசிய பேச்சுக்கள் ஆழ்ந்த உண்மைகளை நுணுக்கமாக அவனிடம் வெளியிட்டன.

அவர் கூறினார்:—

''திடீரென்று நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்தவுடன் எல்லாருக்குமே நன்றாக வாழ வேண்டுமென்று ஓர் ஆசை ஏற்பட்டிருக்கிறது. இது நியாயமான ஆசைதான். ஆனால், வசதியும் வாய்ப்பும் கிடைத்தவர்களில் சிலர், திடீரென்று பேராசைப்படத் தொடங்கி விட்டார்கள். இந்தப் பேராசைத்

தொத்துநோயை எப்படியாவது ஒழித்துக் கட்ட வேண்டும்.''

''வசதியும் வாய்ப்பும் என்றால்?''

''பணமும் பதவியுமோ அல்லது இந்த இரண்டில் ஒன்றோ கிடைப்பதற்கு வாய்ப்பும் வசதியும் பெற்றவர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். பொருளும் அதிகாரமும்தான் இந்த உலகத்தையே இப்போது ஆட்சி செய்து கொண்டிருக்கின்றன. மனித சமுதாயத்தின் வாழ்வு ஒழுங்காக இயங்குவதற்கு இந்த இரண்டுமே மிக மிகத் தேவையானவை. அதனால்தான் இந்த இரண்டுக்கும் இப்போது கடுமையான போராட்டம் உலகில் நடந்து கொண்டிருக்கிறது.''

சிந்தித்துப் பார்த்தான் முருகையன். அவனுடைய மனத் திரையில் உலகம் இரு முனைகளாகப் பிரிந்து நின்று போர் முரசு கொட்டுவது தெரிந்தது. இரண்டு போர்களின் தொல்லைகளையும் சிறுமைகளையும் அநுபவித்த பிறகும் அதற்குப் புத்தி வரவில்லை.

''ஆமாம், சில நாடுகள் பணத்தைக் குவித்துக் கொண்டு போராடுகின்றன; இன்னும் சில நாடுகள் அதிகாரத்தைக் குவித்துக் கொண்டு போராடுகின்றன.''

''பணத்தைத் தேவைக்கு அதிகமாகக் குவிப்பதும் ஆபத்து; அதிகாரத்தைத் தேவைக்கு அதிகமாகக் குவிப்பதும் ஆபத்து. ஏனென்றால் பணத்துக்கும் அதிகாரத்துக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. இந்த இரண்டையும் சேர்க்கும் வழியிலும் சரி, செலவு செய்யும் வழியிலும் சரி, நேர்மை இருக்க வேண்டும்; அறம் பிறழக் கூடாது.''

ஏதோ ஓர் அலுவலகத்தின் சாதாரணத் தலைமை அதிகாரி என்று அவரை நினைக்க முடியவில்லை. முருகையனுக்கு அவர் ஆயிரத்தில் ஒரு மனிதராகத் தோன்றினார்.

''ஊழல்கள் இந்த இரண்டு இடங்களிலும் இயல்பாகவே காளான்களைப் போல் முளைக்கத் தொடங்கி விடும். ஏனென்றால் ஒன்று மற்றொன்றுக்கு ஆசைப்பட்டுத் தன் கடமையிலிருந்து நழுவப் பார்க்கும். இங்கேதான் அறத்தின் ஆதிக்கம் வேண்டும். — நான் சொல்வது உங்களுக்குப் புரிகிறதா?''

தெளிவாகப் புரியவில்லை முருகையனுக்கு. ஆவலோடு அவர் முகத்தைப் பார்த்தான்.

''உதாரணத்துக்கு என்னையும் உங்களையும் எடுத்துக் கொள்ளுங்கள். என்னிடம் குறிப்பிட்ட அளவுக்கு அதிகாரம் இருக்கிறது. இந்த அதிகாரத்தை உங்கள் பணத்துக்கு ஆசைப்பட்டு நான் தவறான வழியில் செலுத்தலாம். அல்லது என்னை விட அதிகாரம் படைத்தவர்களின் செல்வாக்குக்குப் பயந்தும் நான் தவறு செய்யலாம். அதேபோல் நீங்களும் குறுக்குவழியில் பொருள் குவிக்க என் துணையை நாடலாம். — முடிவு என்ன ஆகும்? நீங்களே சொல்லுங்கள்?''

''அதர்மந்தான் நிலவும். சமதர்மம் நிலவவே நிலவாது! சிலருக்கு வாழ்வும் பலருக்குத் தாழ்வும் கிடைக்கும்.''



''அதனால்தான் சொல்கிறேன், நம் இருவரில் யார் பேராசைப்பட்டாலும், நாம் நம்முடைய பங்குக்குப் பலரது வாழ்வைக் கெடுக்கிறோம். அவர்களுக்கு உரிய வாழ்வை நாம் இருடிக் கொள்ளுகிறோம்!''

''காந்தி இருக்கிறார்; அவர் இந்த நாட்டின் கோடிக் கணக்கான மக்களைக்

கைவிட மாட்டார்'' என்று கூறினான் முருகையன்.

''பொறுப்பை அவரிடம் விட்டு நாம் சும்மா இருக்கக் கூடாது. முதலில் நாம் இருவரும் நம்மளவில் நேர்மையுடன் நடப்பதாக ஒரு முடிவு செய்து கொள்வோம். அதிகாரமும் பணமும் அறத்தின் வெற்றிக்குக் குந்தகம் விளைவிக்காமல் ஒத்துழைக்க முன்வர வேண்டும்!''

எழுந்து நின்று கைகூப்பி விட்டு, முருகையனின் வலது கரத்தைப் பற்றிக் கொண்டு அன்போடு குலுக்கினார் அதிகாரி. முருகையனின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் வழிந்தது. 'இப்படி எல்லா இடங்களிலுமே பணமும் அதிகாரமும் அறத்தை நம்புமா? உலகம் ஒன்றி உயர்ந்து வாழுமா?'

அத்தியாயம் முப்பத்திரண்டு

மீண்டும் வருவானா?

அலுவலகத்தை விட்டு வெளியில் கார் நிற்குமிடத்துக்கு வந்தான் முருகையன். அங்கே மரத்தடி நிழலில் கார் மீது சாய்ந்தபடியே நின்று கொண்டிருந்தார் குமரவேல். ஏனோ முருகையனுக்கு அந்தச் சமயத்தில் அவரைச் சந்தித்தது அவ்வளவாகப் பிடிக்கவில்லை.

இதுவரையில் அவன் ஏதோ ஓர் உயர்ந்த பீடத்தில் அமர்ந்திருந்தது போலவும், இப்போது மறுகணமே புழுதி படிந்த மண்ணுக்கு வந்து விட்டது போலவும் தோன்றியது. புழுதி படிந்த மண்கூடப் பல வகைகளில் உயர்ந்தது தான். ஆனால் குமரவேல்?

வட்டமிட்டுப் பல இடங்களில் பறந்து திரியும் கழுகு எங்கெங்கே செத்த எலிகளும் அழுகல் பொருள்களும் கிடைக்குமென்று கண்ணோட்டம் விடுகிறதல்லவா? அது போல் மனிதர்களில் அழுகிப் போன மனம் படைத்தவர்களையும், மனசாட்சியைக் கொன்றவர்களையும் தேடித் திரிந்து கொண்டிருந்தார் அவர்.

''என்ன, முருகையா! போன காரியம் என்ன ஆச்சு? அந்த அதிகாரி பொல்லாதவனாச்சே?'' என்று எல்லாம் தெரிந்தவர் போல் கேட்டார் குமரவேல்.

முருகையன் இகைப்போடு அவர் முகத்தைப் பார்த்தான். அவரிடம் பேசுவதற்கு அவனுக்கு மனம் வரவில்லை.

''கடைக்குப் போயிருந்த இடத்திலே கேள்விப்பட்டேன். நானும் கூட இருந்தால், மாணிக்கம் இல்லாத சமயத்திலே உனக்கு உதவியாக இருக்கும்னு பார்த்தேன். அதுக்குள்ளே நீ உள்ளே போயிட்டியாம்....''

'நல்ல வேளையாக உங்கள் உதவி எனக்குக் கிடைக்கவில்லை!' என்று நினைத்துப் பெருமூச்சு விட்டான் முருகையன். குமரவேலோ ஓர் அருமையான வாய்ப்பை நழுவ விட்டதற்காகத் தமக்குள் வருத்தப்பட்டுக் கொண்டார். அவனுடன் சென்றிருந்தால், அந்த அதிகாரிக்குப் பிடிக்காத விஷயங்களைச் சொல்லி, முருகையன் மீது அவருக்கு ஆத்திரத்தைக் கிளறி விட்டிருக்கலாம்.

என்றாலும் அவர் நம்பிக்கை குறையவில்லை. கலங்கிய கண்களுடன் வந்தவனைப் பார்த்து விட்டு, ஏதாவது கெடுபிடி நடந்திருக்குமென்றுதான் நினைத்தார்.

''முருகையா! உன்னை இப்படி எதிலேயாவது அந்த மாணிக்கம் மாட்டி விடப் போகிறான்னு எனக்கு முன்னாலேயே தெரியும். நானும் உனக்குப் படிச்சுப் படிச்சுச் சொல்லியிருக்கேன். உன்னோட கடையைப் பத்தி எத்தனை பேர் எங்கிட்டேயே புகார் செய்திருக்காங்க, தெரியுமா?''

''இனி மேல் அப்படி எதுவுமே நடக்காது. நான் நேரில் இருந்து கவனிக்கப் போகிறேன்.''

''பாவம்! நீ வீணா அந்த மாணிக்கத்துக் கிட்டே பலியாகத்தான் போறே!'' என்று நீலிக் கண்ணீர் வடித்தார் குமரவேல். ''நான் அவனோட சேர்ந்து தொழில் செய்யறேன்னா அது வேறே விஷயம். கொல்லர் தெருவிலே அவன் ஊசி விற்க முடியாது. ஆனால் நீ அப்படி இல்லையே? உன்னோட கண்ணுக்கு முன்னாலேயே அவன் ஆயிரம் தில்லு முல்லுகளைச் செய்யலாமே? உன்னோட முதுகுக்குப் பின்னாலேயே அவன் உனக்குக் குழி பறிப்பானே?''

குமரவேலின் பேச்சு முருகையனுக்கு அருவருப்பைத் தந்தது. என்றாலும் ஓரளவாவது அதில் உண்மை இல்லாமல் இல்லை. அதிகாரி ராமநாதன், 'புகாருக்குத் தக்க காரணங்கள் இருப்பதைத் தெரிந்து கொண்டுதான் உங்களை அழைத்திருக்கிறோம்' என்று கூறியதை அவன் நினைத்துக் கொண்டான்.

''ஆமாம், அந்த ஆபீசர் என்ன சொன்னான்? பேப்பரில் அவன் ஒரு எழுத்து எழுதினால் உங்க பிழைப்பே கெட்டுப் போகுமே?''

''அப்படியெல்லாம் ஒன்றும் நடக்காது'' என்றான் முருகையன். ''இனி

மேல் என்னையே பொறுப்போடு பார்த்து வரச் சொல்லியிருக்கிறார்.''

''எனக்கென்னமோ நீ ரொம்ப நாள் மாணிக்கத்துக் கிட்டே காலந்தள்ள முடியாதுன்னு தெரியுது. வெறும் காகிதத்திலே யார் யாருக்கோ மூட்டை கொடுத்ததாகக் கணக்கெழுதி வைச்சிருக்கானுக. அகப்பட்டுக் கிட்டா நீதான் திண்டாடணும். அவனுக்கு ஒண்ணுமில்லே.''

பளிச்சென்று மின்வெட்டைப் போல் சில சொற்கள் முருகையனைத் தாக்கி வதைத்தன. 'வெறும் காகிதத்திலே யார் யாருக்கோ மூட்டை கொடுத்ததாகக் கணக்கெழுதி வைச்சிருக்கானுக.'

அப்படியென்றால்?....

முருகையன் தலையைக் கையில் பிடித்துக் கொண்டான்.

''வருகிறீர்களா, கடைக்குப் போய்ப் பேசுவோம்?'' என்று அவரையும் காரில் ஏற்றிக் கொண்டான். கார் நிதானமான வேகத்தில் கடைக்கு முன்னால் வந்து நின்றது.

''இந்த முறையிலே விற்கிறது சரியில்லேன்னு, இனிமே வாங்குகிறவங்களுக்கே சீட்டுக் கொடுக்கணும்னு மேலே எழுதியிருக்கானும் இவன். காலம் ரொம்பக் கெட்டுப் போச்சு! ரொம்ப ரொம்பக் கெட்டுப் போச்சு!'' என்று சொல்லிக் கொண்டே முருகையனைப் பின்பற்றிக் கடைக்குள் வந்தார் குமரவேல்.

முருகையன் இப்போது ஒரு முடிவுக்கு வந்திருந்தான். இனித் தினந்தோறும் நேரடியாகவே கடைக்கு வந்து வியாபாரத்தைக் கவனிக்க வேண்டும். அங்கிருந்து கொண்டே வழக்கமான கணக்குகளையும் எழுதிக் கொள்ளலாம். தெரியாத விஷயங்களைக் கணக்குப்பிள்ளையிடம் கேட்டுத் தெரிந்து கொண்டால் சரியாகி விடும்.

பெட்டியடியில் அமர்ந்து கொண்டு முருகையன் தன் முடிவை மற்றவர்களிடம் சொல்லவே, அவர்கள் என்ன செய்வதென்று தெரியாமல் தவித்தார்கள். அவனுடைய செய்கையை அவர்களால் வரவேற்கவும் முடியவில்லை; தடுக்கவும் முடியவில்லை. பெரிய முதலாளிக்கு மைத்துனனாக வரப்போகும் எதிர்கால மாப்பிள்ளை அவன் என்பது மற்றவர்களுக்கும் தெரிந்திருந்தது.


''கணக்குப்பிள்ளே! நீங்கதான் இங்கே இருக்கிற நெளிவு சுளிவெல்லாம் எங்க பிள்ளையாண்டானுக்குச் சொல்லித் தரணும். ஆமா, இவன் கிட்டே பொறுப்பை ஒப்படைச்சிடுங்க. நானும் மாணிக்கம் வந்தால் சொல்றேன்'' என்றார் குமரவேல்.

''ஆமாம், இதுவரை என்ன நடந்திருந்தாலும் சரி, எப்படியோ தொலையட்டும். இனி மேல் சட்ட விரோதமாய் எதுவும் இங்கே நடக்கக்கூடாது!'' என்று கண்டித்துக் கூறினான் முருகையன்.

''முருகையா! நீயும் சிறுபிள்ளைத்தனமாகப் பேசக் கூடாது. சட்டத்தைப் பார்த்து நடந்து, நஷ்டம் வந்தால் எவன் தருவான்? தொழில் செய்கிற எல்லாருக்குமா லாபம் வந்து குவிஞ்சிடுது? எத்தனைபேர் வியாபாரம் செய்து நொடிச்சுப் போய் மூலையிலே உட்கார்ந்திடுறாங்க? அவங்களோட கதி என்ன? அவங்க எப்படிப் பிழைப்பை நடத்தறதாம்?.....என்னமோ நீ தர்மபுத்திரனாட்டம் வாயாலே பேசிட்டாப் போதுமா? காத்தடிக்கிறப்பவே தூத்திக்கிட்டாத்தான் கஷ்டம் வருகிற காலத்திலே சமாளிக்கலாம்.''

முருகையனுக்குத் திடீர் திடீரென்று அவர் ஏன் இப்படிப் பேச்சை மாற்றுகிறார் என்று விளங்கவில்லை. குழந்தையையும் கிள்ளி விட்டுத் தொட்டிலையும் ஆட்டிக்கொண்டிருந்தார் அவர்.

''பெரியப்பா! நாணயத்தோடும் சிறிய அளவிலும் வியாபாரம் செய்யும் பலர் பாதிக்கப்படுவதற்குக் காரணம் பெரிய இடத்துப் போட்டிகள் தான்.



"ஏற்றுமதியை அதிகரித்து இறக்குமதியைக் குறைத்தால்தான் நம் நாடு சுபிட்சமடையும். ஆனால் இது நடைமுறையில் சாத்தியமாகவில்லை. உதாரணமாக நான் என் மனைவியை மட்டும்தான் அவள் பிறந்தகத்துக்கு ஏற்றுமதி செய்தேன். அவளோ இரட்டைப் பிள்ளைகளோடு இறக்குமதியாகியிருக்கிறாள்." —ஒரு பொருளாதார நிபுணர்

குறுக்குவழிப் போட்டிகளும் பேராசைப் பெரும் போட்டிகளும் தான் முதல் காரணம்,—காற்று அடிக்கும்போது தூற்றிக் கொள்வதா? அதே காற்று எதிர்ப் பக்கம் திரும்பியடிக்கத் தொடங்கி விட்டால்?"

"அப்படீன்னு வெளியிலே இருக்கிற போர்டை நீ அழிச்சு எழுதச் சொல்றியா? — உள்ளே சரக்கு இருக்கு. எழுத்திலே அது இல்லே!"

"பெரியப்பா!"

"வேணுமின்னு உள்ளேபோய் பார்!"

கணக்குப் பிள்ளை முதல் வேலைக்காரர்கள் எல்லோரும் கலவரமடைந்தனர். குமரவேலை அவர்களால் தடுக்க முடியவில்லை.

"வாய்ப்பேச்சும் எழுத்தும் தெய்வத்துக்குச் சமமானவை பெரியப்பா! தெய்வம் உண்மையில்தானே இருக்கிறது? பொய்யைப் பேசலாமா? எழுதலாமா?"

"வாழணுமா, கூடாதா?"

முருகையன் சரேலென்று உள்ளே எழுந்து சென்றான். சிறியதோர் சூறாவளி அங்கு சுழன்று செல்வது போலிருந்தது. குமரவேலும் விழுந்தடித்துக் கொண்டு அவன் பின்னால் சென்றார்.

உள்ளே கிடங்கின் இருளில் பேராசைப் பெரும் பேய்களைப் போல் மூட்டைகள் பதுங்கி விழித்துக் கொண்டிருந்தன. மரமாக, கல்லாக, சிலையாக நின்றான் முருகையன். கண்ணீர் தாரை தாரையாக வழிந்தது.

அன்று முற்பகல் அவனைக் குற்றம் சாட்டிப் பேசிய வேணுகோபாலின் குமுறல்கள் அவன் செவிகளில் மீண்டும் ஒலித்தன. காலமெல்லாம் உழைத்து விட்டுத் தமது கடைசிக் காலத்தில் சொந்த வீட்டில் வாழத் துடித்த அந்த நல்ல மனிதருக்குப் பொருள் கிடைக்கவில்லை.

'இவ்வளவும் வேறு யாருக்காக இருக்கின்றன? இதை வாங்கிப் போகிறவர்கள் எந்த விதத்தில் வேணுகோபாலை விடத் தகுதியுடையவர்கள்? எந்த வகையில் உயர்ந்தவர்கள்? என்ன உரிமை அவர்களுக்கு மட்டும் தனியாக இருக்கிறது?...எல்லாம் பணம், பணம் பணம்!

'தர்மம் எங்கே? நாணயம் எங்கே? நேர்மை எங்கே? சட்டம் எங்கே? பண்பு எங்கே?'

அவனுடைய நெஞ்சு பெருங்குரல் எடுத்து அழுவது போல், தெருவில் குபீரென்று அழுகுரல் கேட்டது. தனியொருவனின் அழுகுரல் அல்ல அது. ஒரு பெருங் கூட்டமே அழுது புலம்பிக் கொண்டு தெருவில் அலைமோதியது.

கடை வாசலுக்கு ஓடி வந்தான் முருகையன். கூட்டம் அலைமோதிக் கொண்டு ஓலமிட்டுச் சென்றது. ஆண் பெண், பெரியவர், குழந்தைகள், ஏழைகள், அனாதைகள் அனைவரும் துடிதுடித்துக் கொண்டிருந்தனர். தலை தலையாய் அடித்துக் கொண்டவர்கள் சிலர்; தரையில் விழுந்து புரண்டவர்கள் சிலர்; விம்மி விம்மிக் கண்ணீர் வடித்தவர்கள் சிலர்.

"என்ன? என்ன?"

"மகாத்மா இறந்து விட்டார்! காந்தியடிகளை யாரோ சுட்டுக் கொன்று விட்டார்களாம்!"

முருகையன் காரை மறந்து விட்டு, வெறி பிடித்தவன் போல் கூட்டத்தில் கலந்து அழுது கொண்டு, தன் வீட்டுக்கு வந்து சேர்ந்தான். காந்தியடிகளின் படத்தின் முன்பு சுருண்டு விழுந்தான்.

'அரசியலில் அறத்தைக் கலந்த வித்தகனே! ஏழைகளுக்காக ஏழையாக வாழ்ந்தவனே! பேராசையைப் பற்றி எரிக்கும் பெரு நெருப்பே! சிறுமைகள் கண்டு குமுறி எழுந்தவனே! வாழ்க்கையையே சத்தியத்தின் சோதனையாகக் கொண்டவனே! அஞ்சா நெஞ்சம் கொண்ட அறப் போர் மாமலையே! அன்பில் குழந்தை யுள்ளங் கொண்ட குணக் குன்றே! — நீ ஏன் இறந்தாய்? எங்கள் சிறுமைக்காக நீ பலியாகிவிட்டாயா?

'நீ உயிருடன் இருந்திருந்தால் இந்த மாணிக்கம் போன்றவர்களுக்கு எதிராகவும், குமரவேல் போன்றவர்களைக் குமுற வைப்பதற்காகவும் மற்றொரு அறப்போர் தொடங்கியிருப்பாயே? உன் வேலை முடியாத காலத்துக்குள் உன் உயிரை முடித்து விட்ட அந்த மாபாதகன் யார்? இன்னும் மெய்யான விடுதலை கிடைக்கவில்லையே! குணம் உயரவில்லையே! அதற்குள் நீ போகலாமா? போகலாமா?'

கதறல் ஓயவில்லை; கண்ணீர் நிற்கவில்லை.....

(தொடரும்)



ஆயிற்று. இதோ கட்டை வண்டி மறுபடியும் வந்து விட்டது. கடைசியாய் மிஞ்சியிருக்கும் சாமான்களை ஏற்றி அனுப்பி விட்டால் உடனே அவனும் கிளம்ப வேண்டியது தான்.

சௌரிக்கு உடம்பு துடித்தது. தலை தானாகவே 'மாட்டேன்' என்ற பாவனையில் ஆடியது.

அடுத்த நிமிஷம் தன்னுணர்வு பெற்றுச் சுற்றிப் பார்த்துக் கொண்டான். அந்த வீட்டில் இடம் இடமாய் அவன் தயங்கித் தயங்கி நிற்பதையும் காலியான அறைகளை

எது சொந்தம்?

ஆர். சூடாமணி

ஏக்கமுடன் வெறித்துப்பார்ப்பதையும் பைத்தியம் போல் தலையை ஆட்டுவதையும் தனக்குத் தானே ''ஐயோ வேண்டாமே!'' ''நான் மாட்டேன்!'' என்றெல்லாம் முணுமுணுத்துக் கொள்வதையும் அக்கம் பக்கத்து மனைகளிலிருந்து யாரேனும் கவனித்திருப்பார்களோ என்ற சந்தேகம்.

கூடத்திலிருந்து அவன் வாசலுக்கு வந்தான். ''என்னப்பா, போன தடவை வைத்த சாமானையெல்லாம் ஜாக்கிரதையாய்க் கொண்டு போய்ச் சேர்த்தீர்களா?'' என்று கட்டை வண்டியைத் தள்ளி வந்த ஆட்களிடம் விசாரித்தான்.

''உம்! சேர்த்து விட்டோம்.''

''கண்ணாடி பீரோவைச் சரியாய்க்கொண்டு போனீர்களா? உடையவில்லையே?''

''இல்லீங்க.''

''சரி. இதோ, இப்போ இந்த இரண்டு பெஞ்ச், கட்டில், அழுக்குப் பெட்டி, இந்தப் பலகைகள், கயிறுகள், பாத்திரங்கள், ஊஞ்சல்....''

அடேயப்பா! இன்னுமா இத்தனை சாமான்கள் பாக்கி? முந்தா நாளிலிருந்து சாமான்களைக் கட்டை வண்டியில் ஏற்றி ஏற்றி அந்த இன்னொரு வீட்டுக்கு அனுப்பி வந்தும் இன்னும் முடிந்தபாடில்லை.

ஆனால் இதிலென்ன ஆச்சரியம்? சாமான்களெல்லாம் நிறையத்தான் இருக்கும். ஒன்றல்ல. இரண்டல்ல, இருபது வருஷங்களாய்ச் சேர்ந்த சாமான்களில்லையா?

ஐயோ! இருபது வருங்கள்!

சாதாரண வருஷங்களா அவை? வீட்டுக் குழந்தைகளில் ஒருவனாகப் பெற்றோருடன் வந்தவன், இன்று தானே ஒரு குடும்பத் துக்குத் தலைவனாக இங்கிருந்து ஊரின் இன்னொரு பகுதியிலிருக்கும் தன் சொந்த வீட்டுக்குக் குடியேறுகிறான்.

சொந்த வீடா? எது சொந்தம்?

இருபது வருஷங்களின் இன்ப துன்ப நினைவுகளிலும் உயிர் பெற்று இலங்கும் இந்த வீடு சொந்தமா, வெறும் பணத்தால் ஒரு மாதம் முன்பு வாங்கிப் போட்ட அந்த வீடுதான் சொந்தமா?

அந்த வீட்டின் சுவர்களும் தரையும் கூரையும் செங்கல்லாலும் சிமெண்டாலும் கட்டப் பட்டவைதான். இனி அங்கு வசித்து வருஷங்களை அடுக்கி அவற்றை வீடாக்க வேண்டும்.

இதுவோ?

இது வீடு மட்டுமல்ல. சொந்த வீடே உண்மையில் இதுதான். வீட்டுக்காரர் கூட இங்கு சேர்ந்தாற் போல் இருபது ஆண்டுகள் இருந்த தில்லை. அவன் இருந்திருக்கிறான். அதன் ஒவ்வொரு அறையிலும் அவனுக்கு ஏதோ ஒரு நினைவு இருக்கிறது. இதுதான் சொந்தமானது.

இதை விட்டுப் போக வேண்டுமா?

ஊஹூம், முடியாது!

''இன்னும் என்னென்ன சாமான்கள் வைக்கணும் சாமி?''

ஆட்களில் ஒருவன் கேட்ட கேள்வியால் சௌரி திடுக்கிட்டு உணர்வடைந்தான்.

''என்னப்பா கேட்டே?''


''இன்னும் சாமான் உண்டுங்களா? இல்லே கயிறுலே கட்டிடலாமா?''

சௌரி எதிரே பார்த்தான். கடைசியாய்த் தங்கியிருந்த அத்தனை சாமான்களையும் வண்டியில் ஏற்றி விட்டிருந்தார்கள். இந்த ஆட்களின் சாமர்த்தியத்தை என்னவென்று சொல்வது! பல ரகம், பல அளவு, பல உருவம் கொண்ட சாமான் வகைகளை எப்படியோ சரியானபடி அடுக்கித் துளியும் இடைவெளியின்றி ஒரு பிரிக்க முடியாத கோவையாய்ச் செய்து விடுகிறார்களே! பிள்ளைகள் விதம் விதமான விளையாட்டுத் துண்டுகளை ஒன்று சேர்த்து ஒரு சரியான சதுரமாக அடுக்கி விடுவது போலத்தான்.

''கொஞ்சம் இருப்பா. மாடிக்குப் போய் வேறேதாவது சாமான் விட்டுப் போயிருக்கிறதா, பார்த்து விட்டு வருகிறேன்.''

மனசுக்கு நிச்சயமாகத் தெரியும், வேறு எதுவும் சாமான் இல்லை என்று. இன்னும் ஒரு முறை மாடிக்குப் போய் மேலும் கீழும் அந்தக் காலி அறைகளில் நடந்து மனசை நிரப்பிக் கொள்ளலாம் என்ற ஆசைதான்.

மாடிக்குச் சென்றான் சௌரி. ஒவ்வொரு மூலையிலும் நினைவு நின்று கனத்தது. சுவரில் விளக்கின் 'ஸ்விட்ச்' இருந்த இடத்தை



நோக்கிச் சென்றது. சட்டென்று விழிப்படைந்து சௌரி கையை இழுத்துக் கொண்டான். இரவில் அவன் வராந்தாவுக்குள் நுழையும்போதே கை தானாக அப்படி விளக்கை ஏற்றுவது வழக்கம். கைக்கு அந்தத் தனி உயிர் பல வருஷப் பழக்கத்தினால் வந்தது.

இதுதான் சொந்தம். இதை விட்டுப் போவதா? முடியாது, நடக்காது....

நடக்காதாவது! நடந்து கொண்டுதான் இருக்கிறது. அவன் தகப்பனாரும் மனைவியும் குழந்தைகளும் விடியற்காலையிலேயே அந்த இன்னொரு மனைக்குச் சென்றாகி விட்டது. அவன் மட்டும் இங்கு இருந்து கடைசிச் சாமான்களையும் ஏற்றி அனுப்பி விட்டு வீட்டுக்காரரிடம் வீட்டை ஒப்படைத்துப் பின் தானும் கிளம்பிச் செல்ல வேண்டியது தான். அதன் பிறகு இந்த வீட்டினுள் நுழைய வேண்டிய சந்தர்ப்பமே நேராமல் போகலாம். இது விடைபெறும் தினம்தான். சந்தேகமில்லை. அவனும் இந்த மனையிடம் விடைபெற்றுச் செல்லத்தான் போகிறான். அறிவுக்குத் தெரிகிறது. கால்கள் வெளியே நடந்துவிடும். ஆனால் பைத்தியக்கார உள்ளம் சொல்கிறது, இன்னும் 'மாட்டேன்' என்று.

மாட்டேனாவது? அர்த்தமற்ற பேச்சு.

வீட்டுக்காரன் கூடக் கீழே ஓர் அறையில் காத்து உட்கார்ந்திருக்கிறார். வீட்டைச் சப்பனிட்டு வேறொருவருக்கு வாடகைக்கு விட வேண்டிய கவலை அவருக்கு.

வேறொருவர் இங்கு இருப்பதா! சௌரிக்குத் தேகமெல்லாம் பதறியது. இது அவனுடைய சொந்த வீடு. அந்த வீட்டுக்காரரை விட அவனுக்கே இது அதிகச் சொந்தம். அவன் பெயரில் பதிவாகி அவன் பணத்தால் வாங்கப் பெற்றுள்ள அந்த இன்னொருவீட்டை விட இதுவே அவனுக்கு அதிகச் சொந்தம்.

நெற்றியில் வேர்வைத் துளிகள்.

''வேறு சாமான் இருக்குதா சாமி?''

அவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. கீழே கூலியாட்களில் ஒருவன் சாமான்கள் நிறைந்த வண்டி குடை சாயாமலிருக்கும் பொருட்டு ஒரு பக்கத்தைக் கட்டைக் கைப் பிடியால் கீழ்ப் பக்கமாக அமுக்கிப் பிடித்துக் கொண்டிருந்தான். அப்படியும் கனத்தின் ஏற்றத் தாழ்வினால் வண்டி இலேசாய் ஆடத்தான் செய்தது. அருகில் இன்னோர் ஆள் தாம்புக் கயிற்றுடன் நின்றிருந்தான். மற்றவர்கள் வேலை செய்த அலுப்புத் தோன்ற மாடியை அண்ணாந்து பார்த்தவாறிருந்தார்கள்.

சேசே! பாவம், அவர்களைக் காக்க வைத்து விட்டு என்ன யோசனை?

''வேறு ஒண்ணும் இல்லையப்பா. சாமான்களைக் கட்டி விடலாம்.''

வேர்வையை வழித்தெறிந்தான். அறைகளின் வெறுமைத் தோற்றம் அவனைக் குற்றம் சாட்டுவதைப் போல் இருந்தது. அங்கு முன்பு இருந்த சாமான்களையெல்லாம் மறுபடியும் கொண்டு வந்து வைத்துப் பழையபடி இந்த நினைவுக் களஞ்சியமான தன் 'சொந்த' வீட்டில் சாருமளவும் வாழ வேண்டும் என்று உடலும் மனமும் ஒருங்கே பரபரத்தன.

''போய் வருகிறேன், அன்பார்ந்த வீடே!''

கடந்த இருபது வருஷங்களின் இருப்புக்கு உயிர் கொடுக்கும் உயிர் இங்கே இருக்கிறது. இங்கே ஒவ்வொரு மூலையிலும் ஒரு பரிச்சயக் காற்று. ஒவ்வோர் இடத்திலும் ஒரு நினைவுத் தோழமை. அந்த நினைவில் படர்ந்த ஒவ்வொருவருக்கும் இந்த வீடு ஏதோ ஓர் அற்புதமான உயிரைக் கொடுக்கிறதே!

சௌரி கீழே இறங்கினான்.

இந்த ஹால் முழுவதும் அவனும் அவனுடன் பிறந்தவர்களும் சுற்றி விளையாடியதெல்லாம் எத்தனை தெளிவாய் ஞாபகமிருக்கிறது! இங்கு வந்தபோது அவன் பதினைந்து வயதுப் பையனல்லவா? நினைவு தெரிந்தவன் தான். அதிலும் குழந்தைகளுள் மூத்தவன்.

அப்போதெல்லாம் வீட்டில் என்ன சிரிப்புச் சத்தம்! இவ்வளவு பெரிய வீட்டின் ஒவ்வொரு சிறு மூலையும் தேவையாய் இருக்கும் படியாக வீடு நிறைய ஜனங்கள். குடும்பத்தினரைத் தவிர எத்தனை உறவினர்கள்!

இந்த அறையில் கோமளம் படிப்பாள். அப்போதெல்லாம் பெண்கள் கல்லூரியில் படிப்பது அபூர்வம். கோமளம் அப்படிப் படிக்கிறாளென்று குடும்பத்திலும் சுற்றத்தாரிலும் எத்தனை பெருமை!

எண்ணற்ற பிறந்த நாள் விருந்துகள், பண்டிகை விசேஷங்கள்— முக்கியமாய்க் கொலுப் படிகளை மறக்க முடியுமா! — படிப்பில் வெற்றிகள், தோல்விகள், கல்லூரிப்

படிப்பு, பிறகு வீட்டுக் குழந்தைகளின் கல்யாணங்கள், அப்பாவின் உத்தியோக உயர்வுகள், நடுவில் ஸ்ரீமதி இரண்டு மாதங்கள் ஜுரத்தில் படுத்துக் கொண்டிருந்த போது பெற்றோரின் கவலை, எதிரிலுள்ள புல்வெளியில் வெங்கிட்டு ஆறு வயதான உழக்குப் பையனைத் தன்னைவிடப் பெரியவர்களுக்குக் 'காப்டனா'ய், இருந்து அடுத்த வீட்டுப் பையனின் தலைமைக் கோஷ்டியுடன் கிரிக்கெட் விளையாடிய வைபவங்கள், அப்பா வெளியூரிலிருந்த போது சென்னையில் ஒரு முறை குண்டு வீச்சு நடந்து எல்லோருமாகத் தோட்டத்திலிருந்த 'ட்ரெஞ்ச்'க்குள் பதுங்கியது.—இப்படிக் காலக் கோவை இன்றி நினைவுகள் முன்னும் பின்னுமாய்ச் சௌரியின் மனத்தில் மண்டி வந்து இதயத்தை அழுத்தின.

சாமான்களற்ற காலி அறையில் வெறும் தரையில் அவன் துவண்டு போய் உட்கார்ந்தான்.

இவை யெல்லாவற்றையும் விடப் பெரிய, புனிதமான, அழிவற்ற, அன்பு நிறைந்த, இன்றும் கண்ணீரைக் கிளறுகிற நினைவு...

அம்மாவுடையது தான். சந்தேகமென்ன?

அம்மாவைப் பற்றி நினைத்த போது கண்ணீரும் புன்னகையும் போட்டியிட, அவன் புருவங்களைச் சுருக்கி நெஞ்சோடு ஐக்கியமானான்.

அவள் இப்போது இந்த உலகத்தில் இல்லை. இந்த வீட்டில்தான் அவள் வாழ்வு முடிந்தது. இதன் பரப்பெங்கும் அவளின் நினைவு மலர்கள் பூத்திருந்தன. புது வீட்டை அம்மாவோடு இணைத்துப் பார்க்க முடியவில்லை. ஏனென்றால் அந்த வீடு அம்மாவுக்குத் தெரியாது.

சென்ற நவம்பர் மாதத்தோடு அவள் இறந்து ஆறு வருஷங்கள் கடந்து விட்டன. ஆயினும் இன்னும் அவள் போய் விட்டதாக நினைக்க முடியவில்லை. இந்த வீட்டின் ஒவ்வொரு மூலையிலும் அவளது சஞ்சரிப்பால் நேர்ந்த தொடர்பு இன்னும் அழியவில்லை. உற்றுக் கேட்டால் அவள் குரல் காதில் விழுவது போன்ற பிரமை இன்னும் நீங்கவில்லை.

இந்த மாதிரி அந்தப் புது வீட்டில் இருக்க முடியாதே. பின்னே அதுதானே வேற்றிடம்? இதுவல்லவோ சொந்த வீடு?

சௌரி எழுந்து காலி அறைகள் ஒவ்வொன்றாய்ப் பார்த்துத் தயங்கித் தயங்கி நின்றான். இது அம்மாவின் பூஜை அறையாய் இருந்தது. இந்த மூலையில் ஒரு மேடை மீது எல்லாத் தெய்வங்களின் படங்களும் மாட்டப் பட்டிருக்கும். ஈசுவரன் என்றும் விஷ்ணு என்றும் புத்தர் என்றும் அவளுக்குப் பேதம் கிடையாது. மேடையெங்கும் அரிசி மாக்கோலம். இரு புறங்களிலும் நீண்ட பாவை விளக்குகள். வத்தியும் மலரும் சாம்பிராணியும் கர்ப்பூரமுமாய் அந்த அறையின் காற்றே நறுமணத்துக்கு ஒரு பீடமாய் விளங்கும். மேலே செப்பில் வார்த்த தோரண ஆரம் தொங்கும். எதிரே அவள் உட்கார்ந்து தோத்திரங்கள் படிப்பாள். முகத்தில் என்ன ஜ்வலிப்பு, என்ன புன்னகை, என்ன ஒளி! பல ஆண்டுகளாக விடாமல் படித்து மனப் பாடமான தோத்திரங்கள் தாம் எல்லாம். ஆயினும், புத்தகத்தைப் பாராமல் சொல்ல மாட்டாள். அவ்வளவு மரியாதை.

'விக்'கம்!



''போயும் போயும் இந்த ஆனைக் கதாநாயகன் ரோலுக்கு புக் பண்ணியிருக்கேங்களே. ஆள் ரொம்ப 'வீக்' ஆச்சே!''

''பின்னே என்ன பண்ணறது சார்! ஏற்கெனவே ஸ்ட்ராங்கா இருக்கிறவரைப் பிடிச்சா படம் முடியறதுக்குள்ளே இன்னும் பருத்துப் போயிடுவார்!''

அம்மாவைப் பற்றிய நினைவுகளிலேயே மிக அழகும் அமைதியும் நிறைவும் வாய்ந்தது இந்த நினைவு தான்.

சூனியப் பார்வையை நீட்டித் தடவியபடி உணர்வின்றியே மறுபடியும் மாடிப்படிகளில் ஏறினான் அவன்.

படுக்கும் அறையிலிருந்த பெரிய ஹாலை யொட்டி இரண்டு அறைகள் அவற்றில் வராந்தாப் பக்கமாயிருந்த இரண்டாம் அறையை அடைந்தான்.

அறை காலியாயிருந்ததாகவே தோன்றவில்லை. அம்மாவின் இன்ப மயமான முகம் அறை முழுதும் வியாபித்திருந்தது.

அது முன்பு அம்மாவின் அறை. அங்குதான் அவள் எப்போதும் புத்தக பீரோவின் அருகில் சாய்வு நாற்காலியில் அமர்ந்து ஏதேதோ நூல்களைப் புரட்டிக் கொண்டிருப்பாள். அவளுக்குப் புத்தகங்களென்றால் உயிர். அதிலும் கலைச் சித்திரங்கள் அடங்கியதாயிருந்து விட்டால் பசி தாகம் தெரியாது. அவளுக்கு அப்படி ஒரு கலை நெஞ்சம். மகிழ்ச்சி பொங்க அங்கு கலையில் திளைத்து அமர்ந்திருப்பாள்.

அம்மா சந்தோஷத்தில் குதித்துக் கொண்டு ஒரு பெரும் செய்தியை முதலில் அவனிடம் சொன்னது கூட அந்த அறையில்தான். இன்று போல் நினைவு பசுமையாய் இருக்கிறது. கையில் ஒரு பிரித்த கடிதம். அவள் முகமெல்லாம் மகிழ்ச்சி வெள்ளமிட்டது.

கோமளத்திடமிருந்து கடிதம் வந்திருந்தது. அவள் தாயாகப் போகிறாளாம். அதாவது அம்மா பாட்டியாகப் போகிறாள். அம்மாவின் துள்ளலையும் பெருமையையும் பார்த்தால் உலகத்தில் யாருமே அதற்கு முன்பு பாட்டியானதில்லை என்று தோன்றும். தாம் இன்னும் தாத்தாவாக வில்லையென்று அப்பா திருப்தியுடன் இருந்த போதெல்லாம் அம்மாவுக்கு மட்டும் வெகு காலமாய் வருத்தம். அவளை 'உடனொத்தவர்'கள் எல்லாம் பாட்டிகளாய் விட்டனராம். அவள் மட்டும்தான் இன்னும் ஆகவில்லையாம்.

ராம்தீர்த் பிரம்மி ஆயில்

(ஸ்பெஷல் நெ. 1)   (ரிஜிஸ்டர்டு)

கூந்தல் உதிர்வதையும், பொடுகையும் தடுத்து கேசத்திற்கு கருநிறத்தையும் பளபளப்பையும் அளிக்கும் ஓர் ஒப்பற்ற கூந்தல் தைலம். பல உயர்ந்த மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்டது. மூளைக்கு குளிர்ச்சி அளித்து, ஞாபகசக்தியை அதிகரித்து, கண் எரிச்சலையும் அடிக்கடி ஏற்படும் தலைவலியையும் போக்கி நிம்மதியான நித்திரையை அளிக்கிறது.

யோகாசனப் படம்


எங்கள் யோகாசனப் படத்தில் காட்டியுள்ளவாறு ஆசனங்களை முறைப்படி செய்து வருதால் நீங்கள் உடல் வலிவு பெற்று ஆரோக்யமாக வாழ்வீர்கள்.

விலை ரூ. 3/- (தபால் செலவு உள்பட)

SHRI RAMTIRTH YOGASHRAM

DADAR - BOMBAY-14

மதராஸ் டிப்போ   25, நைனியப்ப நாயக்கன் தெரு   மதராஸ்-3



தொழில் முன்னேற்றமே தேசிய வளம்

எங்களது நிறுவனத்தில் பிக்செட் டிபாசிட்டுகளில் மூலதனம் செய்து நிறையச் சம்பாதியுங்கள்.

இத்தகைய டெபாசிட்டுகளுக்கும் அதற்கான வட்டிக்கும் நிபந்தனை எதுவுமின்றித் தமிழக அரசு உறுதி அளிக்கிறது.

எங்கள் பிக்சட் டிபாஸிட்டுகளின் பேரில் கீழ்க்கண்டவாறு வட்டிகள் அளிக்கிறோம்

1	வருடமும் அதற்கு மேலும் வருடம் 1க்கு	4¼ %
2	வருடமும் அதற்கு மேலும் வருடம் 1க்கு	4½ %
3	வருடமும் அதற்கு மேலும் வருடம் 1க்கு	4¾ %
4	வருடமும் அதற்கு மேலும் வருடம் 1க்கு	5 %
5	வருடத்திலிருந்து 20 வருடம் வரை வருடம் 1க்கு	5¼ %

மற்ற விவரங்களுக்கு எழுதவும்:   எஸ். ராஜரத்தினம், காரியதரிசி



தி மதராஸ் இண்டஸ்டிரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷன் லிமிடெட்

38, ஒயிட்ஸ் ரோடு, ராயப்பேட்டை, சென்னை-14

MIIC-4-9A

நேர்த்தியான துணிகளுக்கு நேர்த்தியான TRAYONS நூல்களே சிறந்தவை



"டிரெயான்ஸ்" ரேயான் நூல்களில் நெய்த ஆடைகள் எல்லோராலும் புகழப்படுகிறது

இந்தியாவில் முதல் முதலாக சிறந்த ரசாயன முறையில் தயாரிக்கப்பட்ட உன்னத நூல் "டிரெயான்ஸ்" ரேயான் நூல்கள். விலை மலிவு-நீண்ட கால உழைப்பு - பகட்டான உடைகளுக்கு ஏற்றது.

"டிரெயான்ஸ்" ரேயான் நூல்கள் 100, 120, 150, 300 டினையர்களில் தயாரிக்கப்படுகின்றன.

ஸ்டாக்கிஸ்டுகள் :

ரேயான் டிரேடர்ஸ் பிரைவேட் லிமிடெட்

61, செம்புதாஸ் தெரு, சென்னை-1

போன் : 21641 தந்தி : "CELYARN"

கிளைகள் :

போன் : 253, தந்தி: "CELYARN" 68/416, மெயின் ரோடு, செவ்வாய்பேட்டை, சேலம்.
போன் : 2598, தந்தி: "CELYARN" 114/A, தெற்குமாசி வீதி, மதுரை.
போன் : 3441, தந்தி : "RAYONS" யுனைடெட் இந்தியா பில்டிங், அவனாசி ரோடு, கோவை.

RT-30-5A

இந்தக் குறை நீங்கப் போகிறது என்ற செய்தியைக் கொண்டு வந்த அந்தக் கடிதம் வெறும் காகிதமா? ஏதோ இன்ப தேவதையின் இறக்கை போல்தான் அது அவன் கையில் அசைந்தது. அம்மாவின் அந்தக் கோலம் அவனுக்கு என்றும் மறக்க முடியாது. அரக்குக் கொட்டடிப் புடவை உடுத்திருந்தாள் அன்று. மூக்குக் கண்ணாடி அந்த மகிழ்வுப் பரபரப்பில் கண்களை விட்டு இறங்கி ஒரு பக்கம் கீழே தொங்கிக் கொண்டிருந்தது. கிளர்ச்சி மிகுதியில் சாய்வு நாற்காலியிலிருந்து எழுந்து நின்று கொண்டிருந்தாள். மூச்சு இரைக்கப் புன்னகையில் மலர்ந்த இன்பமே இன்னுருவாய் நின்றாள் அவள்.

அது முதல் அந்த அறையே அவனைப் பொறுத்த வரையில் மகிழ்ச்சியின் இருப்பிடமாய் விளங்கியது.

இன்னும் எத்தனையோ எண்ணங்கள்! எத்தனை எத்தனை நினைவுகள்! இன்றும் அந்த வீட்டில் அவள் நடமாடிக் கொண்டிருப்பதாய்த் தோன்றுகிறது. அழிவற்ற ஜோதி மணிகளாய் அவள் ஏற்றிவைத்த சாயல்கள் ஒளிர்கின்றன. இந்த வீட்டில் அவள் இருக்கிறாள். இதுதான் அவள் சொந்த வீடு.

''போய் வருகிறேன், அருமை இருகமே!''

நீரினால் பார்வை மங்கியது.

''போய் வருகிறேன், அம்மா!''

சிலா ரூபர் !



''உங்கள் பொதுநல சேவையைப் பாராட்டி உங்களுக்குச் சிலை வைக்க முடிவு செய்திருக்கோம். இதுவரை ஐயாயிரம் ரூபாய் வசூலாகி யிருக்கு!''

''அப்படியா, ரொம்ப சந்தோஷம்! அந்தப் பணத்தைக் கொடுங்கள். நீங்கள் காட்டும் இடத்தில் நானே சிலைமாதிரி போய் நின்று விடுகிறேன். இப்போ எனக்குக் கொஞ்சம் பண நெருக்கடி!''

சட்டென்று கையால் வாயை அழுந்தப் பொத்திக் கொண்டான் சௌரி. நினைவுகள் தேங்கியிருந்த அம் மனை அவன் குரலுக்குப் பதிலுரைக்கிறதா? இருபது வருஷ வாழ்வை அங்கு பதித்து விட்டு விலகும் போது ஏதோ ஒன்று முடிவடையத்தான் செய்கிறது. இனி வேறு விதமான ஈடுபாடுகள் புது இடத்தில் எத்தனை வந்தாலும் இன்று இங்கே ஒரு சொந்தம் பிரிந்துதான் போகிறது.

''போய் வருகிறேன், போய் வருகிறேன்!''

ஒரு முறை ஒவ்வோர் அறையாகச் சுற்றிச் சுவர்களைத் தொட்டுப் பார்த்த பின் அவன் கீழே இறங்கினான்.

சாமான்களெல்லாம் போயாகி விட்டது.

''அப்போ நான் வரட்டுமா ஸார்?''

வீட்டுக்காரர் அவனருகில் வந்து அவன் கைகளைப் பற்றிக் கொண்டார். ''போய் வாருங்கள். என்னை மறந்து விடக் கூடாது. உங்கள் குடும்பத்தோடு இருபது வருஷப் பழக்கம் எனக்கு. இங்கே முதலில் வந்தபோது நீங்கள் சிறு பிள்ளை. உங்கள் அப்பாவும் நானும் ரொம்பச் சிநேகம். நாங்கள் வீட்டுக்காரர் – குடியிருப்பவர் மாதிரியே இல்லை. உங்கள் அம்மா இருந்தாளே, மகராஜி அவள். மகாலட்சுமி....''

''ஆமாம் ... இங்கே நாங்கள் ரொம்ப சந்தோஷமாய் இருந்தோம். போவது பெயருக்குத்தான் சொந்த வீடு. இது அலாதி.''

''எனக்கும் இது மாதிரியாக இன்னொரு நல்ல குடும்பமாய்க் கிடைக்க வேண்டும், குடிவைக்க.''

சௌரி வீட்டை ஒரு தரம் ஏக்கத்துடன் பார்த்தான்.

''....சரி. நான் வருகிறேன்.''

''அப்படியே.''

வருஷங்களைக் கால் தூசியோடு உதறிவிட்டுத் திரும்பப் பார்க்காமல் நடக்கலானான் சௌரி. உள்ளே பாசம் குமைந்தது. வருஷங்களைத் தள்ளினாலும் நினைவுகளைத் தள்ள முடியுமா? அவன் ஒவ்வோர் அடி முன்னே வைத்துச் செல்லும் போதும் சொந்தமெல்லாம் பின்னே விலகிப்போகிறது. நெஞ்சில் நஷ்ட உணர்வின் துன்பம் தாங்கவில்லை.

''என்ன ஸார், சௌக்கியமா?''

யார் இந்த மனிதர்? புதிதாகத் தோன்றுகிறதே!

''என் பெயர் அருணாசலம்.''

பெயரும் புதிதாகவே இருந்தது. முதியவர். கைத்தடியோடு நின்றுகொண்டிருந்தார்.

''யார்? தெரியவில்லையே?''

''தெரிந்திருக்காது. நான் தற்செயலாய் நாலு நாட்களாய் இந்த ஊருக்கு வந்திருக்கிறேன். நான் தங்கியிருக்கும் வீடு அடுத்த தெருவில்தான்.''

''ஓஹோ.... நான் போய் வரட்டுமா? கொஞ்சம்.....''

''நிறையவே இருக்கும் வேலை. வீடு மாற்றுகிறீர்களல்லவா?''

''உங்களுக்கு எப்படித் தெரிந்தது?''

''இந்தப் பக்கமாய்ச் செல்லும் போதெல்லாம் சாமான்கள் போவதைப் பார்த்துக் கொண்டிருக்கிறேனே? அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் சொன்னார்கள். இருபது வருஷங்களாக இருந்தீர்களாமே இந்த வீட்டில்?''

''ஆமாம்.'' சௌரிக்கு எரிச்சலாயிருந்தது. பவித்திர உயிர்ப் பொருளான இந்த வீட்டைப் பற்றி ஓர் அன்னியருடன் பேசுவதே அவனுக்குப் பாவமாய்த்தான் தோன்றியது. ''நான் வருகிறேன்....''

''ஆகா, போய் வாருங்கள். எனக்கு இந்த வீடே அடியோடு பிடிக்கவில்லை.''

நடக்க ஆரம்பித்த சௌரி அப்படியே நின்று விட்டான். அந்த மனிதரை அறைய வேண்டும் போல் இருந்தது. எத்தனை துணிச்சல் அவருக்கு.

''பிடிக்கவா இல்லை? என்ன தெரியும் உங்களுக்கு இந்த வீட்டைப் பற்றி.'' நினைவுகளையெல்லாம் நட்சத்திரங்களாய்க் கொண்டு பொலியும் இந்த அரும் பொருளை நாவில் வைத்துப் பேச அன்னியனுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது?

''தெரியாமல் என்ன! நீங்களெல்லோரும் வருவதற்கு முன்னால் இங்கே குடியிருந்தவன் நான்தான்.'

சௌரி சட்டென்று அவரைப் பார்த்தான். அந்த வீட்டில் இருவரும் அன்பை வெளிவிட்டு உன்மத்த நிலையில் ஒரு விநாடி ஒன்றாய்க் கண்ணீர் சிந்திப் பிரிய அவன் உள்ளம் இடீரென விழைந்தது.

''நீங்கள் குடியிருந்தீர்களா? பின்னே பிடிக்காமலென்ன? அபூர்வமான வீடு இது. அருமையான வீடு....''

''உங்களுக்கு எப்படியோ.... எனக்குப் பிடிக்கவில்லை.''

சௌரி ஒன்றும் புரியாமல் நின்றான்.

''பிடிக்கவில்லையா! ஏன்?''

''இங்கே வந்த பின் எனக்கு எதுவுமே நல்லபடியாய் ஆகவில்லை. முக்கியமாக மாடியில் ஓர் அறை இருக்கிறதே...இப்போது இருக்கிறதோ . மாறி விட்டதோ!''

''மாடியில் இரண்டு அறைகள் உண்டு. ஹாலை ஒட்டினாற் போல.''

''ஆமாம்! அதேதான். அப்படியானால் ஒன்றும் மாறவில்லை. அதில் அந்த இரண்டாம் அறை இருக்கிறதே....''

''ஆமாம், ஆமாம்....'' சௌரியின் உள்ளம் படபடத்தது. அம்மாவின் அறை...

''வராந்தாப் பக்கமாக.''

''ஆமாம். ஆமாம்...'' அழகின் அறை, அம்மாவின் அறை. இன்பத்துக்கு இலக்கணம் போன்ற அறை......

''அந்த அறையை நான் எப்போதும் துன்பத்துக்கு அடையாளமாய்த் தான் எண்ணி வந்திருக்கிறேன்.''

சௌரி பேசவில்லை. கண்கள்தாம் விரிந்தன. கிழவர் ஏதோ வேறு உலகிலிருந்து ஒரு பைத்தியம் போல் பிதற்றுவதாக அவனுக்குத் தோன்றியது.

''ஆம். துன்பத்துக்கு அடையாளம்'' என்றார் முதியவர் மறுபடியும் யோசனையோடு.

''.... எ .... என்ன?...: துன்பத்துக்கா?'' பேச்சொலிகள் உதட்டின் வழியே சிந்தின.

''ஆமாம். என் குழந்தை ஒன்று அங்கே இறந்து போயிற்று. பிறகு அங்கு விருந்தாளியாய் வந்து தங்கிய ஒரு 'நண்பன்' வியாபாரத்தில் என்னை மோசம் செய்தான். நானே ஒரு நோயாளியாய் அந்த அறையில் பல மாதங்கள் படுத்திருந்தேன். இரவும் பகலும் ஓயாத இருமல். மார்பே வெளியில் விழுந்து சிதறி விடும்போல் இருக்கும். அங்கிருந்து வேறு அறைக்குப் போனபின்தான் குணமாயிற்று. பிறகு ஒரு வழியாய் வீட்டையே காலி செய்து விட்டு வெளி வந்ததும் தான் எனக்கு நிம்மதியாயிற்று. ஆமாம், அந்த அறை ஒரு துன்ப அடையாளம்தான்.''

யோசனையில் ஆழ்ந்திருந்த கிழவரின் முகத்தில் சௌரியின் கண்கள் வெகு நேரம் லயித்தன. அவன் நெஞ்சிலிருந்து பெருமூச்சுத் தெறித்தது. உள்ளத்தில் ஏதோ கழிப்பு. அதைத் தாண்டிய பின் ஒரு விசித்திர அமைதி.

''பாவம் ஸார் நீங்கள்'' என்றான்.

''போகட்டும் விடுங்கள். இப்போது நன்றாய்த்தான் இருக்கிறேன்'' என்று கூறிக் கிழவர் சிரித்தார்.

''அப்போ நான் விடை பெற்றுக் கொள்ளட்டுமா? நேரமாகிறது. அந்த வீட்டில், அப்பா நான் இன்னும் வந்து சேரவில்லையே என்று யோசிப்பார்.''

''அடாடா தாமதப்படுத்தி விட்டேனா உங்களை? மன்னிக்க வேண்டும் ஸார். போய் வாருங்கள்.''

இருவரும் கைகுலுக்கினார்கள். பெரியவர் தம் வழியே சென்றார்.

சௌரி மறுபடியும் ஒருமுறை தான்விட்டுச் செல்லும் மனையைத் திரும்பிப் பார்த்தான். அத்தனை நேரம் பாரத்தால் குமுறிக் கொண்டிருந்த தன் உதடுகளில் இப்போது ஒரு புன்னகை இருப்பதை உணர்ந்த போது அவனுக்கே ஆச்சரியமாயிருந்தது.

அவன் மேலே நடக்கலானான்.

அவனுக்கு இன்ப வடிவாய் நின்ற வீடு வேறொருவருக்குத் துன்ப அடையாளம். இவை இரண்டினுள் அந்த வீட்டுக்கே உரிய உணர்ச்சி எது? இரண்டும்தான். அல்லது இரண்டும் இல்லை

சௌரி சிரித்துக் கொண்டான். என்ன பைத்தியக்காரத்தனம்!

அப்பாவையும் அம்மாவையும் வாழ்க்கை சிறிது காலம் அந்த வீட்டிலிருந்து எதிரொலித்தது. அவ்வளவுதான். அம்மா இன்னும் வாழ்கிறாளே, நினைவுப் பெட்டகத்தில், அந்த நினைவுகள் இருப்பது எந்த வீட்டிலும் அல்ல. அவன் இதயத்தில் தான். அந்த இதயம் அவனோடு வரும்வரை எத்தனைவீடுகள் மாற்றினாலென்ன? அம்மா கூடவே வருகிறாள். வீட்டில் எதுவும் இல்லை. ஏனென்றால் அதற்கே உரிய உணர்ச்சி எதுவுமில்லை, உள்ளம் கற்பிப்பதைத் தவிர. அவனுக்கு ஏதும் நஷ்டம் இல்லை. அன்பு நினைவுகளில் அம்மா என்றும் தோத்திரம் படிக்கிறாள். கடிதத்துடன் களிக்கிறாள். அவளை அவன் அறிந்த ஒவ்வொரு கணமும் அமுதமாகி விட்டது. அந்த அமுதம் சுரக்கும் நெஞ்சம் வாழ்வின் மகத்தான லாபம்தான். நெஞ்சம் தான் மனிதனுக்குச் சொந்தம். அந்தச் சொந்தத்தை மீறி வேறு எதுவுமே இல்லை.

வெறும் வீடு பின்தங்கியது. நினைவுச் செல்வத்துடன் அவன் முன்னேறிச் சென்றான்.



வட்டமேஜை

சிந்தனை செய்ய வேண்டும்

நம் நாட்டு மக்கள் அனைவரும் சிந்தனை செய்ய வேண்டிய சில முக்கிய விஷயங்கள் உள்ளன. முதலாவதாக நாட்டிலுள்ள முக்கியமான அரசியல் கட்சிகளின் கொள்கைகளையும், தேர்தல் அறிக்கைகளையும் நன்கு கவனிக்க வேண்டும்.

தேர்தல் காலங்களில் அவற்றை நிதானமாகப் படிக்கவோ, அவை பற்றி ஆழ்ந்து சிந்திக்கவோ, அவற்றின் தராதரத்தை உணரவோ பெரும்பாலோர்க்குப் போதிய அவகாசம் இருக்க வில்லை. பல்வேறு கட்சிகளின் தேர்தல் பிரசாரத்தைக் கேட்டோம். தேன் ஒழுகும் போலிப் பேச்சுக்களில் மயங்கி உள்ளத்தைக் குழப்பிக் கொண்டோம். இதனால் வாக்காளர்களாகிய நமக்குத் தேர்தல் சமயத்தில் ஒரு முடிவுக்கு வருவது சிரமமாக ஆகிவிட்டது.

ஆதலால் இப்போதாவது எவ்வித அவசரமும் இன்றி ஒவ்வொரு முக்கிய கட்சியின் தேர்தல் அறிக்கைகளையும், கொள்கைகளையும் நன்றாகப் படித்துப் பார்க்க வேண்டும். நம் நாட்டின் நலனுக்கும் தற்கால நிலைமைக்கும், வருங்கால சுபிட்ச வாழ்வுக்கும் எந்தக் கட்சியின் கொள்கைகள் ஏற்றவை என்பதை நன்கு சிந்திக்க வேண்டும். எது சிறந்தது என்று உள்ளம் தீர்மானிக்கிறதோ, அக்கட்சியையே வரும் தேர்தலில் ஆதரிப்பது என இப்போதே உறுதி கொள்ள வேண்டும்.

காங்கிரஸ் கட்சி கொள்கையின் முக்கிய அம்சமாகக் கூறப்படும் 'சோஷலிச சமுதாயம்' என்பது நமது நாட்டின் நிலைமைக்கு ஒவ்வாதது என்று பல அறிவாளிகள் கூறுகின்றனர். கற்பனை அளவில் உள்ள அதன் பயன்கள் கைகூடி வரும் என்பதில் போதிய நம்பிக்கை மக்களுக்கு ஏற்படவில்லை. காங்கிரஸினால் திட்டப்பட்ட பிரும்மாண்டமான திட்டங்களோ, நாட்டின் தற்கால நலனுக்கும், வருங்கால சுபிட்ச வாழ்வுக்கும் ஏற்றவை அல்ல என்று பல அரசியல் நிபுணர்களே கருதுகிறார்கள். கூட்டுறவு விவசாயம் போன்ற நடவடிக்கைகள் உழவர்களின் உழைப்பையும், ஊக்கத்தையும் குறைத்து உற்பத்தியைக் கெடுத்துவிடும் என்றும் பலர் கருதுகின்றனர்.


தற்கால ஆட்சியில் யதேச்சாதிகாரம் தாண்டவமாடுகிறது. மக்கள் சுதந்திரம் பெருமளவு பாதிக்கப்படுகிறது. யாரும் தங்கள் பேச்சைத் தட்டிப் பேசக் கூடாது என்ற எண்ணம் தலைவர்களிடையே ஓங்கியுள்ளது. எதிர்க் கட்சிகளின் கருத்துக்கள் புறக்கணிக்கப்படுகின்றன. ஒரிசா சம்பவம் இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். அரசாங்கத்தின் தலையீடு எல்லாத் துறைகளிலும் அளவுகடந்து பரவியுள்ளது. திட்டங்களின் பெயரால் கோடிக்கணக்கான ரூபாய்கள் விரயமாகின்றன. மக்களின் நில உடைமை, சொத்துரிமை போன்றவைகள் சட்டம் என்ற பெயரால் பறிமுதல் செய்யப்படுகின்றன. 'கன்ட்ரோல்', 'லைசென்ஸ்' போன்ற நிர்ப்பந்தங்களால், ஊழல்களும் லஞ்சமும் அதிகம் நிலவுகின்றன. காந்தியக் கொள்கைகள் காற்றில் பறக்க விடப்படுகின்றன. சத்தியம், அஹிம்சை, தூய்மை முதலிய மனிதப் பண்புகள் அரசியலில் மங்கி வருகின்றன. அறமும், ஆன்மீகமும் அவமதிக்கப்படுகின்றன. விலைவாசிகளின் உயர்வால் ஏழைகளும், நடுத்தர மக்களும் மிகவும் பாதிக்கப் படுகின்றனர். பல வகையிலும் உள்ள வரிச் சுமை மக்களை நசுக்குகிறது. அரசியலாரின் தலையீட்டினால் கல்வி போன்ற துறைகளில் ஸ்திரமின்மை நிலவி வருவதால் கல்வித் தரம் குறைந்து வருகிறது.

ஆதலால் இதே போக்கில் ஆட்சி நடத்திச் செல்வதை மேலும் அனுமதிப்பது நாட்டுக்கு நல்லதுதானா என்பதை மக்கள் நன்கு ஆலோசிக்க வேண்டும். இதைக் கட்டுப்படுத்தாவிட்டால் நாட்டின் நலம் குன்றி விடும் என்பதை உணர வேண்டும். ஆகவே அரசாங்கத்தின் இப்போக்கைக் கட்டுப்படுத்தி நேர் வழியில் செலுத்துவதற்கு அகில இந்திய ரீதியில் ஓர் எதிர்க் கட்சி வேண்டுமல்லவா? அவ்விதத் தகுதியை எந்தக் கட்சி தற்சமயம் பூர்ணமாகப் பெற்று விளங்குகிறது என்பதைச் சிந்திக்க வேண்டும்.

இதே சமயத்தில் சுதந்திரக் கட்சியின் அடிப்படைக் கொள்கைகளையும், தேர்தல் அறிக்கையையும் பொதுமக்கள் நன்கு படித்து அவற்றின் தேசியத்தன்மையை ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

ஆட்சியின் எல்லாத் துறைகளையும் பற்றிய தங்கள் கட்சியின் கொள்கைகளைச் சுதந்திரக் கட்சியின் தேர்தல் அறிக்கை தெளிவாக விளக்குகிறது. மக்களுக்கு அதிகம் சுதந்திரம் இருப்பதைச் சுதந்திரக் கட்சி விரும்புகிறது. காந்தீயத்தின் அடிப்படையான தர்மகர்த்தா ஆட்சி முறையை அது முழு மனத்துடன் ஆதரிக்கிறது. அரசாங்க மொத்த வருவாயில் மிகக் குறைந்த அளவே உள்ள நில வரியை நீக்கி விவசாயிகளின் வரிச்சுமையை அது குறைக்க உறுதி கூறுகிறது. மக்களின் நில உடைமை, சொத்துரிமை முதலியவற்றுக்குத் தக்க மதிப்பும், பாதுகாப்பும் அளித்து உழவுத் தொழிலுக்கு ஊக்கமளிக்கிறது. 'தானே நிலத்தின் தலைவன்' என்ற நிலையிலிருந்து 'தான் ஒரு கூலியாளே' என்று கருதுமளவுக்கு விவசாயிகளின் மதிப்பைக் குறைப்பதால் உழவுத் தொழிலில் கூட்டுறவு முறை நாட்டின் உணவு உற்பத்திப் பெருக்கத்தைப் பெருமளவுக்குப் பாதித்து விடுமாதலால் அம்முறை உகந்ததல்ல என்று அந்தக் கட்சி வாதாடுகிறது. அரசியல் சட்டங்களை மீறுத முன்னேற்றத் திட்டங்களையே சுதந்திரக்கட்சி விரும்புகிறது. மக்களின் மதம், பண்பு,

பாடாதே. நில்!



ஒரு பின்னணிப் பாடகி தான் சினிமாவில் பாடிய பாட்டைத் தன் குழந்தைக்குத் தாலாட்டுப் பாடித் தூங்கப் பண்ணினாள்!

குழந்தை கேட்டது:

"இந்தப் பாட்டைக் கேட்டு அந்த சினிமா குழந்தை தூங்கியதாம்மா?"

"இல்லேடா ராஜா! மயக்க மருந்து கொடுத்துத்தான் தூங்கப் பண்ணினார்கள்!"

"அதுதானே பார்த்தேன்!"

அறம் போன்றவைகளுக்கு அது பூர்ண மதிப்பு அளிக்கிறது. இப்படி ஒவ்வொன்றையும் ஆராய்ந்தால் இப்போதுள்ள ஆளும் கட்சியின் தவறான கொள்கைகளுக்கெல்லாம் நேரான ஒரு மாற்றுக் கொள்கையுடைய சுதந்திரக் கட்சிதான் ஒரு நிலையான அரசாங்கத்தை அமைக்க முடியும் என்ற தீர்மானத்துக்குத்தான் அனைவரும் வருவோம்.

நிற்க. அரும்பாடுபட்டு அமைக்கப்பட்ட நமது அரசியல் சட்டத்தின் மதிப்புக் குன்றாமல் அதைப் பாதுகாத்து அதன்படி நடப்பது அரசாங்கத்தின் கடமையல்லவா? தற்கால அரசியல் போக்கு அதற்குப் பல வகையில் முரண்படுவதைக் காண்கிறோம். ஆகவே, 'அரசியல் சட்டப் பாதுகாப்பு முன்னணி ஒன்று ஏற்பட வேண்டும்' என்ற தலைவர் ராஜாஜியின் சிறந்த யோசனையை மக்கள் அனைவரும் பரிசீலனை செய்ய வேண்டும்.

காங்கிரஸின் நீண்ட ஆட்சிப் போக்கில் அதிருப்தியுள்ள எல்லாக் கட்சிகளையும் இணைத்து நாட்டின் நலனுக்குச் சேர்ந்து உழைக்கும்படி செய்யவல்ல ஒரு சூத்திரமாக அந்த யோசனை விளங்குகிறது.

ஆதலால் தற்சமயம் பொதுமக்கள் அனைவரும் சுதந்திரக் கட்சியின் கொள்கைகளையும், தேர்தல் அறிக்கையையும், அரசியல் சட்டப் பாதுகாப்பு முன்னணி ஆலோசனையையும் நிதானமாகப் பரிசீலிக்க வேண்டியது மிக மிக அவசியமாகும்.

கொடுமுடி
14–3–62 வி. ராமமூர்த்தி

வித்தியாசம் ஏனோ?

ரங்கூனில் உள்ள தூதரகத்தில் பெரும்பாலும் குமாஸ்தாக்கள், பியூன்கள் முதலானவர்களில் பர்மாவைச் சேர்ந்த இந்தியர்கள் தான் அதிகம்.

1950 வருடம் இந்திய சர்க்கார் ஊழியர்களை இந்தியாவிலிருந்து வந்தவர்கள் என்றும், உள்ளூர்க்காரர்கள் என்றும் இரண்டாகப் பிரித்து விட்டார்கள். இந்தியாவிலிருந்து வந்த பியூனுக்கு இங்கு கிடைக்கும் சம்பளம் ரூ. 350. பர்மாவைச் சேர்ந்த இந்தியனுக்கு இதே வேலைக்குச் சம்பளம் ரூ. 100தான். எந்தவிதமான அலவன்ஸும் கிடையாது.

எத்தனை வருஷங்கள் வேலை செய்தாலும் தாற்காலிகம்தான். உள்நாட்டுக் கிளார்க்குகளுக்கு சம்பளம் 150 ரூபாய்தான். இந்தியாவிலிருந்து வரும் கிளார்க்குகளுக்கு அடிப்படைச் சம்பளம் 150 ரூபாய்; அன்னிய நாட்டு அலவன்ஸ் 450 ரூபாயும் இதர வசதிகளும் கிடைக்கின்றன.

எங்களுடைய இந்தக் குறைகளைப் பல தடவை எடுத்துச் சொல்லியும் இந்திய சர்க்கார் புறக்கணித்து விட்டனர். இனியாவது இந்திய சர்க்கார் இவ்வித வேற்றுமைகளை ஒழிக்க முன்வருவார்கள் என்று நம்புகிறேன்.

ரங்கூன்
14-2-62 கோவிந்தசாமி

நந்தவனம்

நான் பல கதைகள் படித்திருக்கிறேன். அதில் காதலைப் பற்றியும் படித்திருக்கிறேன். அதை ஆசிரியர்கள் பலவிதமாகச் சொல்வார்கள். முக்கியமாக, 'உன் காதல் எனக்குத் தேவை', 'நான் உன்னைக் காதலிக்கிறேன்' என்பார்கள். ஆனால் ஆசிரியர் 'சோமு' அவர்கள் மார்ச் 17-ந் தேதி நந்தவனத்தில் வில்வநாதனிடம் செல்வி தன் காதலை வெளியிடும் இடத்தை இயல்பாகவும், மிக நன்றாகவும் அமைத்திருக்கிறார். அவர் நடையே ஒரு தனி அழகு.

அம்பிகாபுரம்
15-3-62 கே. கோதண்டராமன்

பெண்கள் உயர்நிலைப் பள்ளி தேவை

நெய்வேலி வளர்ந்து வரும் பெரிய நகரமாகும். அங்கு ஆயிரக்கணக்கான தொழிலாளர் குடும்பங்கள் வாழ்கின்றன. அங்கு ஒரே ஓர் உயர்நிலைப்பள்ளிதான் உள்ளது. 2893 பேர்கள் கல்வி பயில்கின்றனர். அதில் சற்றேறக்குறைய பாதிப் பேர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. பெண்களுக்குத் தனி உயர்நிலைப்பள்ளி ஏற்பட வேண்டும் என்று பெற்றோர்கள் விரும்புகின்றனர்.

ஆகவே அடுத்த கல்வி ஆண்டிலிருந்தே நெய்வேலியில் பெண்களுக்காக ஓர் உயர்நிலைப் பள்ளி ஏற்பட ஆவன செய்யுமாறு நெய்வேலி லிக்னைட் கார்ப்பொரேஷன் நிர்வாகிகளையும் சென்னை கல்வி இலாக்காவினரையும் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தாரமங்கலம்
17-3-62 ஆ. நடராஜன்

ஆனந்த மஞ்சரி

ரா.வீ.

கோவிந்தன் தனது சலவைக்கல் கடையில் உட்கார்ந்து ஏதோ பெயர்ப் பலகை ஒன்றைச் செதுக்கிக் கொண்டிருந்தான்.

அந்த ஊரிலேயே அவன் கடை அது போன்ற பெயர்ப் பலகைகள் செதுக்குவதற்குப் பெயர் போனது. சலவைக் கல்லால் ஆன நகாச வேலைகள் செய்வதில் கோவிந்தனுக்கு நிகர் கோவிந்தன் தான். வெகு தொலைவிலிருந்தெல்லாம் அவன் கடைக்குப் பலர் வருவார்கள்; வந்து ஆர்டர் கொடுத்துத் தமக்குத் தேவையானவற்றை யெல்லாம் செதுக்கிச் செல்வார்கள்.

அவன் அப்படி மும்முரமாக வேலையில் ஈடுபட்டிருந்த பொழுதுதான், ராவ்சாகேப் ராமாமிருதத்தின் கார் வந்து அவன் கடை வாசலில் நின்றது. டக்கென்று கதவைத் திறந்துகொண்டு இறங்கிய ராமாமிருதம் அதை அடித்துச் சாத்திக் கொண்டு அவன் கடைக்குள் வந்தார். வேலையிலேயே கருத்தைச் செலுத்தியிருந்த கோவிந்தன் அவர் வந்ததைக் கவனிக்கவில்லை. குனிந்த தலைநிமிராமல் காரியத்தில் கண்ணாயிருந்தான். ராவ்சாகேப் ராமாமிருதம் படியேறி வந்து அவனெதிரே நின்று கனைத்தார். அப்பொழுதுதான் அவன் தலைநிமிர்ந்து பார்த்தான். உடனே, ''என்ன எசமான், நீங்களே வந்திருக்கிறீர்களே! ஒரு வார்த்தை சொல்லியனுப்பியிருந்தால் நானே ஓடோடி வந்திருப்பேனே!'' என்று சொல்லிக் கொண்டே பவ்யமாக எழுந்து நின்றான்.

'' அதற்கென்ன ? நான் வரக் கூடாதா உன் கடைக்கு, கோவிந்தா ?'' என்று கேட்ட ராமாமிருதம், ''உன்னால் ஒரு காரியம் எனக்குச் சீக்கிரமாக ஆகவேண்டியிருக்கிறது!'' என்றார்.

''சொல்லுங்கள், எசமான்!'' என்றான் கோவிந்தன்.

'' 'கிருஷ்ண மந்திரம்' என்று சலவைக் கல்லில் நீ அழகாக உடனே செதுக்கித் தர வேண்டும்.''

''தருகிறேன், எசமான்! ஏதாவது புது வீடு கிது வீடு கட்டப் போறீங்களா எசமான்?'' என்று கேட்டான் கோவிந்தன்.

''இல்லையப்பா! எனக்கு என்ன, குழந்தையா, குட்டியா? புது வீடு கட்ட? இருக்கிற வீட்டையே ஆள யாரும் கிடையாது. அதனால் என் சொத்து சுதந்திரம் அனைத்தையும் ஆண்டவன் பெயருக்கே எழுதி வைத்து விட்டேன். மூச்சு இருக்கும்வரையில் நானும் அவளும் ஆண்டவன் பெயரைச் சொல்லிக் கொண்டு காலத்தை ஓட்டப் போகிறோம்! ஆண்டவன் பெயருக்கு எழுதி வைத்து விட்டதன் ஞாபகார்த்தமாகக் 'கிருஷ்ண மந்திரம்' என்ற பெயர்ப் பலகையை வாசலில் பதிக்கப் போகிறேன்!'' என்றார் ராவ்சாகேப்.

''ஆண்டவன் தான் உங்களுக்கு ஒன்றும் கொடுக்கவில்லை. ஆனாலும் அவருக்கே நீங்கள் வீடு வாசலைக் கொடுத்துவிடுவதும் ஒருவிதத்தில் நல்லதுதானுங்க!'' என்று கூறி உற்சாகத்துடன் கோவிந்தன் ராவ்சாகேப்பின் தீர்மானத்தை வரவேற்றான். ''எசமான்! இன்றைக்கு இருப்பாரை நாளைக்குக் காண்பதில்லை. அழியும் தன்மையுள்ள இவ்வுலகில் அழியாத் தன்மையுள்ள ஆண்டவனை நினைப்பதைக் காட்டிலும் பெரிய காரியம் எதுவும் கிடையாது. அவன் நாமமே இறுதிக் காலத்துக்குத் துணையிருந்து உதவும்'' என்று பெரிய வேதாந்தியாகவும் மாறிப் பேசினான்.

ராவ் சாகேப் விரும்பியபடியே சலவைக் கல்லில் 'கிருஷ்ண மந்திரம்' என்று வெகு அழகாகச் செதுக்கினான். அதுமட்டுமல்ல; அன்றைக்கே எடுத்துச் சென்று பங்களா வாசலில், அதைத் தன் கையாலேயே பதித்து விட்டுத் தன் வீட்டுக்குத் திரும்பினான்.

பங்களாவுக்குள் பிரதிஷ்டை செய்யப் பட்ட கண்ணன் திருவுருவம் இன்முகம் காட்டி மகிழ்ந்து மலர்ந்தது.


ஃ ஃ ஃ

ஆண்டவன் மகிமையை அறிந்தவர் யார்?

மூன்று ஆண்டுகள் ஓடின.

ராவ்சாகேப் திடுதிப்பென்று ஒருநாள் கோவிந்தன் கடைக்குச் சென்றார். அவரது டிரைவர், 'கிருஷ்ண மந்திரம்' என்று பொறிக் கப்பட்டிருந்த கல்லைத் தூக்கி வந்து கோவிந்தனுக்கெதிரே வைத்தான்.

இத்தனை நாட்களாகத் தன் கடைப்பக்கமே வராத ராவ்சாகேப் ராமாமிருதத்தைக் கண்டதும் கோவிந்தனுக்கு ஏக வியப்பாகிவிட்டது. அவரோடு அவர் டிரைவர் 'கிருஷ்ண மந்திரம்' என்னும் பெயர்ப் பலகையைப் பெயர்த்துக் கொண்டு வந்திருப்பதைக் கண்ட



தும் அவன் வியப்பு இன்னும் பன்மடங்கு அதிகரித்தது. அவனுக்குப் பேச நாஎழவில்லை. அவன் கேட்க நினைத்ததை அவனது வியப்புக் குறி தாண்டவமாடிய முகமே கேட்டுவிட்டது.

''கோவிந்தா! இந்தப் பலகையை நான் ஏன் பெயர்த்து எடுத்து வந்திருக்கிறேன் என்றுதானே யோசிக்கிறாய்? இது தேவையில்லை. இதே அளவுக்கு வேறு ஒரு பெயர்ப் பலகை தயார் செய்து கொடு!'' என்றார் ராவ்சாகேப்.

''என்ன பலகை எசமான்!'' என்று புரியாமல் கேட்டான் கோவிந்தன்.

மகிழ்ச்சி மிதப்பினால் தழுதழுத்த குரலில் பதில் சொன்னார் ராவ்சாகேப். ''பிள்ளைக் குழந்தை பிறந்திருக்கிறதப்பா, பிள்ளைக் குழந்தை! வயதான இந்தக் காலத்தில் ஆண்டவன் கண் திறந்து பார்த்திருக்கிறார். அவர் அருளால் என் குலத்தை விளங்க வைக்க எனக்கு ஒரு குல விளக்கு கிடைத்துள்ளது. நம்ம வீட்டு அம்மா இதற்கு என்ன பெயர் வைத்திருக்கிறார்கள், தெரியுமா? ஆனந்தன் என்று வைத்திருக்கிறார்கள்! பெயர் அழகாயில்லே? எங்கள் வாழ்விலே ஆனந்தம் பொழிய வந்துள்ள பாலகனின் பெயரையே வீட்டுக்கு வைக்க விருக்கிறோம். 'ஆனந்த பவனம்' என்று செதுக்கிக் கொடு. குடும்பத்துக்குச் செல்வம் ஒன்று பிறந்த பின், சொத்து முழுவதையும் ஆண்டவனுக்கு எழுதிவைப்பது நியாயமா? அப்படி எழுதி வைத்து விட்டால் அந்தக் குழந்தை பெரிதான பின் என்ன சொல்லும்? நீயே சொல்லு!'' என்றார் ராவ்சாகேப் ராமாமிருதம்.

''மெய்தானுங்க!'' — கோவிந்தன் தலையசைத்தான். ''குழந்தையின் வருங்காலத்தைப் பற்றித் தாங்கள் யோசிக்க வேண்டியது நியாயம்தான்!'' என்று ஆமோதித்த அவனுக்கு ஆண்டவனின் சித்தம் புரியாத பெரும் புதிராகவே இருந்தது!

''சரி, அப்பொழுது நான் வரட்டுமா? அடுத்த புதன் கிழமை ஒரு சிறு விருந்து வைத்திருக்கிறேன், பிள்ளைக் குழந்தை பிறந்த மகிழ்ச்சியைக் கொண்டாட. அன்று நீ கட்டாயம் வரவேண்டும். என்ன?'' என்றார் ராவ்சாகேப்.

கோவிந்தன் புதன் கிழமை மாலை ராவ்சாகேப்பின் பங்களாவுக்குச் சென்றான். விருந்து சாப்பிட்டான். அதே கையோடு 'ஆனந்த பவனம்' என்று செதுக்கிய கல்லையும் வாசலில் பதித்து வந்தான்.

ஆண்டவனின் சிலை புதிதாகப் பிறந்த குழந்தையை மகிழ்ச்சியுடன் ஆசீர்வதித்தது.

ஃ ஃ ஃ

இருபது ஆண்டுகள் எப்படித்தான் அவ்வளவு வேகமாக ஓடினவோ, ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்! அத்தனை காலமும் கோவிந்தனின் கடையையே எட்டிப் பாராத ராவ்சாகேப் ராமாமிருதம் மீண்டும் கோவிந்தனின் கடையை நாடி வந்தார். டிரைவர் 'ஆனந்த பவனம்' என்னும் பெயர்க் கல்லைக் கோவிந்தனுக்கு எதிரே கொண்டு வந்து வைத்தான். கோவிந்தனின் கிழடு தட்டிய முகத்திலே கேள்விக்குறி தோன்றியது.

''கோவிந்தா!''

குரலில் மகிழ்ச்சி கொப்புளிக்கக் கூப்பிட்டார் ராவ்சாகேப்.

''என்னங்க, எசமான்!''

''ஆனந்த பவனம்' என்னும் இந்தப் பெயர்ப் பலகையில் இன்னும் ஒரு சிறு மாறுதல் செய்ய வேண்டும்.''

''இதில் போய் மாறுதல் செய்வானேன்? எசமான் விரும்பினால் புதிதாகவே ஒன்று செதுக்கிவிடுவோமே!'' என்றான் கோவிந்தன்.

''அதைத்தான் நானும் சொல்ல வந்தேன். 'ஆனந்த மஞ்சரி' என்று மாற்றிச் செதுக்க வேண்டும். ஏன் தெரியுமா?'' என்று கேட்டார் ராவ்சாகேப்.

தன் ஒடிந்த மூக்குக் கண்ணாடியைச் சற்று உயரத் தூக்கிக் கோவிந்தன் வியப்போடு ராவ்சாகேப்பைப் பார்த்தான்.

''வரும் தைத் திங்கள் அன்று நம் ஆனந்தனுக்குக் கல்யாணம். நாங்கள் பெண்பார்த்து வந்திருக்கிறோம். பெண் நல்ல அழகு. சாட்சாத் லட்சுமியென்றால் லட்சுமிதான், போயேன். மஞ்சரி என்று பெயர் அவளுக்கு. நம் வாழ்க்கை இன்னும் எத்தனை நாளோ? மரத்தில் பழுத்த பழங்கள் நாம். எப்பொழுது விழுவோமோ? நம்மிடம் இருப்பதெல்லாம் அவர்களைச் சேர்ந்தது தானே? கல்யாணம் செய்து கொண்டு பெண்ணும் பிள்ளையும் கிருகப்பிரவேசத்துக்கு வருவதற்கு முன்னாலேயே நான் சொன்னபடி 'ஆனந்த மஞ்சரி' என்று செதுக்கிக் கல் பதித்து விடவேண்டும் என்பது என் ஆசை. மருமகள் வந்து பார்த்தால் மகிழ்வாள் அல்லவா? எப்படி என் யோசனை?'' என்றார் ராவ்சாகேப்.

ராவ்சாகேப்பின் இந்தப் புது யோசனையைக் கேட்டுக் கோவிந்தன் இலேசாக நகைத்தான். எத்தனைதான் மனிதன் கிழடு தட்டினாலும் இந்த ஆசை கிழடு தட்டுகிறதில்லையே! மனிதன் கிழடு தட்டத் தட்ட அது முறுக்கிக் கொள்ள அல்லவா செய்கிறது? கல் செதுக்கியே அவன் இளமை முதுமை



பெற்றுள்ளது. ஆனால் இதுபோன்ற நிகழ்ச்சி இதுவரையில் அவன் வாழ்க்கையில் ஏற்பட்டதில்லை. "நல்ல யோசனைதான்! இன்றுவரை இம்மாதிரி யாருக்குமே தோன்றியிராது!" என்று கூறிப் புகழ்ந்தான்.

ஃ ஃ ஃ

இதற்குப் பின் மூன்றே நாட்கள் தான் ஓடியிருக்கும்.

ராவ்சாகேப் வருத்தமே உருவாக, சோகமே சிலையாகக் கோவிந்தனின் கடைக்கு வந்தார். அவர் முகம் போயிருந்த போக்கைச்சொல்லி முடியாது. கண்களுக்குக் கீழே கருமை கோடிட்டிருந்தது. மூன்று நாட்களுக்குள் முப்பது ஆண்டுகள் கழிந்து விட்டவரைப் போலத் தோற்றமளித்தார் ராவ்சாகேப்.

"கோவிந்தா! கல் செதுக்கி விட்டாயா?" என்று கேட்டார் ராவ்சாகேப்.

கல்லில் ஓடிக் கொண்டிருந்த உளி சட்டென்று ஸ்தம்பித்து நின்றது. அவன் மௌனச் சிலையாக ராவ்சாகேப்பைப் பார்த்தான். அவர் குரலே அவரைக் காட்டிக் கொடுத்தது.

"இனி அந்தப் பெயர்க் கல் தேவையில்லை, கோவிந்தா!" வருத்தமே உருவான குரலில் கூறினார் ராவ்சாகேப்.

"ஏன்? என்ன விஷயம்?" என்று பரபரப்புடன் கேட்டான் கோவிந்தன்.

ஒரு நீண்ட பெருமூச்சுடன், "ஆனந்தன் இப்பொழுது இவ்வுலகில் இல்லை, அப்பா! நேற்று இரவு வாந்திபேதி ஏற்பட்டது. இன்று காலைப் பொழுதுக்குள் அவன் இறந்து விட்டான். ஆண்டவன் கொடுப்பது போல் கொடுத்து அவனைத் தன்னிடமே அழைத்துக் கொண்டு விட்டான். அதனால் 'ஆனந்த மஞ்சரி' என்று பெயர்ப் பலகை எழுதத் தேவையில்லை. 'கிருஷ்ண மந்திரம்' என்றே திரும்பவும் எழுதிக் கொடுத்து விடு!" என்று கூறினார்.


பிராயம் முதிர்ந்த ராவ்சாகேப் ராமாமிருதத்தின் கண்கள் நீரை உகுத்தன. கோவிந்தனுக்கு ஒரு கணம் உலகமே சுழல்வது போல் இருந்தது. ஆண்டவன் ஏன் இப்படியெல்லாம் விளையாடுகிறான்? புரியாத புதிராக இருக்கிறானே இந்த ஆண்டவன்? மனிதன் ஒன்று நினைக்க இந்த ஆண்டவன் வேறு ஒன்று நினைக்கிறானே!

இப்படி எண்ணியவாறே கோவிந்தன் எழுந்தான். அவன் கடையில் ஒரு மூலையில் உடைந்த கற்கள் பல கிடந்தன. அக் குவியலிலிருந்து அவன் தூசி படிந்த ஒரு கல்லை இழுத்து வெளியே எடுத்தான்.

"புதுக் கல் செதுக்குவானேன், எசமான்? தங்களுக்காக எழுதிய அதே பழைய கல் இதோ இருக்கிறது. இதையே துடைத்துத் தூசி நீக்கிப் பதித்து விடுங்களேன்!" என்றான் கோவிந்தன்.

கோவிந்தனே அன்று மாலை சென்று 'கிருஷ்ண மந்திரம்' என்னும் அந்தப் பழைய கல்லை வாசலில் பதித்து வந்தான்.


ஆண்டவனின் சிலை வியப்பும் குதூகலமும் நிரம்ப மௌனச் சிலையாகக் காட்சி தந்தது!



"தச்சு வேலையில் சிறந்தவன்" என்று அவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன்.
நான் பலவீனமடைந்து சரியாக வேலையே செய்ய முடியவில்லை. எங்கள் மேஸ்திரி தினமும் இரண்டு வேளை போர்ன்-விடா அருந்தச் சொன்னார்.
அவருடைய டாக்டரும் அதையே சொன்னாராம். நானும் அதைக் கடைப் பிடித்தேன். சக்தியும் பலமும் பெற்று ஊக்கத்துடன் வேலை செய்ய முடிந்தது.
இப்பொழுது அதிக வேலைகூட என்னால் செய்ய முடிகிறது.
எல்லாம் போர்ன்-விடா தந்த சக்தி.
Cadbury's
BOURN-VITA
THE IDEAL FOOD DRINK
MADE BY CADBURYS SPECIALISTS IN FOOD DRINKS FOR 100 YEARS
நான் இவ்வளவு திறமையாக வேலை செய்வதற்கு சக்தியளித்தது
Cadbury's
BOURN-VITA
சக்திக்கும் வலிமைக்கும்

சன்னாசியின் வாழ்க்கையில் அப்படி என்னதான் நேர்ந்து விட்டது? என்னவாவது? அது ரொம்பப் பெரிய விஷயம் சார்! ரொம்ப ரொம்பப் பெரிய விஷயம். மனிதனுடைய வாழ்க்கையில் துன்பங்கள் தொடர்ந்து இருக்கலாம். எல்லா நாட்களுமே அப்படி இருந்து விடுவதில்லை. ஒரு நாள் — ஏதோ ஒரே ஒரு நாள் அவன் மகிழ்வதற்காகவே படியும் ஒன்று நடக்கும் என்று அவன் கண்டதில்லை. கற்பித்துப் பார்த்துக் கொண்டதுமில்லை.

சன்னாசியின் 'உத்தியோகம்' இருக்கிறதே; அது இசக்கிமுத்து மேஸ்திரியின் ஆதிக்கத்துக்கு உட்பட்டது. சாக்கடையைவிட அதிகமாக நாறக்கூடிய மனத்தை இசக்கிமுத்து மேஸ்திரி என்கிற மனிதர் பெற்றிருந்தும் சன்னாசிப்



வந்து நேர்கிறது என்பதை நிச்சயமாய் நம்பித்தான் ஆக வேண்டியிருக்கிறது. இந்த விநாடியில் அப்படி நம்பினான் சன்னாசி. அவனைப் போன்றவனைத் தேடி வருகிற சாதாரண அதிர்ஷ்டமா அது?

காலையில் எழுந்திருந்து முதல் நாள் இரவு நினைவாகப் பாதியில் அணைத்துக் காதில் சொருகிக் கொண்டிருந்த அரைக் கட்டைப் பீடியை நாலு தம் உறிஞ்சி விட்டுத் தெருச் சாக்கடைகளின் பிரவாகத்தில் நனைந்து நனைந்து நாற்றத்தைத் தவிர வேறு குணங்களைக் கண்டறியாத அந்தக் காக்கி டிராயரை எடுத்து மாட்டிக் கொண்டு, 'எதற்காகப் பொழுது விடிந்தது?' என்ற அலட்சியத்தோடு அவன் சேரியிலிருந்து 'உத்தியோகத்துக்கு'ப் புறப்பட்ட போது கூட இப்படி ஓர் அதிர்ஷ்டத்தைத் தன் வழியில் எதிர்பார்க்கவில்லை. எதிர்பார்க்கவில்லையாவது? சொப்பனத்தில்கூட இப்




பயல் அவருடைய டிவிஷனில் உள்ள இரண்டு மெயின் ரோடுகளைச் சுத்தம் செய்ய முடிந்தது போல அவர் மனத்தைச் சுத்தம் செய்ய முடிந்ததில்லை. என்ன செய்யலாம்? அதற்கென்று யாரும் கார்ப்பொரேஷன் வைத்து நடத்தவில்லையே? அப்படி நடத்தினாலும் அது முடிகிற காரியம் இல்லை என்பது அவனுக்குத் தெரியும். வட்டம் வட்டமாகத் தெருவில் இரும்புத் தகடுகள் இட்டு மூடியிருக்கும் பாதாளச் சாக்கடைக் குழிகளில் இறங்கி இந்த உலகத்தின் அழுக்குகள் ஓடாமல் தேங்கி விடாதபடி ஒழுங்கு செய்வது போல் இசக்கிமுத்து மேஸ்திரியின் மனத்தில் உள்ள அழுக்குகளை அவனால் போக்கி விட முடியாதுதான்.

''மேஸ்திரி ரொம்பத் தொந்தரவு புடிச்ச மனுஷனுங்க. எங்க சம்பளத்திலே லஞ்சம். தோட்டிப் பொம்பளைகளிடத்தில் எத்தினி எத்தினியோ வம்பு. அத்தெ என் வாயாலே சொல்லப் படாது ஸாமி.....இந்தப் பட்டணத்திலே நெஜமா ஓடற சாக்கடை இந்த மேஸ்திரியோட மனசுதான்'' என்று எப்

பொழுதாவது சானிடரி இன்ஸ்பெக்டர் சூபர்வைஸர் போன்ற ஐயாமார்களிடம் 'ஸ்ட்ராங்காக'ச் சொல்லிவிட வேண்டுமென்று சன்னாசி பல நாட்கள் தவித்திருக்கிறான். ஆனால் அது வெறும் தவிப்புத்தான். காரியத்தில் ஒன்றும் நடந்ததில்லை.

''ஏண்டாலே! உனக்கென்ன பெரிய சினிமா ஸ்டாரின்னு நினைப்பாங்கறேன்?



தோட்டிப் பயலா லட்சணமாக வந்து நிக்கிறதில்லே. வா, வா, உன்னைக் கவனிக்கிறபடி கவனிக்கிறேன்'' என்று வயசுப் பெண்பிள்ளைகளான இளம் தோட்டிப் பெண்களுக்கு முன்னால் மேஸ்திரி தன்னை இறக்கிப் பேசிச் சிரிக்கிறபோதெல்லாம் 'கடவுளே! இந்த மனிதருடைய வாயிலே பிறக்கிற சாக்கடையை எப்படி அடைப்பது?' என்று சன்னாசி பலமுறை மனம் கொதித்திருக்கிறான். அந்தக் கொதிப்புக்கு இன்று விடிவு பிறந்து விட்டது.

சன்னாசி இனிமேல் அப்படிக் கொதிக்க வேண்டிய அவசியமில்லை. நாளைப் பொழுது விடிந்து 'அது நடந்ததும்' அவனுடைய ஸ்டேட்டஸ் அந்தச் சேரியில் மட்டுமில்லை — இசக்கிமுத்து மேஸ்திரியின் மனத்திலும் கூட உயர்ந்துதான் ஆக வேண்டும். சாதாரணமான விஷயமா என்ன அது?

சாக்கடை கழுவுகிற சன்னாசிக்கும் தன்மானம் உண்டு. இத்தனை பெரிய பட்டினத்தின் அழுக்கைக் கூசாமல் கழுவுகிறவனுக்குப் பெருமைப்பட உரிமையில்லையா என்ன? இந்த அழுக்கை உண்டாக்குகிற புண்ணியவான்கள் எல்லாம் பெருமையும் கௌரவமும் கொண்டாட முடியுமானால் இதை அருவருப்பில்லாமல் கழுவுகிற கர்மயோகி இன்னும் அதிகமான பெருமையும் கௌரவமும் படலாம்தானே?

''ஐயாவை என்னன்னு நினைச்சே? ஐயா பெருமை வீதியெல்லாம் கொடி கட்டிப் பறக்குமில்லே? நடு ரோட்டிலே

குச்சியை நிறுத்திச் சிவப்புத் துணியிலே 'ரோடு குளோஸ்டு'னு போர்டு மாட்டிக்கிட்டு அண்டர் கிரவுண்டிலே ஹாப் டிராயரோட புகுந்துட்டா அப்பறம் நாமதான் ராஜா....'' என்று யாருமில்லாத சமயத்தில் சேரிக் கிழவி குப்பச்சியிடம் சன்னாசி தற்சிறப்புப் பாயிரம் படிக்கிற வேளைகளில் அந்தத் தோட்டிக்கும் அசட்டுப் புகழாசை ஒன்று இருப்பது தெரிய வரும்.

இப்போது நிஜமாகவே அந்த அசட்டுப் புகழ் நிரூபணமாகப் போகிறது. தோட்டி சன்னாசிக்கு நல்ல உடம்பு. அகன்ற மார்பும் எடுப்பான தோள்களும் குண்டு முகமும் கருகரு வென்ற தலை முடியுமாக ஆள் ராஜா மாதிரி ஜம்மென் றிருப்பான். இந்த மாதிரி விஷயங்களுக்கு அங்கீகாரம் தருவதில் சேரியின் அதாரிடியான குப்பச்சிக் கிழவியே சொல்லியிருக்கிறாளே!

''போன பொறவியிலெ ராசாவாக இருந்திருப்பேடா என் தங்கம்'' என்று சன்னாசியைப் பார்க்கும்போது எல்லாம் கைவிரல்களைச் சொடுக்கித் திருஷ்டி முறித்திருக்கிறாள் அந்தக் கிழவி. அப்படித் திருஷ்டி கழிக்க அழகு வீண் போகுமா?

அந்த அதிர்ஷ்டம் அவனைத் தேடிக் கொண்டு வந்த போது சென்டிரல் ஸ்டேஷன் கடிகாரத்தில் பத்து மணி பதினைந்து நிமிஷம் ஆகியிருந்தது. அவனுடைய அதிர்ஷ்டம் அவனைத் தேடிக் கொண்டு வருகிற போது நடந்து வரவில்லை. காரில் வந்தது. கார் என்றால் அப்படி இப்படியா? கப்பலைப் போல் பெரிய கார் அது. அதில் வந்துதான் அந்த ஸினிமா டைரக்டர் அவனைப் பிடித்தார்.

சென்டிரல் ஸ்டேஷனுக்குப் பக்கத்தில் எங்கோ அண்டர் கிரவுண்டுச் சிக்கலைச் சரி செய்து விட்டுச் சாக்கடை தோண்டுகிற நீண்ட இரும்புத் துடுப்புக் கரண்டியும் தள்ளு வண்டியுமாக அவன் தன்னுடைய அழுக்குத் தேடும் யாத்திரையை நடத்திக் கொண்டிருந்த போது அதிர்ஷ்டம் அவனைத் தேடிக் கொண்டு காரில் வந்து சேர்ந்தது. கூட்டும் பூட்டுமாகக் காரில் இருந்து இறங்கிய நாலைந்து வாட்டசாட்டமான ஆட்கள் அவனை மடக்கிக் கொண்டனர்.

''ஒம் பேரென்ன?''

''சன்னாசிங்கோ.....''

''நீதானே இந்த வார்டுலே அண்டர் கிரவுண்டு சாக்கடை யெல்லாம் அள்ளுறே?''

''ஆமாங்கோ!''

''உன்னாலே ஒரு. காரியம் ஆகணும். அது உனக்கும் பெருமையைத் தரப்போகிற காரியம்தான்.''

''நா என்ன செய்யணும் ஸாமீ?''

''இப்ப நான் சொல்றதைக் கவனமாக் கேளு. நாங்கள்ளாம் சினிமாப் படம் புடிக்கிறவங்க. இப்ப நாங்க எடுத்திட்டிருக்கிற படத்திலே யதார்த்தமான வாழ்க்கையைச் சித்திரிக்கிறதாகச் சில காட்சிகள் இருக்கு. கதாநாயகியோட கை வளையல் அண்டர் கிரவுண்டு சாக்கடைக்குள்ளே தவறி விழுந்திடறதாகவும் ஹீரோ அவளுக்காக அதுக்குள்ளார இறங்கி அதைத் தேட்றதாகவும் ஒரு காட்சி இருக்கு. படத்திலே ஹீரோவா நடிக்கிற நடிகர் மணி நாவுக்கரசுக்குப் பதிலாக 'டம்மி' ஆளு ஒருத்தர் சாக்கடையிலே இறங்கறதாகத் தொலைவுக் காட்சியிலே படம் பிடிச்சிக்கலாம். காட்சி இயற்கையாத் தத்ரூபமா அமையணும்னுத் தெருச் சாக்கடையிலேயே படம் பிடிக்கணும். ஆனால் நடிகர்மணியைப் போல உள்ளவங்களை அப்படி யெல்லாம் கண்ட இடத்துக்கு அழைச்சிட்டு வந்து படம் பிடிக்க முடியாது. கூட்டம் கூடிடும்னு பயப்படுவார். அவரோட ஸ்டேட்டசுக்கு அது நல்லாவும் இருக்காது. ஹீரோயினோட சீனைப் பத்திக் கவலை இல்லே. ஹீரோ சாக்கடையிலே எறங்கறப்போ ஹீரோயின் நாலு அஞ்சடி தள்ளி நிற்கிறாப் போலப் படத்தைப் பிடிச்சிடலாம். அப்படி நிற்கிறதுக்கும் ஹீரோயினா நடிக்கிறவங்க சம்மதிச்சாச்சு. அவங்க புது நடிகை. சொன்னபடி ஒப்புத்துக்கிட்டாங்க. உனக்கு உயரம் முகத்தோற்றம் எல்லாம் ஏறக்குறைய நடிகர்மணியைப் போலவே இருக்கு. தலையை மட்டும் இன்னும் நல்லாக் கிராப் வெட்டி மேக் - அப் செய்துட்டாப் போதும். இதுக்கு நீ சம்மதிக்கணும். நாளைக் காலையிலே ஷூட்டிங் வைச்சுக்கலாம். ஒரு நிமிஷம் நீ காமிராவிலே தெரிஞ்சாப் போதும். மற்றதை எல்லாம் நாங்க கவனிச்சுக்குவோம்.....'' என்று விவரமாகக் கூற வேண்டியவற்றை யெல்லாம் கூறி விளக்கி விட்டு அவன் கையில் பத்துப் புதிய பத்து ரூபாய் நோட்டுக்களை எண்ணி வைத்தார் அவர்.

''இந்தக் காரியத்தைச் செய்யிறதுக்கு நூறு ரூபாயா?'' என்று மனத்தில் வியப்புடனே அந்தப் பணத்தைத் தன் அழுக்கடைந்த கையினால் வாங்கி டிராயர் பையில் வைத்துக் கொண்டு சன்னாசி அந்த சினிமா டைரக்டரை ஒரு கேள்வி கேட்டான்:

''ஹீரோ, ஹீரோயின் அப்படீன்னா என்னாங்க ஸாமீ?''

''அதுவா? ஹீரோன்னாக் கதாநாயகன். ஹீரோயின்னாக் கதாநாயகி. அதாவது அவனும் பொஞ்சாதி...''

''அப்பமன்னு இதுலே நான்தான் ஹீரோ! இல்லீங்களா?''

''ஆமாம். கொஞ்ச நாழிகைக்கு நீதான் ஹீரோ!''

''கொஞ்ச நாழிகைன்னாலும் ஹீரோ ஹீரோதானுங்களே?''

''சந்தேகமில்லாமல் ஹீரோதான்'' என்று சொல்லிச் சிரித்தார் டைரக்டர். அவனுடையகுழந்தைத்தனமான இந்தக் கேள்வி அவருக்குச் சிரிப்பு மூட்டிற்று.

''படத்துலே காத்தவராயன் மகன் சன்னாசின்னு எம் பேரைக் காமிப்பீங்களில்லே......?''

''பேர்லே என்னாருக்கு? வேணுமின்னாக் காமிச்சாப் போச்சு. நாளைக் காலையிலே ரெடியா இரு.'' மறு நாள் வருவதற்கு அவனுடைய சேரியின் இடத்தை அடையாளம் தெரிந்து கொண்டு டைரக்டர் முதலியவர்கள் புறப்பட்டார்கள்.

இதுதான் சன்னாசியின் வாழ்க்கையில் அன்று நடந்த பெரிய விஷயம். மறு நாள் விடிகிற வரை சேரியின் 'பிரமுகி'யான குப்பச்சிக் கிழவியிடம், ''ஆயா! உனக்குத் தெரியாது! கொஞ்ச நாழிண்ணாலும் ஹீரோ ஹீரோதான்'' என்று வாய்க்கு வாய் பெருமை பேசிப் பூரித்துக் கொண்டிருந்தான் சன்னாசி.

மறு நாள் விடிந்ததும் காலை ஏழு ஏழரை மணிக்கு ஸ்டுடியோ வான் வந்து சன்னாசியை அழைத்துக் கொண்டு போய் விட்டது. அவன் வேலை பார்த்த வார்டில் அவனுக்குப் பழக்கமான ஒரு பொது இடத்திலேயே அந்த ஷூட்டிங்குக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். ''அண்டர் கிரவுண்டுக்குள் இறங்கிச் சாக்கடை நீரில் நனைந்த கோலத்தோடு மேலே எழுந்தபின் இதோ இந்த இடத்திலே இவங்க நிற்கிற பக்கமாகச் சிரிச்சபடி ஒரு தடவை திரும்பிப் பார்க்கணும் நீ'' என்று கதாநாயகியாக நடிக்கும் நடிகையை வட்டச் சாக்கடைக் குழிக்கருகே ஓரிடத்தில் நிறுத்தி விட்டுச் சன்னாசிக்குச் சொன்னார் டைரக்டர்.

''இவங்கதான் ஹீரோயினா?'' என்று கொஞ்சம் அதிகப் பிரசங்கித்தனமாகவே டைரக்டரை ஒரு கேள்வி கேட்டான் சன்னாசி. அவனுடைய இந்தக் கேள்வியைச் செவியுற்று அந்த நடிகை அருவருப்படைந்து முகத்தைச் சுளித்தாள். டைரக்டருக்கும் அந்தக் கேள்வி எரிச்சலைத்தான் மூட்டியது. ஆனாலும் காரியம் நடக்க வேண்டும் என்பதில் கண்ணாக இருந்த அவர் பொறுமையைக் கடைப்பிடித்தார். தரையில் சாக்கடையருகே நிற்கக் கூசிக்

L. R. Swami

கொண்டே நிற்பதுபோல் செருப்பணிந்த கால்களோடு அருவருப்புடனே ஒதுங்கி ஒதுங்கி நின்றாள் ஹீரோயின்.

ஆனால் ஹீரோவோ தினம் தொழிலுக்காகத் தான் மூழ்குகிற வழக்கமான சாக்கடையை அன்றைக்குப் பன்னீர்க் குளமாக நினைத்துக் கொண்டு மிகுந்த உற்சாகத்தோடு மூழ்கி எழுந்தான்.

சீன் மூடிக் கண் திறக்கிற நேரத்தில் அந்தப் படப் பிடிப்பு முடிந்து விட்டது. ஹீரோ சன்னாசி தோட்டி சன்னாசியாக மாறி விட்டான். அந்த ஒரு கணத்துக் கனவும் மெல்லக் கலைந்து போயிற்று. வந்திருந்தவர்கள் எல்லாரும் ஸ்டுடியோ வானில் பறந்து கொண்டு போய்விட்டார்கள். சன்னாசி சாக்கடை நீரில் மூழ்கி யெழுந்த கோலத்தில் தெருவில் தனியாக நின்று கொண்டிருந்தான். புது நடிகையை வேடிக்கை பார்க்கக் கூடியிருந்த கூட்டமும் அவள் போனதும் கலைந்து விட்டது.

ஏதோ நினைவு வந்தவனைச் சன்னாசி சென்டிரல் ஸ்டேஷன் கடிகாரத்தைப் பார்த்தான். மணி எட்டரைக்கு மேல் ஆகியிருந்தது. ஏழரை மணிக்கு இசக்கிமுத்து மேஸ்திரியிடம் ஆஜர் கொடுக்க வேண்டும்.

''இன்றைக்குக் கொஞ்சம் லேட்டாகத்தான் ஆஜர் கொடுப்போமே! இந்த இசக்கிமுத்து மேஸ்திரி என்ன பெரிய ஹீரோவோ?'' என்று துணிச்சலாக நினைத்துக் கொண்டே போகிற போக்கில் டைரக்டர் அவன் பக்கமாக வீசி எறிந்துவிட்டுப் போயிருந்த உயர் தர சிகரெட் பெட்டியில் ஒன்றை உருவிப் புகைக்கத் தொடங்கினான். அந்தச் சுகத்தில் நேரம் போனதே தெரியவில்லை. அன்று வேலைக்கு மட்டம் போட்டாயிற்று. அந்தச் சினிமா டைரக்டரைப் போலச் சூட்டும், பூட்டும் போட்டுக் கொள்ள வேண்டும் என்று சன்னாசிக்கு ஆசையாயிருந்தது. கிடைத்திருந்த பணத்தில் எழுபது எண்பது ரூபாய் வரை செலவழித்து அப்படி இரண்டு ஜோடி உடுப்பு ரெடிமேடாக வாங்கிச் சேரியில் கொண்டு போய்க் குடிசையின் பெட்டியில் இரகசியமாக வைத்துப் பூட்டினான். டாக்ஸியில் ஏறிச் சுற்ற வேண்டும் என்றும் அவனுக்கு ஓர் ஆசை வெகு நாட்களாக உண்டு. இரவில் அந்த 'டைரக்டர் உடுப்பை' அணிந்துகொண்டு டாக்ஸியிலே ஏறிப் போய் மாடியில் பெரிய கிளாஸ் டிக்கெட் வாங்கி இரண்டாம் ஆட்டம் சினிமாவும் பார்த்தான் சன்னாசி. அதற்குமுன் புஹாரியில் போய் வயிறு புடைக்கச் சாப்பிட்டிருந்ததில் ஆன செலவும் அதிகம்தான். இரண்டு மூன்று நாட்கள் இப்படி ஒரு ஹீரோ மிதப்பில் எல்லாம் பரம சுகமாகக் கழிந்தது.

கையிலிருந்த பணமும், மனத்திலிருந்த ஹீரோ கனமும் கரைய இந்த மூன்று நாள் வேண்டியிருந்தது சன்னாசிக்கு. நான்காம் நாள் எட்டு மணிக்கு எழுந்து முதல் நாள் ஞாபகமாகப் பாதியில் அணைத்து வைத்திருந்த சிகரெட்டைப் புகைத்துக்-கொண்டே 'எதற்காக இந்தப் பொழுது விடிந்தது?' என்ற அலட்சியத்தோடு இசக்கிமுத்து மேஸ்திரியிடம் ஆஜர் கொடுக்கப் போனான் சன்னாசி.

''ஏண்டாலே! உனக்கென்ன பெரிய சினிமா ஷ்டாரின்னு நினைப்பாங்கறேன்? தோட்டிப் பயலா லட்சணமா....?'' என்று வழக்கம் போல் மேஸ்திரி ஆரம்பித்தபோது எல்லா நாளும் போல இன்று அவனால் அதைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

''சர்த்தான், நிறுத்து சார்... நான் சினிமா ஷ்டாரில்லாட்டா நீயா ஷ்டாரு?'' என்று பதிலுக்குப் பேசிவிட்டான் சன்னாசி. இசக்கிமுத்து மேஸ்திரி அந்த ஹீரோவுக்கு வில்லனானார். ஹீரோவின் கை வீழ்ந்துவிட்டது.

'ஸீரியஸ் மிஸ் காண்டக்ட்' என்று ஒரே வரி ரிப்போர்ட் எழுதிக் கொண்டு அவனை வீட்டுக்கு அனுப்பி வைத்துவிட்டார் இசக்கிமுத்து மேஸ்திரி. சன்னாசிக்கு வேலை போய் விட்டது. 'வேலை போனால் என்ன? இதென்ன பெரிய வேலை.....?'

சேரிக்குத் திரும்பி வந்து அவன் குப்பச்சிக் கிழவியிடம் சொல்லிக் கொண்டிருந்தான்

''ஆயா! இவனுக என்னமோன்னு நினைச்சுக்கிட்டிருக்காங்க.... கொஞ்ச நாளின்னாலும் ஹீரோ ஹீரோதான்... அந்தப் பயாஸ்கோப்பு ரீலாகி வரப் போவுது பாரு. அதுலே காத்தவராயன் மகன் சன்னாசின்னு எம் பேரு காமிப்பாங்க. அப்ப தெரியும் எம் பெருமை...''

''நீ ராசாவாப் பொறந்திருக்கணும்டா என் தங்கமே'' என்று குப்பச்சிக் கிழவி அந்த ஹீரோவைத் தன் வழக்கமான வார்த்தைகளில் வாழ்த்தினாள். இன்னும் அரை மணி நேரம் வரை அந்த ஹீரோவுக்கு ஒரு கவலையும் இல்லை. ஏனென்றால் காதில் அரைக் கட்டை பீடித் துண்டு ஒன்று 'ஸ்டாக்' இருந்தது.

'கொஞ்ச நாளின்னாலும் ஹீரோ ஹீரோதானே?' இல்லையா, பின்னே?



குமுதா எம். ஏ.

ஒரு நாவல் என்றால், தூக்க முடியாத அளவில்தான் இருக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை; அரிச்சுவடிப் புத்தக அளவில் அறுபது பக்கங்களுக்குள் ஒரு முழு நாவலைத் தீட்டி விடலாம் என்பதை இதன் ஆசிரியர் திரு வி. ஆர். எம். செட்டியார் பி. ஏ. நிரூபித்திருக்கிறார். ராஜதானிக் கல்லூரியில் குமுதா என்ற ஒரு மாணவி. அவளுக்குக் கல்லூரி ஆசிரியர் ஒருவர்மீது காதல் ஏற்பட்டு விட்டது. ஆசிரியரின் மனைவி அமுதா ஊரிலே இல்லாத சமயம் பார்த்து ஏதோ சந்தேகம் கேட்கப் போவதுபோல் அவர் வீட்டுக்குக் குமுதா போகிறாள். பணக்கார மாணவி குமுதா அந்த ஆசிரியக் காதலனையே மணம் புரிந்து கொள்கிறாள். குமுதாவுடன் அமுதாவும் குதூகலமாகவே வாழ்க்கை நடத்துகிறாள். குமுதாவுக்கும், ஆசிரியருக்கும் குழந்தை பிறக்கிறது. மூவருமாகக் குழந்தையின் எதிர்காலம் பற்றிய திட்டம் போடுகிறார்கள். "ஒரு மதிப்புள்ள மாணவியோ, பொறுப்புள்ள ஆசிரியரோ இப்படி யெல்லாம் செய்வார்களா?" என்று யாராவது கேட்டால்....போயே போச்சு!

பிரசுரம்: ஸ்டார் பிரசுரம், 5, புதுச் சந்தை வீதி, காரைக்குடி. விலை: 1 00.

பனிக் கண்டம்

தென் துருவ அதிசயங்களையும் அங்கு ஆராயச் சென்றவர்களையும் அவர்களது திடுக்கிடும் அனுபவங்களையும் குறித்து ஆங்கிலத்தில் பலப்பல நூல்கள் வெளியாகி யிருக்கின்றன. அவற்றில் திரு வால்டர் சலிவன் என்பார் எழுதிய நூலின் மொழிபெயர்ப்பு இந்நூல். நம்முடைய பூமி அமைப்பு விந்தைகளில் தென் துருவ பனிக் கண்டமும் ஒன்று. இங்குள்ள பனிப் பாறைகள் மட்டும் சிறிது உருகினாலும் கூட வேறு வினையே வேண்டாம். கடல் நீரின் மட்ட அளவு அதிகரித்து இன்று பூமியில் நாம் வாழும் தரைப் பகுதிகள் அனைத்தும் தண்ணீரில் மூழ்கி விடும்! இந்தப் பகுதியில் சூரியன் உக்கிரமாகத் தாக்காமல் இருப்பது பூமியில் உள்ளவர்கள் மீது இரக்கம் கொண்டு கடவுள் செய்திருக்கும் முன்னேற்பாடு. தென் துருவப் பனிக் கண்டத்தில் அமெரிக்கா, ரஷ்யா இரு வல்லரசுகளும் இப்போது தங்கள் கவனத்தை அதிகமாகச் செலுத்தத் தொடங்கி யிருக்கின்றன. ஆனால், பனிக் கண்டத்தைப் பற்றி அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டியது எவ்வளவு முக்கியமானது என்பதை இந்நூலிலிருந்து நாம் தெரிந்து கொள்ளலாம்.

பனிக் கண்டத்தின் அமைப்பு, அதன் தட்ப வெப்ப மாறுதல்கள், இயற்கைச் சூழ்நிலை, அங்கு வாழும் அபூர்வமான உயிரினங்கள் இவை பற்றிய விவரங்கள் இந்நூலில் பொதிந்துள்ளன. திரு எம். செல்லப்பன் அவர்களின் எளிய தமிழ் நடையை முக்கியமாகப் பாராட்ட வேண்டும்.

மொத்தம் இருநூற்று எண்பதுக்கு மேல் பக்கங்கள் கொண்ட இந்நூலில் ஒரு பெரிய குறை மட்டும் இருக்கிறது. பனிக் கண்டத்தை விளக்கும் தேசப் படம் ஒன்று கூடப் பிரசுரிக்கப்படவில்லை. இதர படங்களும் இல்லை. இந்தக் குறையை மறு பதிப்புகளில் போக்கி வைப்பார்கள் என்று நம்புகிறோம்.

ஆசிரியர்: வால்டர் சலிவன், கிடைக்குமிடம்: பழனியப்பா பிரதர்ஸ், சேப்பாக்கம், சென்னை - 5: விலை: ரூ. 2. 75.

கவிஞர் ரவீந்திரநாத டாகுர்

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தார் இந்த வெளியீட்டைக் கொணர்ந்திருக்கிறார்கள். கவி அவர்களின் பிறப்பு, வளர்ப்பு, அவரது சாதனைகள், அவர் அமைத்த சாந்தி நிகேதனத்தின் சிறப்புக்கள் பற்றிய குறிப்புக்களை முறையாக இந்நூலில் தொகுத்து அளித்திருக்கிறார்கள்.

பன்மொழிப் புலவர் திரு தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் அவர்கள் பணியால் இந்நூல் வெளியாகியிருக்கிறதென்றால், சொற்சுவை, பொருட் சுவைக்கு விளக்கங்கள் தேவையில்லை. புத்தகத்தில் எந்த இடத்தைப் பிரித்துப் படித்தாலும் சுவை சொட்டுகிறது. விறுவிறுப்பு காணப்படுவது ஒன்றே நூலின் கடைசி வரை சிறப்புக்கு நமது அணிந்துரையாகும். நிறையப் புகைப்படங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. முத்துக் கோத்ததுபோன்ற தமிழ் நடையில் இந்த நூலே, கவிஞருக்குச் சாத்தும் ஒரு தமிழ் மாலை போன்று விளங்குகிறது. நூலில் விலை குறிப்பிடப்படவில்லை.

வெளியீடு: அண்ணாமலைப் பல்கலைக்கழகம்; அண்ணாமலை நகர், சிதம்பரம்.

தமிழ் எழுத்தாளர். யார் - எவர் ?

பிரபல தமிழ் எழுத்தாளர்கள் பலர் புனைபெயரோடு விளங்குவதால் அவர்களின் உண்மைப் பெயரும் வரலாறும் அறிய முடியாமல் வாசகர்கள் தவிப்பது வழக்கம். புனைபெயர்களில் ஒளிந்து நிற்கும் எழுத்தாளர்கள் தான் அப்படி யென்றால் முழுப் பெயருடன் எழுதிவரும் ஆசிரியர்களைப் பற்றிய விவரங்களும் திட்டமாகத் தெரிவதில்லை. இந்தக் குறையைப் போக்கி வைக்கும் முயற்சியில் தான் இந்நூல் வெளியிடப்பட் டிருக்கிறது. அகர வரிசையில் எழுத்தாளர்கள் குறைந்தது ஒரு புத்தகமாவது வெளியிட்டிருக்கிறார்களா என்று கணக்கிட்டு 563 எழுத்தாள நண்பர்

களின் விவரக் குறிப்புகள் இந்நூலில் இடம் பெற்றிருக்கின்றன.

அடுத்த பதிப்பு இன்னும் விரிவாக, இதில் சேர்க்க விட்டுப் போன எழுத்தாளர்களின் விவரங்களுடன் வெளியாகும் என்று பிரசுரகர்த்தர்கள் அறிவித்திருக்கிறார்கள். இதனால் இந்தப் பதிப்பின் முக்கியத்துவம் எந்த விதத்திலும் குறைந்துவிடவில்லை. தமிழகத்துக்கு அவசியம் தேவையான நூல்களில் இதுவும் ஒன்று.

வெளியீடு: தென் மொழி புத்தக டிரஸ்டு, 25, ஸ்டர்லிங் ரோடு, சென்னை - 34; விலை: ஒரு ரூபாய்.

பம்பாய்க் குடித்தனம்

பம்பாயில் வாழும் தமிழர் குடும்பங்கள் எந்நிலையில் இருக்கின்றன என்பதைப் படம் பிடித்துக் காட்டுகிறது இக்கதை. மணமான பிறகு மனைவியுடன் வெளியூர் சென்று தனிக் குடித்தனம் செய்வதிலுள்ள ருசியான அம்சங்களைக் காண முடிகிறது. உத்தியோகத்தில் உள்ள பிரம்மசாரிகள் ஓர் இடத்தில் இருந்து கொண்டு சீட்டாடுவதும், வம்பளப்பதும் தத்ரூபமாயிருக்கின்றன. பம்பாயில் தனிக்குடித்தனம் செய்யப் போன கமலியின் சமர்த்து, கதை முழுதும் பரவிப் பரிமளிக்கிறது. புதிதாக, துணையில்லாமல் நெடுந்தூரம் ரயில் பிரயாணம் செய்யும் ஓர் இளம் பெண்ணின் மனப்போக்கு சித்திரமாகக் கதையில் படிந்து விட்டது. ருசியை அதிகப்படுத்த வேண்டும் என்பதற்காக ரஸக் குறைவான சம்பவங்களையோ, அர்த்தமற்ற திடுக்கிடும் நிகழ்ச்சிகளையோ மருந்துக்குக்கூட ஆசிரியர் சேர்க்கவில்லை. சிவராமனையும், அவனது அன்பு மனைவி கமலியையும் திருமணத்துக்குப் பிறகு தனிக் குடித்தனத்தின் மூலம் ஆசிரியர் ஒன்று சேர்க்கும் அழகே அழகு. பெரும் கதையென்றால் சாதாரணமாக ஒரு குணக்கேடனாவது தோன்றி நல்லவர்களுக்கு இடுக்கண் விளைப்பான். ஆனால் இந்தக் கதையில் குணக்கேடனே இல்லை. அதுவே இந்நூலுக்கு ஒரு வகை வெற்றியாகும்.

ஆசிரியர்: துமிலன்; பிரசுரம்: இன்ப நிலையம், மயிலாப்பூர், சென்னை-4; விலை: ரூ. 2.

காந்திய உலகம்
முதலிய விஞ்ஞானக் கதைகள்

இந்தத் தொகுதியில் உள்ள மூன்று கதைகளும் விஞ்ஞான அடிப்படையில் எழுந்தவை. மூன்றும் மூன்று விதமான கோணங்களில் மூன்று அமெரிக்க ஆசிரியர்களால் எழுதப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு கதையும் சிந்தனைக்கு விருந்தாய் விளங்குகிறது.

ஆயுத பலமும், அடக்குமுறைத் திட்டங்களும், பலவந்தமாகத் திணிக்கப்படும் புதுக் கொள்கைகளும், வியப்பூட்டும் விஞ்ஞான சாதனங்களும் காந்தியத் தத்துவத்தை என்றுமே வெல்ல முடியாது என்பது ''காந்திய உலகம்'' என்னும் கதையின் மூலம் மிகத் தெளிவாக விளங்குகிறது.

நாளொரு ஆராய்ச்சியும் பொழுதொரு சாதனையுமாகத் துரிதமாக வளர்ந்து வரும் விஞ்ஞானத்தின் உதவியைக் கொண்டு புதிய மண்டலங்களையே படைத்துவிடலாம். ஆனால் கால வெள்ளத்தில் அவை அழிந்து விடாமல் பாதுகாக்க எந்த விஞ்ஞானியாலும் எந்த ஆராய்ச்சியாலும் முடியாது. ''பயங்கர ஆராய்ச்சி'' என்னும் கதை மேற்படி அழிவுக்குக் காரணமாக ஒரு தனிச் சக்தி இருப்பதை நினைவூட்டி யாவரையும் ஒப்புக்கொள்ளச் செய்கிறது.

மானிட இனத்துக்கு இயற்கையாகவே விஞ்ஞான அறிவு இருப்பதைப் பிரமிப்பு உண்டாக்கும் விதத்தில் எடுத்துக் காட்டும் கதை ''வாலிப மேதை''.

ஆனால் இந்தக் கதைகளின் தமிழாக்கம் நல்ல முறையில் அமைந்திருக்கலாம். வார்த்தைக்கு வார்த்தை மொழிபெயர்ப்பாக இல்லாமல், கதைகளின் கருவூலத்தை மனத்தில் வாங்கிக் கொண்டு தமிழில் எழுதியிருந்தால் இன்னும் நன்றாயிருந்திருக்கும். தமிழாக்கம்: கே. வி. ராமச்சந்திரன்; பிரசுரம்: அருணோதயம், ராயப்பேட்டை, சென்னை-14: விலை: 1-90.

சிறுகதைக் கோவை

முத்து, பவழம், மரகதம், வைரம், மாணிக்கம் முதலிய பல்வேறு நிறங்களையும் ஒளியையும் கொண்ட விலை மதிக்க முடியாத நவரத்தினக் கோவை என்று இந்நூலைச் சொல்லலாம். வெவ்வேறு ஆசிரியர்களின் பல்சுவைக் கதைகள் பதின்மூன்று இந்நூலில் இருக்கின்றன.

மனத்தின் அடித்தளத்தில் படிந்து சதா இனித்துக் கொண்டிருக்கும் கதையைக் கூற வேண்டுமானால் நா. பார்த்தசாரதியின் 'வேப்பம் பழ'த்தைக் கூற வேண்டும். சுந்தரராமசாமியின் ''பிரசாதம்'' என்ற கதை அபூர்வப் படைப்பு. ஒரு போலீஸ்காரரையும், கோவில் அர்ச்சகரையும் வைத்துக் கொண்டு அற்புதமானதோர் உணர்ச்சிச் சித்திரத்தைத் தீட்டியிருக்கிறார். ஏ. எஸ். ராகவனின் ''தெளிவு'' என்ற கதை தாம்பத்திய வாழ்வின் இனிப்பையும் கசப்பையும் கலவையாக எடுத்துக் கூறுகிறது. பூர்ணம் விசுவநாதனின் ''மறுமணம்'' முற்றிலும் புதிய தத்துவத்தை வெளிப்படுத்துகிறது. பல்லாண்டுகள் பிரிந்து நின்ற சதிபதிகளின் வாழ்வில் கடைசியில் தோன்றிய ஒளி புதுமையாக இருக்கிறது. வாசவனின் ''சிதைந்த கூடு'' உண்மையில் ஒரு கண்ணீர்க் குளம்; அருமை மகளை இழந்து அல்லலுற்று ஆற்றாது அழுத ஒரு தந்தையின் கண்ணீரைத்தான் வாசவன் சிறுகதையாக்கித் தந்திருக்கிறார். வேங்கடலட்சுமியின் 'புதிர்' சோகத்தை மறைத்துக் குழந்தை உள்ளத்தைக் காட்டி வாசகர்களை உலுக்கி விடுகிறது. இம்மாதிரியே மற்றக் கதைகளும் குன்றாத சுவையுடன் விளங்குகின்றன.

பிரசுரம்: எஸ். ஆர். சுப்பிரமணியபிள்ளை, புத்தக வெளியீட்டோர்; திருநெல்வேலி; விலை: ரூ. 1 50.

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor, T. Sadasivam.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

